SOUVENIR

IN APPRECIATION OF

THE INIMITABLE VIOLIN TECHNIQUE

OF

MARUNGAPURI SAMASTHANA VIDWAN

Sri M. G. GOPALAKRISHNA IYER

SOUVENIR

IN APPRECIATION OF

THE INIMITABLE VIOLIN TECHNIQUE

OF

VIDWAN MARUNGAPURI GOPALAKRISHNA IYER

PRESENTED BY

THE COMMITTEE OF HOSTS

ON 7—9—1941

AT SRIRANGAM

PRINTED AT

JEGAM & CO., DODSON PRESS

TEPPAKULAM, TRICHY

CONTENTS

	Page
Committee of Hosts	iv
Introduction	v
Sri Rama Dharsan	vi
Srimukam from H. H. Sri Jagathguru Sankaracharíar of Kanchi Kamakoti Peetam, Kumbakonam	vii
Messages :—	
Rajah Sir Annamalai Chettiar of Chettinad	viii
The Rajah of Ramnad	viii
George S. Arundale	ix
C. V. Narasimhan, I. C. S., ...	ix
முகவுரை (*by* Seithur Zamindar)	xi
Early Life Sketch of Marungapuri Samasthana Vidwan Gopalakrishna Iyer *by* Y. Mahalinga Sastri, M.A.,B.L., Annamalai University.	1

Appreciations :—

	Page
Sangeetha Ratnakara, Ariyakudi Ramanuja Iyengar.	3
Tiger K. Varadachariar, Annamalai University.	4
Gayanapatu Keerthanpatu Srimathi C. Saraswathi Bai.	6
Vidwan Chittoor Subramanya Pillai.	10
Mahamahopadyaya Dr. V. Swaminatha Iyer.	12
Vidwan Chembai Vaidyanatha Bagavathar.	,,
Sangeetha Bhoopathi Maharajapuram R. Viswanatha Iyer.	,,
Travancore Samasthana Vidwan Musiri Subramaniya Iyer.	13
Sri T. K. Chidambaranatha Mudaliyar, B.A., B.L.	,,
Tiruppampuram Flute T. N. Swaminatha Pillai.	14
Vidwan Madura Mani Iyer.	15
Prof. R. Srinivasan, M.A., Trivandrum.	,,
Travancore Samasthana Vidwan G. N. Balasubramaniyan.	16
Travancore Samasthana Vidwan Rajamanickam Pillai, Violinist.	17
Prof. P. Sambamurthi University of Madras.	,,

Appreciations (*continued*)

	Page
Travancore Samasthana Vidwan Semmangudi Srinivasa Iyer.	18
Gana Sagara Mudikondan Venkatarama Iyer.	19
Sri R. Nagaraja Rao, Flutist.	20
Vidwan P. R. Sivan.	,,
Mysore Asthana Vidwan Chikka Rama Rao.	22
Vidwan B. S. Krishnamurthi Sastrigal.	23
Sri D. Annaswami Baghavathar.	,,
Vidwan Parur Sundaram Iyer, Violinist.	24
Vidwan Palghat Rama Bagavathar.	,,
Veena K. S. Narayanaswami Iyer.	25
Sangeetha Bushanam T.K. Rengachari.	,,
Erode Viswanatha Iyer, Violinist.	26
V. Rajaram Iyer, Violinist.	,,
Seithur Sundaresa Battar, Violinist.	28
Thiruvizimizhalai Brothers.	29
Trichy Brothers.	30
Golden Rock Music Union.	31
Palani Muthia Pillai, Mridangam.	32
M. Padmanabha Rao, B. A.,	32
Sri Venkataramana Baghavathar.	33
Sangeetha Samrakshana Sabha, Madura.	34
Sri Saraswathi Gana Sabha, Coconada.	35
Sangeetha Abivridhi Sabha, Coimbatore.	35
Jagannadha Bhaktha Sabha, Egmore.	36
Sri Krishna Gana Sabha, Hyderabad.	,,
Rasika Ranjana Sabha & Krishna Gana Sabha, Trichy.	37
Venuganam Palladam Sanjeevi Rao.	39
Mysore Asthana Vidwan T. Chowdiah, Violinist.	,,
Vidwan K. Ponniah Pillai.	40
Vidwan T. K. Jayarama Iyer, Violinist.	,,
L.K.V.C. S. Vadiraja Bhagavathar, B.A.	41
Sri P. K. Krishna Rao, Homoeopath.	42
Sri M. S. Narayanaswamy Ayyar, District Munsif.	43
Sri R. Srinivasa Iyer, B.A., B.L.	45
Sri M. S. Param.	,,
Sri A. AL. Chokkalinga Chettiar.	46
Sri A. R. S. Ratnam B.A., (London,)	47
Rao Sahib T. D. Narayana Iyer, B. A.	,,
Sri G. Sivaramakrishna Iyer.	48
Rao Sahib T. G. Krishna Iyer.	,,
Sri V. Sundaram Aiyer, B.A., B.L.	49
Sri P. A. Chidambaram Aiyar,	,,
Rao Sahib G. Rajagopal Pillai.	51

Speeches at Srirangam Meeting taken from the *Hindu* dated 10—9—41 51

Proceedings of the meeting taken from the *Trichy News* dated 10—9—41 54

வந்தனோபசாரம் 56

Erratta 60

COMMITTEE OF HOSTS

1. The Zamindar of Seithur
2. The Zamindarini of Marungapuri
3. Rao Saheb K. Kandasamy Odayar
4. Sangeetha Ratnakara Ariyakudi Ramanuja Iyengar
5. J. Loomchand Sait
6. K Vasudevan
7. V. Seshasayee
8. Rao Saheb K. E. Chidambaram Iyer
9. Pr. Rm. Mr. Rm. Ramanathan Chettiar
10. Dr. P. K. Vasudeva Rao
11. Rao Bahadur N. Ramasamy Iyer
12. Dewan Bahadur K. S. Ramasamy Sastrigal
13. F. G. Natesa Iyer
14. S. K. Mathrubutham Iyer
15. Sangeetha Vidwan Chittoor Subramanya Pillai
16. K. Chinnasamy Odayar
17. K. Srinivasan
18. Dr. P. K. Krishna Rao (Homœo)
19. Dewan Bahadur S. Rm. Ct. Sabarathnam Chettiar
20. A. Al. Chokkalinga Chettiar
21. S. R. V. Thatham
22. Rao Saheb G. Rajagopal Pillai



Sri M. G. GOPALAKRISHNA IYER,
American Phone Violin presented by
Gayana Patu Kirtana Patu Srimathi Saraswathi Bai

INTRODUCTION

I have great pleasure in presenting to my readers this small volume as a Souvenir on this happy occasion of presenting this to our Marungapuri Samasthana Vidwan Sri M. G. Gopalakrishna Iyer of Violin fame, in appreciation of his musical talents.

The Souvenir consists of a brief life sketch of Marungapuri Sri Gopalakrishna Iyer, a Srimukham from H. H. Sri Jagathguru Sankaracharíar of Kamakoti Peetam, Kumbakonam, messages of good-wishes from Rajah Sir Annamalai Chettiyar of Chettinad, The Rajah of Ramnad, Dr. G. S. Arundale, Adayar and Sri C. V. Narasimhan, I. C. S., Sub Collector, Dindigul; appreciations from musicians, music lovers, other respectable gentlemen, musical societies, and, the proceedings of the meeting. My thanks are due to those sincere ladies and gentlemen who were kind enough to present me the portraits appropriate to the occasion and also the appreciations sent by the musicians and music lovers in accordance with my request.

I deem it a great pleasure to be entrusted with the preparation of this task of bringing out this small volume, by the Souvenir Committee.

Srinivas Mandir,
Srirangam,
7—9—1941.

P. K. VASUDEVA RAO,
Convenor,
Souvenir Committee.

௳

Sri Ramajayam

Sri RAMA DHARSAN

Srimukam from
H. H. Sri Jagathguru Sankarachariar of
Kanchi Kamakoti Peetam, Kumbakonam.

॥ श्रीः ॥

श्रीमत्परमहंस परिव्राजकाचार्यवर्य
श्रीमच्छंकरभगवत्पाद प्रतिष्ठित
श्रीकाञ्ची कामकोटिपीठाधिप जगद्गुरु
श्रीमच्चन्द्रशेखरेन्द्रसरस्वती श्रीपादैः

अस्मदत्यन्तप्रियशिष्य मरुङ्गापुरिग्रामाभिजनगोपालकृष्णार्यविषये सर्वाभीष्टसिद्ध्यैक्रियते नारायणस्मृतिः ॥

भवतो नादानुभवसारवित्तानुरूपवाद्यवादननैपुण्यविषये सन्तुष्टान्तरङ्गा वयं भवान् श्रीचन्द्रमौळीशकृपया वाद्यकलायामुपर्युपर्यभिवर्धमानो विपुलं यशः श्रेयांसि चावाप्नुयादित्याशास्महे ॥

प्रकृतनिवासस्थानम् नागपट्टणम्
वृषनामसं० भाद्रपद शु० ९ ॥

नारायणस्मृतिः ॥

RAJAH SIR ANNAMALI CHETTIAR
OF CHETTINAD

Chettinad House,
Adayar, Madras.

Message

Dear Sir,

I thank you for your letter of the 2nd instant and the invitation to be present on the occasion of the presentation of a Souvenir to Marungapuri Samasthana Vidvan Gopalakrishna Ayyar Avergal. I am glad that the Committee are presnting him with a Souvenir in recognition of his merits as a violinist. Much as I would like to give myself the pleasure of being present on the occasion I am afraid I may not be able to attend. My best wishes for the success of the function.

Yours sincerely,

(*Sd.*) *Annamalai Chettiar.*

THE RAJAH OF RAMNAD

Palace, Ramnad.

Message

The Rajah of Ramnad thanks the Committee of Hosts for the presentation of a Souvenir to Marungapuri Vidwan Sri Gopalakrishna Iyer, for their kind invitation for the function on Sunday the 7th Sept., 41, at Srirangam. He regrets his inability to attend the function. He offers his very best wishes for all success for the function.

GEORGE S. ARUNDALE Adayar, Madras.

Message

Dr. George S. Arundale is much obliged to the Committee of Hosts for their kind invitation for him to be present at the presentation of A Souvenir to Marungapuri Samasthana Vidwan Sri Gopalakrishna Iyer on Sunday the 7th of September. But he is unable to accept because he will be engaged in a number of observances at Adyar on that day in connection with the National Day of Prayer.

C. V. NARASIMHAN, I.C.S., Dindigul,
Sub-Collector. Camp: Palani.

Message

Gentlemen,

I am much obliged to you for your kind invitation to to be present at Srirangam on 7—9—41 on the occasion of the presentation of a Souvenir to Sangeetha Vidwan Sri Marungapuri Gopalakrishna Iyer. I am so sorry I will not be able to be present. But I send my congratulations on your idea of presenting a Souvenir to one who can well claim to be the genius of existing Violin Vidwans. I send my best wishes to Marungapuri Gopalakrishna Iyer on this auspicious occasion.

Yours Sincerely,

(Sd.) C. V. Narasimhan.

THE ZEMINDAR OF SEITHUR

முகவுரை.

உலகம் நன்கு விரும்பத்தக்க முத்தமிழ் உணர்ச்சியிற் சிறந்த பேராற்றல் படைத்த மூதறிவாளர்முன் யாம் ஒருவாறு சிறிது விழம்பு மாற்றம்.

முத்தமிழ் என்பன - இயல் - இசை - நாடகம் ஆம்; அவற்றுள் இசை ஆவது ஐவகைக்கருவியான் எழும் இயலமைந்த மதுர ஒலியாம். அதுவும் சுரோத்ரேந்திரிய ஞானத்திற்கு விசையமாம். சட்சிந்திரியத்திற்குரிய காட்சிப்பிரமாணத்திற்கு விசையம் அன்று. ஒலி ரூபமே பிரம ரூபமென்பது பிரசித்தம்.

பிரமவித்தை ஆகிய இசை நுணுக்க மகிமையை முற்றும் உணர்த்த வல்லேம் அல்லேம். கூறிய ஐவகைக் கருவிகட் டலைமைபூண்டதோற் கருவியில் நந்திதேவர், பிரபுதேவர், வாணன் முதலானோர் சிறந்துளார் என்றும், எல்லாம் வல்ல நடேசப்பெருமான் தனது திரு நடன சமூகத்தில் ஆயிரங் கைகளாலும் மத்தளங்கொட்டும் அவ்வாணனை வியந்து மிக்க அன்புகூர்ந்து அவனது சோணிதபுரத்துக் கோட்டைவாசல் முகப்பிற் குமாரவர்க்கங்களோடு வீற்றிருந்தனர் என்றும் கூறும் தொண்ணூற்றுணிவை முற்றக்கற்ற வல்லார்வாய்க்கேட்டுணர்ந்துளேம்.

ஙப்போல்வளை யெனத் தெய்வப்புலமை அவ்வைப்பிராட்டியார் கூறிய திருவாக்குண்மையை ஒருவாறு நிகர்த்துத் தன் இனங்களாகிய மற்றைய நான்கிசைகளையும் தழுவித் தானும் விளங்கி நிற்பது கஞ்சக்கருவியானமைந்த தாளப் பிரமாணம் ஒன்றுமே.

விலங்கினத்துளொன்றாய பசுக்குலங்களை ஒருங்கு குவித்துத் திரட்டிய குழலிசையைக் கைக்கொண்டவர் நந்தகோபால நந்தனராகிய கிருட்டின பரமாத்துமாவே அன்றோ.

மிடறு என்னும் கண்டத்தின் எழும் இன்னிசை வல்லாளர் பலருள்ளும் சிறந்துளார் சரசுபதி தேவியாரெனப் பலபுராணங்கள் முறையிடுகின்றன. எடுத்த வீணைகள் உளர் நரம்பிது மிடறிதுவென்றடுத்த கேள்வராம் பிரமரும் அறிவறிதாகப்பாடினர் என ஆன்றோர் புகழ்ந்தனர்.

சொன்னவற்றுள் மிஞ்சிய நரம்புக்கருவியினிசை நுண்ணிய நரம்பில் நின்றெழும் ஓசையாலாகிய இனிய இசையாம்; கூறும்போதே அதன் வலியை அறிந்து வலித்துப் பெயரிட்டனர். முன்னாள் அவந்திநாட்டு அரசுபுரிந்த மறமாச்சேனன் என்னும் அரசர்பெருமான் அரண்மனையில் எவர்க்கும் அடங்காது மதங்கொண்டு நின்ற யானையை இருபத்தேழு நரம்பிட்ட கோடவதி யென்னும் யாழின் இசையால் வசப்படுத்திய நம் குருகுலதிலகனாகிய உதயணராசனுக்கு மதிப்பு நல்கியது யாழின் பயிற்சியே. நாரதர் முதலிய மகரிசிகள் கைக்கொண்டதும் யாழே. இதன் கிளைவாத்தியமன்றோ பிடில். இவற்றினும் நரம்பிசைதானே அமைந்துளது. இவ்வாத்தியப் பயிற்சியிற்பேர்பெற்ற வல்லாளர் பலர் இருப்பினும் எமது ஆத்ம நண்பர் மருங்காபுரி சமஸ்தானம் பிடில் சங்கீத வித்வான் கோபாலகிருட்டின அய்யாவர்களை நிகர்த்த வித்வான்களைப்பார்ப்பது மிகவும் அருமையே. இவர்கள் எம்மொடு நீடித்த நாளாய்ப் பழகியுள்ளார்கள். இவர்கள் உத்தம குணம் மிக்க ஆச்சரியம் ஆச்சரியம். இதைக்கூற யாம் அனந்தன் அன்றே.

முற்கூறிய தோற்கருவியின் சிளேவாச்சியமாகிய கஞ்சராவாச்சியப் பயிற்சி வாய்ந்த எம்மொடு பல சங்கீதக்கச்சேரியிற் பேரானந்தம்பெருகப் பிடில் வாசிக்கக்கேள்வியுற்றுப் பெருமகிழ்ச்சியடைந்துளோம். இவர்கள் பெரிய சமஸ்தானாதிபதிகளிடஞ்சென்று மதிக்கத்தக்க சன்மானங்களும் பெற்றிருக்கிறார்கள். இவர்களுக்கு 1929ல் ஸ்ரீ ரங்கத்தில் கம்பனரங்கேற்றிய மண்டபத்தில் ஸ்ரீ ரங்க மகாசனங்களின் சார்பாகவும், பிடில் மகாவித்துவான் திருச்சி கோவிந்தசாமிப்பிள்ளை அவர்கள் சார்பாகவும், கொடியாலம் ரங்கசாமி அய்யங்காரவர்கள் ஒர் வைர பதக்கம் சன்மானம் அளித்தார்கள். நமது இதயத்தை விட்டகலாத பெருநேயங்கொண்டவர்கள். முன்னாள் குழலிசையை விர்த்தித்த கோபாலகிருட்டினனே இந்நாள் பிடில் இசையை விர்த்திப்பதற்காகக் கோபாலகிருட்டினனெனும் பெயரைவிடாது கைக்கொண்டு அவதரித்திருக்கலாமென்றும் யாம் எண்ணுகின்றேம்—கலைமதி நாணுறச்சகல கலைபடித்துப் பிறர்க்கு நல்கும் கவிசிரேட்டத் தலைமையுறுமவர் மிகுந்த தகுந்த வித்யாதான தன சம்பத்துள்ளோர் என்றபடி பல மாணவர்க்கு எத்தோசமும் இன்றிப் பிடில் வாத்தியம் பயிற்றுவிக்கும் பெருங்குணமுள்ளவர்கள் இது எமது அனுபவம். யாம் அனுப்பிய மாணவர் சுந்தரேச பட்டருக்குப் பிடில் வாத்தியப்பயிற்சி செய்துவைத்ததுமன்றிப் பிரதமமாணவர் எனப்பெயருங்கொடுத்திருக்கிறார்கள். இவர்களும் இவர்கள் பெருங்குணமும் இவர்கள் இசை வன்மையும் நெடுங்காலம் பிரபலிக்கும் வண்ணம் பெருங்கருணாநிதியாகிய கடவுளைப் பிரார்த்திக்கின்றேம்.

இவர்கள் பிரபலத்தைப் பல வித்துவான்கள் இதன் பின்னர் வரைந்துள்ளார்கள்.

இங்ஙனம்,

வடமலைத்திருவனாத சேவுகப்பாண்டியத்தேவரவர்கள்,

சேற்றூர் ஜமீன்தார்.



Group on the occasion of the presentation of Souvenir to Marungapuri Gopalakrishna Iyer.

7—9—1941

EARLY LIFE SKETCH

OF

MARUNGAPURI SAMASTHANA VIDWAN

GOPALAKRISHNA IYER

BY

Y. MAHALINGA SASTRI M.A.. B.L., ANNAMALAI UNIVERSITY

ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் நாடறிந்த சங்கீத வித்வான் பழைய ஜாம்புவான், மிக்க கௌரவத்தை வகித்தவர். பெரிய தோரணையில் தொழில் நடத்தி மணமாக வாழ்பவர். ராஜஸ்தலங்களில் உயர்ந்த ஸன்மானங்களை அடைந்தவர், மருங்காபுரி ஜமீன் ஸமஸ்தான வித்வான்களாலேயே கோபால கிருஷ்ணய்யர் அந்நாளிலிருந்து இன்று வரை நன்கு மதிக்கப்பெற்றவர். உன்னத மனோபாவமும் தூய்மையான வாழ்க்கையுமுடையவர். நட்பு பெருமையை பாராட்டும் ஸரஸி. அமைதியும் அடக்கமும் பொருந்திய சீலர்.

இவ்வபூர்வ வியக்தியின் வாத்யவைபவத்தை பல தடவைகளில் அனுபவித்திருக்கிறேன். பல வருஷங்களுக்குமுன் மதுரையில் காஞ்சீபுரம் நாயனா பிள்ளை அவர்கள் கச்சேரிக்கும் மெட்ரூஸ் சபைகளில் பல சந்தர்ப்பங்களிலும் இவர் வாசித்துக் கேட்டிருக்கின்றேன், ஆனால் சமீபத்தில் (போன வருஷத்தில்) இவர் வாசிப்பை கேட்டதிலிருந்து எனக்கு ஒரு புது உணர்ச்சி ஏற்பட்டது. அவர் புதிதாய் வாசிக்கவில்லையானாலும் எனக்கு அவருடைய உண்மையான வாசிப்பு திறமையை தெரிந்துகொள்வதற்கு அதற்கு முன் சந்தர்ப்பங்கள், ஏற்படவில்லை. ஏனெனில் அன்றுதான் அவர் தனிக்கச்சேரியை முதலாக கேட்டேன். அவர் முழுத்திறமையை அனுபவிக்க வேண்டுமானால் தனிக்கச்சேரி கேட்கவேண்டும். பக்கவாத்திய கச்சேரிகளில் கிடைக்கும் அவகாசத்தில் அவர் வாசிப்பை கேட்டால் மட்டும் போதாது. அவர் பக்க வாத்தியத்தை பக்க வாத்தியமென்றே நினைக்கும் அடங்கிய சுபாவமுடையவர். இதுதான் சமயமென்று இடைவெளிகளில் விருந்தடித்து தன் கைவரிசையை காண்பிக்க ஆத்திரப்படுபவரல்லர். பாடுபவர் யாராயிருந்தாலும் அவருக்கு உள்ளடங்கியே வாசிப்பாரேயொழிய மேல் விழுந்து வரம்பு தாண்டிவிடமாட்டார். அவர் மிதஞானமுள்ள பெண் பிள்ளைகளுக்கும் வாசிப்பார். அபார வித்வத்துள்ள நாயனா பிள்ளைக்கும் வாசிப்பார். ஆதி மத்ஸ்யாவதாரத்தில் மீன் எப்படி ஆகாரத்திற்கேற்ற உருவையடைந்ததோ—தொட்டியிலும் நீந்தி சமுத்திரத்தையும் அடைத்துக்கொண்டு வளர்ந்ததோ—அப்படியே கோபாலகிருஷ்ணய்யரின், சங்கீத பெருக்கும் அங்குஷ்ட பிரமாணத்திலும் அடங்கும், விசுவரூபத்தையும் எடுத்துக்கொள்ளும்.

இவ்வுண்மையை வெகு நாளைக்கு முன் ஒரு ரஸிகர் கண்டுகொண்டதாக தெரிகிறது. மெட்ரூசில் பூச்சி அய்யங்கார் வாய்பாட்டும், கோபாலகிருஷ்ணய்யர் பிடிலும். அச்சமயம் நம் ரஸிகர் சென்றிருந்தார். அன்று ஐயங்காரவர்களுக்கு தொண்டை கட்டிக்கொண்டுவிட்டது. ஜனங்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். அப்போது கோபால கிருஷ்ணய்யரவர்கள் எழுந்து அய்யங்காரவர்களுடைய

உடம்பு அசௌகரியத்தை தெரியப்படுத்தி தான் வாசிப்பதாயும் அமைதியாய் கேட்டுக்கொண்டிருக்கும் படியும் வேண்டிக்கொண்டார். கொஞ்ச விசுவரூபம் வெளிக்கிளம்பவும் ஜனங்கள் ஈடுபட்டார்கள். பிறகு நம் ரஸிகர் கனவானுதலால் கோபாலகிருஷ்ணய்யரை பலதடவை தம் ஊருக்கு வரவழைத்து கச்சேரிகள் நடத்தி வைத்தார். இருவருக்கும் சிறந்த நட்பு ஏற்பட்டது.

இவ்விதமே நாம் கலைஞரின் உண்மை யோக்யதையை காத்திருந்து அறியவேண்டி வருகிறது. உண்மை கலைஞன் படாடோபமும் தற்பெருமையை தம்பட்டங்கொட்டும் சுபாவமுடையவனுகவும் இருக்கிறதில்லை. ஞானிகளை ஆர்வமுள்ளவர்களே தேடிக் காண்பதேபோல் கலைஞரின் கலையையும் தேடிக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த காலத்தில் "அட்வர்டைஸ்மெண்ட்" என்று ஒரு திருத்தம்பட்டம் முழங்குகிறது. அது வியாபாரிகளுக்கென வந்தது. ஆனுல் அதன் செவிடுபடும் ஓசையில் கலைஞரும் ஒருவாறு சபலப்படுகிருர்கள். அது எந்த சந்திக்கு இழுத்தாலும் பின் தொடர்கிருர்கள். அதற்கு சில விஷம சேஷ்டைகளும் உண்டு. மூக்கை பிய்க்கும். கடைவாயை கிழிக்கும். காதை திருகும். அவைகளுக்கும் உடன்படுகிருர்கள். ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் இதுவரையில் இந்த கதிக்கு வரவில்லை. அவருடைய யோக்யதை நாளது வரையில் ஹிமவத் பர்வதத்திலிருக்கும் ஒஷதிபோல விளங்குகிறது. இத்தகைய காரணங்களாலேதான் இதன் ஒளி வெகு நாளாய் சங்கீத பித்தனுன எனக்கும் தென்படாமலிருந்தது. ஏதோ என் பாக்கியம் ஒன்றுக்கு இரண்டாக தனிக் கச்சேரிகள் கேட்டேன். இவருடைய ஜீவ சரித்திரத்தை தெரிந்துகொள்ள வேண்டுமென்று தோன்றிற்று. நேரில் பரிசயமில்லாததால் ஒரு ஸங்கீத வித்வான் மூலம் பின்வரும் விசேஷக் குறிப்புகளைப் பெற்றேன்.

ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் ஜனனம் 1883-ல் மதுரையில், ஆந்திர ஜாதி, அவருடைய தகப்பனுர் கோபாலய்யர், மதுரையில் ஸ்கூல் வாத்தியார். மாதாமஹர் கோபு வாத்தியார் என்பவர், ஆந்திர கவி, சங்கீத வித்வான், பரதநாட்டியத்தில் பிரக்யாதிபெற்றவர்.

கோபால கிருஷ்ணய்யர் ஸ்கூல் படிப்பு கொஞ்சமே. அதிபால்யத்திலேயே கரூர் பிடில் வித்வான் வெங்கட்ராமய்யர் அவர்களிடம் வாய்ப்பாட்டு அப்யாஸம் செய்யத் தொடங்கினுர். இரண்டு வருஷங்களுக்குள் கச்சேரி செய்யவும் ஆரம்பித்து ஒரு ஸமயம் ஸ்வாமி விவேகானந்தரின் முன்னிலையிலும் பாடியிருக்கிருர். ஆனுல் சாரீரம் சௌகரியப்படாததால் பிடில் அப்யஸித்தார். 1900-ல் கொஞ்சகாலம் காஞ்சீபுரத்திலும் பின்பு மெட்ருஸில் டிப்டி கலெக்டர் P. S. கணபதி அய்யர் அவர்கள் ஆதரவில் மயிலாப்பூரிலும் இருந்தார்.

1901-லிருந்து கோபாலகிருஷ்ணய்யர், பிடில் கோவிந்தஸாமி பிள்ளை அவர்களுடன் ஜோடி பிடிலாய் சேர்ந்து கச்சேரிகள் நடத்திவந்தார். இப்படி கச்சேரி செய்யும் ஸமயம் மெட்ருஸில் ஒரு கச்சேரிக்கு திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர் அவர்கள் வந்திருந்து கேட்டு அபிநந்தித்து ஆசீர்வாதம் செய்தார்.

1907-ல் மெட்ருசை விட்டு, பிக்ஷாண்டார் கோவில் ஆவுடைய பிள்ளை அவர்களின் ஆதரவில் இருந்து வந்து அவர் மூலமாகவே மருங்காபுரி ஜமீன்தாருக்கு பிடில் கற்றுக்கொடுக்க அமர்ந்தார்.

1911-ல் மருங்காபுரி ஸமஸ்தான வித்வானுய் ஏற்படுத்தப்பட்டார். அந்த ஸமயம் ஒரு வித்வத்ஸபையை ஏற்படுத்தி அதில் அவருக்கு தங்க செயின் பதக்கமும் ஏராளமான ரூபாய் ஸன்மானமும் அளிக்கப்பட்டது.

1911-முதல் நாளது வரையில் கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் ஸ்ரீரங்கத்தில் ஜமீந்தார் அவர்கள் வீட்டிலேயே வசித்து வருகிருர். 1930-31ல் மதருஸ், யுனிவர்ஸிடி மியுஸிக் எக்ஸ்பர்ட் கமிட்டி

பில் கௌரவ அங்கத்தினராக வேலை பார்த்து வந்தார். 1932-முதல் இவர் தியாகய்யர் உத்ஸவமும் நடத்தி வருகிறார். இதில் பெரிய வித்வான்கள் பலர் கலந்து தொண்டு புரிந்திருக்கின்றனர்.

அவருடைய சிஷ்யர்களில் முக்கியமானவர்கள் ஈரோடு விசுவநாத ஐயர், பொன்மலை V. ராஜா ராமய்யர், மதுரை ஸௌந்தரேசபட்டர் முதலியவர்கள்.

மைசூர் மகாராஜா அவர்கள் அய்யரவர்களுடைய வாசிப்பை கேட்டு "ராகபாவம் நன்றாயிருக்கிறது" என்றும் "மறக்க முடியாது" என்றும் சொன்னதாய் தெரிகிறது.

ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் சிறு ராகங்களை வாசிப்பதிலிருந்துதான் அவருடைய பெருமையை நான் கண்டுகொண்டேன். யதுகுல காம்போஜி, ஆனந்த பைரவி, ஸகானா, மோகனம், ஸாவேரி, செஞ்சுருட்டி, பியாக், கேதாரகௌளம், கானடா முதலிய ராகங்களை அவரிடங் கேட்கும்போது நான் புஷ்ப வனத்தின் ஸங்கீதத்தை அனுபவித்தபோது அடைந்த வெள்ளப்பெருக்கு திட்டத்தை (Flood level) என் ஆனந்தம் எட்டிப்பார்த்தது. ராகமல்லவா ஸங்கீதத்தின் உண்மையான உயிர் நிலைக்கு மாத்திரைக்கோல். அங்கு வெறும் அகடவிகட சாமர்த்தியம் செல்லாது. ராகம் உள்ளிருந்து குமிழியிட்டுப் பொங்கி வரவேண்டும். அது இயற்கையான கல்பனா சக்தி இல்லாவிட்டால் ஏற்படாது. காளிதாஸர் ஸங்கீதத்தின் பெருமையை புகழுமிடத்து

"அஹோ! ராகபரி வாஹிணீ கீதிது" என்றார். அதுபோலவே ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் வாசிக்கும் ராகம் பிரவாகம்போல் பெருகி கூடம் நிரம்பி ததும்பி நிற்பதைக் காணலாம். இன்னும் பல காலம் அவர் சங்கீதத்தைக் கேட்டு ஆனந்திக்க நாம் கொடுத்து வைத்திருக்கவேண்டும்.

மஹாலிங்கம் சாஸ்திரிகள்

Sangeetha Ratnakara
ARIYAKUDI RAMANUJA IYENGAR

மகா-௱-௱-ஸ்ரீ மருங்காபுரி சமஸ்தான வித்வான் பிடில் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் இச்சங்கீத உலகத்தில் ஓர் முதன்மை ஸ்தானம் வகித்து வருகிறார்களென்பது எல்லோராலும் கொண்டாடத் தகுந்ததேயாகும். அவர்கள் நல்ல சங்கீத பரம்பரையில் மிகவும் உத்கிருஷ்டமாய் விளங்கிவந்த கரூர் ஸ்ரீ வெங்கடராமையர் அவர்களிடத்தில் குருகுல வாசம் செய்து பின்னால் நல்ல கியாதிக்கு வந்து எங்கும் நல்ல கீர்த்தியுடனும் நல்ல சாம்பிரதாயமாக யோக்யதையுடனும் இருந்து வருகிறார்களென்று நாம் எல்லோரும் அறிந்ததே.

இவர்கள் ஆதியில் முதன் முதலாக எனது குருவாகிய ராமநாதபுரம் சமஸ்தான சங்கீத வித்வான் ஸ்ரீ சீனிவாஸ அய்யங்கார் அவர்களுடன் மைலாப்பூர் சங்கீத சபையில் கச்சேரி செய்து அவ்வமயம் இவர்களுக்கு ஸ்ரீமான் அய்யங்கார்வாள் ஓர் தங்கப் பதக்கம் அளித்திருக்கிறார்கள். அதுமுதல் அவர்கள் நீண்ட காலமாக ஜாஸ்தி புகழுடனும் மகா வித்வான்களோடும் நல்ல அநுபவம் வாய்ந்தவர்களுடனும் கச்சேரிகள் செய்து பெருமை யுற்றிருக்கிறார்கள். ஆதலின் அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை ஓர் புத்தக ரூபமாக நம் நாட்டு சங்கீத வித்வான்களாலேயும் மகா பிரமுகர்களுடைய அபிப்பிராயங்களை திரட்டியும் அப்புத்தகத்தில் அச்சிட்டு வெளியிடவேண்டுமென்று எல்லோருடைய அபிப்ராயத்திற்கு இணங்கி ஏற்பாடு செய்திருப்பதை நாமும் இன்னு மற்றமுள்ள பெரியோர்களும் அதை ஆதரிக்கவேண்டுமென்பது எனது அபிப்ராயம்.

இது விஷயம் எல்லோருக்கும் நல்ல அபிப்ராயத்தைக் கொடுக்குமென்பதில் ஆக்ஷேபணை இருக்காது. அவர்கள் அன்றுமுதல் இன்றும் அரிய பெரிய வித்வான்களோடு சேர்ந்து வாசித்து கர்நாடக சங்கீதத்தை நாளது வரை நழுவவிடாமல் அபிவிருத்திக்து கொண்டுவந்திருப்பதற்கு நாம் எல்லோரும் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறேம்.

ஆதலால் இவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை புத்தக ரூபமாக வெளியிடவேண்டுமென்றும் அவர்களுடைய விழாவைகொண்டாடவேணுமாய் கோருகிறேன்.

அரியக்குடி ராமானுஜ அய்யங்கார்

Tiger K. VARADACHARIAR.

Sri Gopalakrishna Aiyar was born in 1883. With a head completely bald, of short stature and medium build, he is one of the few representatives of the old galaxy of first-rate musicians who shed their lustre in the musical world in the closing decade of the last century and the first decade of the present. More familiarly known as Marungapuri and Marungapuri Aiyarval, his fame has spread everywhere as **a violinist of a high order.**

He is the son of Gopala Aiyar and is an Andhra by birth. Though his father was himself a school-master, his educational career was a short one. His maternal grandfather is said to have been one Gopu Vadhyar, a distinguished musician and expert in Bharatanatya.

With a distinguished Sangita pedigree, Sri Gopalakrishna learnt Violin at a comparatively early age from Vidvan Venkatarama Aiyar of Karur. It is said that even as early as that he sang in the presence of Swami Vivekananda. He stayed for a time in Conjeevaram and then at Madras where he was supported by one Ganapati Aiyar, a retired Deputy Collector.

From the year 1901 he gave regular performances in company with the famous Violin Vidvan Govindaswamy Pillai of Trichinopoly. After a sojourn at Madras he left the place in 1907 and was patronised by Avudaiyappa Pillai known then as the Minor of Bikshandar Koil, and through his influence he became Violin tutor to the Zamindar of Murangapuri. In about four years his musical talents were well recognised and he was raised to the status of the Samasthana Vidvan. From 1911 up till now he has been residing in Srirangam in one of the houses owned by the Zamindar.

As other distinguished exponents of Carnatic Music he has his own chelas in the Musical world: Visvanatha Ayyar of Erode and Rajarama Aiyar of Golden Rock being two of them. His fame spread far and wide and he was the recipient of high encomiums and valuable presents from His late Highness the Maharajah of Mysore who is said to have gone in raptures over his mastery of Raga bhava.



Late B. C. AVADAIA PILLAI, Bikshandarkoil Estate

He is a Violinist of no mean order and some features of his Violin play deserve special mention. Unassuming and unostentatious by nature, he had ever a tendency to move in unison with the chief songster and never tried to out-do or shine by pouncing upon any short recess or interval during the performance for exhibiting his talents. Many were the opportunities during which he played to the excellent vocal music of the late Naina Pillai, who was reckoned and rightly so according to some musical experts as one of the masters of the Ragam technique and on all such occasions his performance was highly appreciated by the professional and the public.

I myself had many occasions to listen to him in solo and group music. Every time I found in him **a perfect technician** scrupulously bent on the best and faithful reproduction of the tunes and the musical modes without even a single jarring note. I was often Surprised at the comparative ease and facility with which he handled the violin even when playing the Ganaragams like Sankarabharanam, Kalyani and Thodi. His Madhyamakala movement is a note-worthy feature and the vocalist is often tempted to take to his flourishes with an exalted mind on hearing him play the same. The highly detectable and clearly audible tone of **his Violin and its ripe and sweet melody** have enraptured both experts and non-experts and the ear thus trained repeatedly craves for **such divine music.** Above all his successful attempt at playing the rare musical modes, which are not easily handled by Violinists in general and the identification of which defy even experts, deserve special mention. His resourcefulness as an expert Violinist enables him to elaborate the various tunes and their rare bhavas. Pallavis and other aspects of Music are but secondary when we consider the above aspect of his play on the Violin. In fact it will be no exaggeration if I add that with the best equipment as described above he was able to enthral very big audiences and to gain their best appreciation. **His solos are remarkable** for their captivating nature and I have seen hundreds of audiences sit spell-bound in perfect silence while this master of technique dexterously played on this stringed instrument, now on the Shadjama and now on the Panchama, all the while taking care to see that he never over-stepped the limits or bounds of the tune or part of the tune thus represented. As a true devotee of art he knew his own limitations and never indulged in parading his knowledge.

This great scholar completes his 60th Year and to this great scholar it is but fitting that hundreds of appreciations must pour forth from all the corners of the musical world. An expert in Nadopasana, he ever worshipped Sri Thyagaraja the Incarnation of Music and a composer of a thousand soul-stirring kirthanas and the special festival in his honour is being celebrated by him every year in his residence at Srirangam. My only prayer to Lord Sri Rama on this occasion is

> " May He bestow long life and happiness on this delightful exponent of stringed music and may this talented Violinist live long to please the ears of lovers of art with his highly enjoyable music ! "

Gayanapatu Keerthanpatu
SRIMATHI C. SARASWATHI BAI

नम्रत्वेनोन्नमन्तः परगुणकथनैः स्वान्गुणान्ख्यापन्तः
स्वार्थान्संपादयन्तो विततबहतरारंभयन्ताः परार्थे ।
क्षान्त्यैवाहेपरुक्षाक्षरमुखरमुखान् दुर्मुखान् दुःखयन्तः
सन्तस्साश्चर्यचर्या जगति बहुमताः कस्यनाभ्यर्थनीयाः ॥

வணக்கத்தினாலேயே உன்னத ஸ்திதியிலுள்ளவர்களும், ஸதா இதரர்களுடைய குணங்களை வர்ணிப்பதினாலேயே தன் மேலான குணங்களை வெளிப்படுத்துகிறவர்களும், இதரப் பிரயோஜனத்திற்காகவே ஸகல யத்தினங்களைச் செய்து, அனாயாஸமாய் தன் காரியங்களை முடித்துக்கொள்ளுகிறவர்களும், தூராக்ஷேபங்களையும் துர்வசனங்களையும் செய்யும் துராத்மாக்களை தன் பொறுமையினாலேயே துக்கப்படுத்துகிறவர்களுமான ஆச்சரியகரமான நடத்தையுள்ள ஸஜ்ஜனங்களை யார்தான் விரும்பமாட்டார்கள்.

பர்த்ருஹரி.

ஓர் உத்தம ஸங்கீத வித்வானுடைய குணாநுபவத்தை எழுத ஸந்தர்ப்பம் வாய்த்ததைப்பற்றி அபார ஸந்தோஷத்தை அடைகிறேன். அதி ஸமீப காலத்திலேயே நாரத தும்புரு முதலியவர்களைப் போலும், கந்தர்வர்களைப்போலும், குசலவர்களைப்போலும், கான வித்தையில் பிரகாசித்துக்கொண்டிருந்த

பிக்ஷாண்டார் கோவில் சுப்பராயர், அந்தணல்லூர் சுப்பையர், கோயமுத்தூர் ராகவையர், மகா வைத்தினாதய்யர், பட்டணம் சுப்பிரமணியய்யர், இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீனிவாசய்யங்கார், பாலக்காடு அனந்தராம பாகவதர், கோனேரிராஜபுரம் வைத்தினாதய்யர், பிடில் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், திருச்சி கோவிந்தசாமி பிள்ளை முதலிய மகா மகா வித்வான்களின் பெயரைச் சொன்னால் அவர்களுடைய குணமாவது யோக்யதையாவது தாத்காலிகர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை, நாம் எடுத்துச் சொன்னாலும் நம்புவதில்லை. அதுவே இத்தாலி, க்ரீஸ் முதலிய தேசங்களை ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் ஆண்டுவந்த அரசர்கள் முதல் வாசற்காப்போன் வரையிலுமுள்ளவர்களின் குண நாம வைபவங்களைக் கண்ட பாடம் செய்து வருகிறார்கள். ஏதோ புண்யவசத்தால் பரத பூமியில், வால்மீகி, வ்யாசர் முதலிய மஹர்ஷிகளும், காளிதாசன், கம்பன் முதலிய மஹாகவிகளும், ஜயதேவர், தீர்த்தநாராயணர், ஸத்குரு ஸ்ரீ தியாகராஜஸ்வாமிகள், தீக்ஷிதர் சாமாசாஸ்திரிகள், க்ஷேத்ரக்ஞர், அருணாசல கவிராயர், கோபாலகிருஷ்ண பாரதி, கவிகுஞ்சர பாரதி, இதைப்போல கிரந்தங்களையும் க்ருதிகளையும் இயற்றிய மஹான்கள் மாத்திரம் அந்தக்ரந்த ரூபமாய் ஜீவித்திருக்கிறார்கள். மேல் நாட்டாரைப்போல் அவ்வப்போது கவிகள் சங்கீத வித்வான்களைப்பற்றி அஸூயையில்லாமல் உள்ளது உள்ளபடி அவர்களுடைய குணங்களை எழுதி வந்திருந்தால், பிற்காலத்திய வித்யார்த்திகள் அதை வாசித்து அவர்களுடைய யோக்யதையை தானும் ஸம்பாதிக்க யத்தனிக்கலாம். அதுவும் அவர்களின் ஜீவித காலத்திற்கு பிறகு, இருப்பதும் இல்லாததுமாய் எழுதுவதை

விட அவர்களுடைய ஜீவிதகாலத்திலேயே நிஜ யோக்யதையைக் கண்டறிந்து எழுதுவதுதான் உத்தமம். அதை தத்காலமுள்ளவர்கள் அஸூயை முதலிய துர்க்குணங்களால் நிந்தித்தாலும் பாதகமில்லை. அந்த லிகிதங்கள் பிற்காலத்தில் மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கும் அப்படி ப்ரகிருதம் நமது பிடில் மகா வித்வான் மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் அவர்களின் குணமும் யோக்யதையும் அவரோடேயே முடிவடையாமல் புஸ்தக ரூபமாயிருப்பது பிற்கால வித்யார்த்திகளுக்கு மிகவும் உபயுக்தமானதென்பது ஸர்வ நிச்சயமானது. ஆனால் அந்த மகா வித்வானுடைய குண யோக்யதையைப்பற்றி அண்ணாமலை யூனிவர்ஸிட்டி ஸ்ரீ மஹாலிங்கம் சாஸ்திரிகள் M.A., M.L. அவர்கள் 15—12—39 சில்ப ஸ்ரீயில் பிரசுரித்ததை நான் வாசித்திருக்கிறேன். அது மிகவும் அழகாயிருந்தது. இனி ஒருவரும் அவரைப்பற்றி எழுத அவகாசமில்லாமலும் இருந்தது. இருந்தாலும் நான் எழுதாமலிருக்க முடியுமா?

நமது வித்வான் ஆதியில் ஸங்கீதத்தைப் பாடுவதற்கு அநுகூலமாக ஸிரவர அப்பியஸித்தவர். பிறகு இந்த சாரீரத்தைக்கொண்டு சோபிதமாய்க் கச்சேரி செய்வது அஸாத்யம் என்பதை அறிந்து, பிறகு தான் பிடில் சாதகம் செய்தார். ஆனால் அவர் ஆதியில் அப்யஸித்த ஸங்கீதமெல்லாம் பின்னிட்டு பிடில் வாத்யத்தை அவ்வளவு ஒழுங்காய் வாசிக்கவும், தவிரவும் தான் பக்கவாத்யம் வாசிக்கும்பொழுது பாடகருடைய பாவத்தை எளிதில் அறியவும் அநுகூலமாயிருந்தது. இப்பவும் அவர் பிடில் வாசிப்பதில் உருப்படிகளின் அக்ஷரபாவங்களையும், மத்யமகால ரெரவலுக்கும் ஸ்வரம் வாசிப்பதற்கும் உள்ள வித்யாஸத்தையும் நன்ருய் காணலாம். அவர் பிடிலில் ராகம் வாசிப்பதில் உள்ள விசேஷம். ராகம் வாசிக்க ஆரம்பித்தவுடன் அந்தந்த ராகத்தின் ஸ்வரூபம்தோன்றி, ராகத்தை விஸ்தரிக்கும்பொழுதும் மற்றொரு ராகத்தின் பாவம் எந்த காரணத்தாலும் தோன்றமலும், ராக சஞ்சாரத்தின் ப்ராசீன க்ரமத்தை அநுசரித்தே வாசிப்பார். ஏதோ ஒரு பாவம் வெளிப்படுவதற்காக அநாவசியமாய் ஊரெல்லாம் சுற்றியும் கடைசியில் அந்த பாவம் வெளிப்படாமலே போகும் ப்ரீதியை அவர் வாசிப்பில் காணவேமுடியாது. பிடில் நாதமும் மிருதுவும் மதுரமும் கம்பீரமுமானது. வில்லை அடித்தாவது வேகமாய் திருப்பியாவது வாசிக்கமாட்டார். வில்லைத் திருப்பும்பொழுதாவது தந்தியில் விரல்மாறும் பொழுதாவது நாதம் வேறு படாமல் சாரீரத்தில் பாடுவதுபோல் அகண்டமாயும் அழகாயும் காணப்படும். மற்றொரு முக்ய விசேஷம். தான் தனிக்கச்சேரி செய்யும்பொழுது ராகமோ உருப்படியோ வாசிக்கும் தன்மை தன் ஸாதகத்தையும் தன் மனோதர்மத்தையும் அநுசரித்திருந்த போதிலும், மற்றொரு பாடகர் கச்சேரியில் அவரைப்பின் தொடரும்பொழுதும், அந்த ஸமயம் தனியாய் வாசிக்கும்பொழுதும், அவருடைய மனோதர்மத்தைக் கொஞ்சமாவது தடை செய்யாமல், பூராவும் அவரை அநுசரித்தே வாசிப்பார். இது அவருடைய விசாலபுத்தியையும் உதார எண்ணத்தையும் காட்டுகிறதல்லவா? அதினால்தான் நமது வித்வான் கச்சேரிக்கு ஆரம்பித்த நாள் முதல் நாளது வரையிலும் இன்னமும் ஒவ்வொரு கனவித்வான்களும் சாமான்ய வித்வான்களும் அவரையே பக்கவாத்தியத்திற்காக விரும்பி வருகிறர்கள். தன்னோடு ஸுஸ்வரமாய் வில்போடவும் மற்றவரால் முடியாது என்றபடி அபாரமாய் பிடில்வாசித்து வந்த ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையவர்கள் தனிக்கச்சேரி செய்யும் பொழுதெல்லாம் நமது வித்வானைகூட வாசிக்கச் செய்து அவ்வப்போது தன் மகிழ்ச்சியை ஸபையிலும் காட்டியிருக்கிருர் என்ருல் நமது வித்வானின் பெருமையை நாமென்ன சொல்லக் கிடக்கிறது.

மற்றொரு சுபசுசனம். ஆத்யஸ்வயம் வ்யக்தராகிய ஸ்ரீரங்கநாதஸ்வாமி லோக சக்ரவர்த்தி. தமிழுலகில் கம்பர் கவிசக்ரவர்த்தி. சங்கீத உலகில் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையவர்கள் பிடில் சக்ரவர்த்தி என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஒரு சமயம் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையவர்கள், நமது வித்வானுடைய தனிபிடில் வாத்யத்தை ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்க நாச்சியார் சந்நிதியில் கேட்டு பரவசமாகி ஸ்ரீரங்க மகா ஜனங்களுடைய உதவியாலும் தன் ஸொந்த திரவியத்தாலும் ஒரு வைர பதக்கம் தயாரித்து, எந்த இடத்தில் ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் கவிச்சக்ரவர்த்தி தான் இயற்றிய கம்பராமாயணத்தை அரங்கேற்றினரோ

அதே மண்டபத்தில் நமது மகா வித்துவானுக்கு பரம்பரையாய் வித்வான்களை ஆதரிக்கும் வம்சத்தில் ஜனித்த ஸ்ரீ கொடியாலம் K. V. ரங்கஸாமி அய்யங்கார் அவர்கள் ஹஸ்தத்தால் ஸமர்ப்பிக்கச் செய்தார் என்றால் இந்த ஸம்பவம் யாருக்குத்தான் கிடைக்கும்.

COPY OF INVITATION.

SRIRANGAM,
20—11—1927.

Sir,

It is proposed by the Srirangam public to present Marungapuri Samasthana Vidwan **M. R Ry. Gopalakrishna Aiyer Avergal,** Violinist, with a Medal, in appreciation of his proficiency in Music, on Sunday the 20th November (evening) at the Sri-Ranga-Nachiar Mantapam in the Srirangam temple.

Sriman K. V. Rengaswamy Aiyengar Avergal M. L. A., Chairman, Municipal Council, has kindly consented to preside on the occasion and award the Medal.

Your presence on the occasion is earnestly solicited.

K. V. Srinivasa Iyengar	K. Singam Iyengar
S. S. Vyasa Rao	G. Rajagopala Pillai
K. Chinnasami Odayar	S. O. Narayanasami Iyer
K. Kandasami Odayar	Mathrubhootham Iyer
Rao Sahib Raja Rama Rao	Bhashya Bhattar
Sabharathnam Chettiyar	Desikacharyar
Ananthasubramanya Iyer	M. C. Rajagopal Naidu

Dr. P. K. Krishna Rao (Homœo)

PROGRAMME

4—8 p.m. MUSIC PERFORMANCE.
M. G. Gopalakrishna Iyer, Violin; Madras Venu Naikar, Mridangam.
6—7 p.m. Speech by the President and presentation of the medal.
Distribution of Pansupari.

தவிரவும் நமது வித்வானுடைய மேலான குணமோ, ரூபம் வேஷம் நடவடிக்கை வார்த்தை வாசிப்பு ஒவ்வொன்றிலும் ப்ரதி பலிக்கும். அவரைப்பற்றி நான் கொஞ்சம் விஸ்தாரமாய் எழுத நேர்ந்த சில தைவிக விஷயங்கள். என்னுடைய பால்யத்தில் என் ஸாமான்ய ஸங்கீதத்தைக் கேட்டு என்னை மேலே மேலே பாடுவதற்கும் ஹரிகதை செய்வதற்கும் உற்சாகப்படுத்திய முக்யஸ்தர்களில் நமது வித்வான் ஒருவர். நான் ஹரிகதை செய்வதால் எனக்குப் பக்க ஸஹாயம் செய்ய அவர்களுக்கு அவகாசமில்லா விட்டாலும் அதில் அவர்களுக்கு அபார தாத்பரியமுண்டு. அதினால் சில இடங்களில் வாசித்துமிருக்கிறார். ஒரு ஸமயம் ஸ்ரீரங்கம் கனம் K. V. ரங்கஸாமி அய்யங்கார் அவர்களுக்கு லாகூரிலிருந்து கனம் ராமசரணதாஸ் என்னும் மஹாப்ரபு விருந்தாளியாய் வந்தபொழுது நான் அங்கு பாட நேர்ந்தது. அதற்கு நமது மஹா வித்வான் பிடில் வாசித்து அதைக் கேட்ட ராம்சரணதாஸ் தான் எவ்வளவோ ஸௌரங்கியைக் கேட்டும் இந்த நாதமும் வாசிப்பும் அதில் இருந்ததில்லை என்றே புகழ்ந்தார்.

ஓர் தைவிக ஸம்பவம். ஒரு ஸமயம் நான் பிழைப்பதே அரிது என்னும் ஸ்திதியில் படுக்கையிலிருக்கிறேன். என்னை பால்யத்தில் விசேஷமாய் ஆதரித்த என் மாதாவுக்கு ஸமானமான ஒருவர் என்னை பார்க்க வந்தார். ஏதோ தோன்றி தன்கையில் தன் பர்த்தா வாசித்துக்கொண்டிருந்த அமெரிக்கன் போன் என்னும் ஒரு வகையான பிடிலையும்கொண்டு வந்தார். என் ஸ்திதியைப் பார்த்து விசேஷமாய்க் கஷ்டப்பட்டு, அம்மா இந்த பிடில் அநியாயமாய் கெட்டுப்போகிறது. இதை உன் மனதுக்குப் பிடித்தமான யாராவது பிடில் வித்வானுக்கு உபயோகித்தால் என் மனதுக்கு திருப்தியாயிருக்கும் என்று சொல்லிக் கொடுத்தார். நானும் அம்மா நான் யாரைப் பார்க்கப்போகிறேன். யார் வரப்போகிறார். நீங்களே கொடுங்கள் என்று மறுத்தும் அவர் அதை என் வசமே வைத்துப்போனார். அவர் சென்ற மறு நிமிஷமே நமது வித்வான் ஸ்ரீரங்கத்தில் எனக்கு ஒரு கதையை ஏற்படுத்துவதற்காக வந்தார். அவரைப் பார்த்ததும் எனக்கு அத்யாச்சரிமாய்விட்டது. இதென்ன தைவிகம் பாருங்கள். என் ஸ்திதியைக் கவனித்த அவரும் கதையைப்பற்றி பேசவேயில்லை. நான் இருக்கும் ஸ்திதியில் அவரை நமஸ்கரித்து அந்த பிடிலை எடுத்து தந்தி ஸரியாயிருக்கிறதா என்று கவனிக்கச் சொன்னேன். அவரும் அதைத் தான் திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர்வாளோடு சென்றபொழுது அதை அந்த ப்ரபு வீட்டில் பார்த்திருப்பதாய்ச் சொல்லிக்கொண்டே அந்தப் பிடிலை எடுத்து சுருதிசேர்த்து ஒரு தடவை வில்லைப் போட்டதும் எனக்கு அபார உற்சாகம் ஏற்பட்டு நான் பாட ஆரம்பித்துவிட்டேன். வீட்டிலுள்ளவர்கள் என் பாட்டை பலாத்காரமாய் நிறுத்தினார்கள். நான் இந்த வாத்யம் தங்கள் கைக்கு அநுகூலமாய் இருப்பதால் தாங்களே எடுத்துக்கொள்ள வேணுமென்று சொல்லிக்கொடுத்துவிட்டேன். அவருக்கு இந்திர லோகம் கிடைத்ததளவு ஸந்தோஷம் ஏற்பட்டு சென்றார். என் சரீரமும் விரைவில் ஸ்வஸ்தமாகி அவர் ஸங்கல்பித்து வந்த கதையையும் நான் ஸ்ரீரங்கத்தில் செய்தேன். நமது வித்வான் என்னிடம் பிடில் வாங்கிப்போன ஒருமணி அவகாசத்திற்குப் பிறகு மற்றொரு பிடில் மஹாவித்வான் என்னைப் பார்க்கவே வந்தார். சற்றுமுன் நடந்த அமெரிக்கன் போன் கதைகளையெல்லாம் கேழ்விப்பட்டு நான் சற்றுமுன் வராமல் போனேனே என்று நொந்துகொண்டார். நானும் இருக்கும் சக்தியில் தாங்கள் சற்றுமுன் வந்திருந்தால் அந்த போன் நம்மவீட்டுக்கு வந்திராது. ப்ராப்தத்தை யல்லவா முக்யமாய்க்கொள்ளவேணும் என்றேன்.

நமது வித்வான் அவர்கள் அந்த அமெரிக்கன் போன்வயலினை எப்படியோ எதவாய் ஸாதாரண பிடிலைக் காட்டிலும் அழகாய் அதிசீக்ரத்தில் ஸாதகம் செய்து அங்கங்கு கச்சேரிகளில் சேர்ந்தும், தனிக் கச்சேரியாகவும், ரேடியோவிலும், அத்யத்புதமாய் வாசித்து வருவதை நாமனைவரும் கேட்டுவருகிறோம். இதற்கு நானும் கொஞ்சம் காரணமாயிருந்ததில் பெருமைப்பட்டுக் கொள்ளுகிறேன். இப்படி பிடிலிலும் அமெரிக்கன்போன் வயலினிலும் அஸாதாரண பாண்டித்யத்தோடு 40 வருஷங்களுக்கு மேலாகவே ப்ரகாசிக்கும் நமது மஹாவித்வானைப்பற்றி நான் எழுத நேர்ந்ததை அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கென்றே நினைக்கிறேன். நான் கதகளானதால் எவ்வளவோ அழகாய் சங்கிரகமாய் எழுத வேண்டியதைக் கதையாகவே எழுதிவிட்டேன். நமது ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் இப்படியே தன் குணத்தையும் யோக்யதையும் பரவச்செய்து ஸகல ஜனங்களையும் ஆனந்திக்கச் செய்யவேணுமாய் ஸர்வேச்வரன் ஸ்ரீரங்கனாதனைப் பிரார்த்திக்கிறேன்.

Sangeetha Vidwan
CHITTOOR SUBRAMANIYAM PILLAI, Madras.

இப்பூவுலகில் மானிட ஜன்மம் எடுத்தவருக்கு இஹபர சௌக்யங்களுக்கு சாதகமாய் இயற்றியிருக்கும் புராணங்களை சொல்லுவதும், இறைவனை போற்றலும் கண்டு களிக்கவும், கேட்டு ஆனந்திக்கவும் தொண்டு செய்து தோத்தரிக்கவும் இதுபோல் மஹான்களுடைய மஹிமையை கேட்டு அவர்களின் பாதசேவை செய்து ஆசிர்வாதம் பெறவும் வீரர்களுடைய வீரச்செயல்களை புகழ்ந்து அவர்களின் சக்தி சாமார்த்யங்களை நாம் அடைவதற்கு இந்த்ரிய நிக்ரஹம் செய்யவும் கவிபுலவர்களின் கவிதையை படித்தும் கேட்டும் அறிவு பெறவும் அவர்களின் சக்தி உயர்ந்த ஞான மார்க்கத்தை சம்பாதித்துக்கொள்ளவும் வெவ்வேறு முறைகளிலே கூறியிருக்கின்றன.

இதை தெளிவுபடுத்தி உபதேசிக்க, தாய் தந்தை குரு தெய்வங்களாக அவதாரமென்றும் மெய்ஞானிகளின் கருத்து.

நமது நாட்டிலே ஒவ்வொருகலைகளில் சிறந்தவர்களாக வல்லமை உடையவர்களை புகழ்ந்து பாராட்டுவது கலையில் ப்ரியமுள்ளவர்களுக்கு இயல்பாகும்.

எனக்கு சங்கீத கலையில் ப்ரியமும் அதைக்கொண்டு என்னுடைய வாழ்நாள் முழுவதும் தொழிலாக ஜீவனம் செய்ய ஏற்பட்டிருக்கின்றன. இசைக்கலையில் முன்னோர்களுடைய வல்லமையை புகழ்ந்து பேசிக்கொள்வது எனக்கு ஒரு பாடமாக இருக்கிறது.

சங்கீத முறையில் கானம் (வாய்ப்பாட்டு) தந்த்ரீஸ்வரம் (வீணை பிடில் முதலியவை) ஜந்த்ர வாத்யம் (மிருதங்கம், கெஞ்சிரா, தவுல்) முதலியவை.

இதுகளிலே என்னுடைய பால்ய திசையிலிருந்து இது வரையில் கேட்ட சங்கீத வித்வான்களில் சக்தி சாமர்த்தியங்களை ஒவ்வொரு நாளும் அவரவர்களுடைய திறமையை ஒரு முறை வர்ணித்து திருப்திப்படுவது எனக்கு ஸஹஜம்.

இந்த வகையிலே இசைகலா நிபுணர்களில் தந்த்ரி வாத்ய வல்லமை வாய்ந்த நிகரற்ற பிடில் வித்வான் திருச்சி கோவிந்தசாமி பிள்ளை அவர்களின் சங்கீத திறமையை புகழ்ந்து ஆனந்திப்பது எனக்கு [illegible]த்தை தந்து சௌக்யம் உண்டாக்கும் என்பதில் ஒரு மூட நம்பிக்கை உள்ளவனாக இருக்கிறேன். இந்த அவதார புருஷனை இழந்தது இசை உலகத்தின் துர்பாக்யமாகும். இன்னாருடைய வலது புயமாய் விளங்கும் ப்ரம்மஸ்ரீ மருங்காபுரி சமஸ்தான வித்வான் கோபாலகிருஷ்ணய்யர். இவர்களின் சங்கீத சம்பிரதாய குணாதிசயங்களை ஒருமுறை என்னுடைய சகாக்களுடன் பேசிக்கொண்டு சந்தோஷமடைவதுண்டு. இதை கேட்கும் என் நண்பர்கள் இவருடைய வரலாற்றை சொல்லும்படி கேட்பார்கள். ப்ரம்மஸ்ரீ அய்யர் அவர்களை முதன் முதல் கண்டதும் இதுவரையில் அவருடைய நல் குணங்களையும், வாசிப்பின் திறமையும் கௌரவமான நடையும் பெருந்தன்மையான குணத்தையும் கீழ்கண்டவாறு சொல்லுவேன்.

எனக்கு 14 வயதிலே ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் அவர்களின் தனிபிடில் கச்சேரி பெங்களூர் காயன ஸமாஜத்தில் முத்துதேவர் மிருதங்கத்துடன் இரண்டு நாள் கச்சேரியை கேட்டேன். அப்பொழுது எனக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அவரிடம் சிஷ்யனாகசேர்ந்து பிடில் வாசிப்பை கற்றுக்கொண்டால் நல்ல பெயர் சம்மாதித்துக்கோள்ளலாம் என்று நினைத்தேன்.



Group at Bombay
Sitting from left 3rd Mridangam RAMA DOSS, 4th Conjeevaram late NAYANA PILLAI
5th MARUNGAPURI GOPALAKRISHNA IYER

அதன்பிறகு சென்னை ஜலதரங்கம் வித்வான் ஸ்ரீ ரமணைய செட்டியார் அவர்களால் நடத்திவந்த ஸ்ரீ ராமநவமி உற்சவத்தில் பிடில் வாத்யத்துக்கே அவதாரம் எடுத்த காலஞ்சென்ற கோவிந்தசாமி பிள்ளை அவர்களுடன் தனிப்பிடில் கச்சேரியில் நமது ப்ரம்மஸ்ரீ அய்யர் அவர்கள் ஜோடி பிடிலாக வாசித்தார். அப்பொழுது இருவருடைய மனோபாவங்கள் ஒன்றாக இருந்ததற்கு அன்று கச்சேரி கேட்ட சங்கீத ஞானஸ்தர்கள் புகழ்ந்து பேசினதை நான்கேட்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தேன். சிறிதுகாலம் கழிந்து சங்கீதகந்தர்வராக விளங்கிய காஞ்சீபுரம் பிள்ளை அவர்களுடைய சங்கீத வித்யார்த்தியாக நான் சேர்ந்தேன். அப்பொழுது எனது குருநாதருடைய பாட்டுக்கச்சேரிக்கு ஸ்ரீ அய்யர் அவர்கள் ஒவ்வொரு கச்சேரிக்கும் பக்கவாத்யம் வாசிப்பார்.

என்னுடைய குருநாதருடைய சங்கீத அபிப்ராயங்களுக்கு ஒத்திக்கையாக "மனோதர்மம் கேடாது பக்கவாத்யம் வாசிப்பதில் இவருக்கு இணையானவர் இப்பொழுது வேறு ஒருவருமில்லை" யென்று எனது ஆச்சாரியார் சொல்ல கேட்டிருக்கிறேன்.

இவர் அநேகமாக காஞ்சீபுரத்திலே என் குருவீட்டில் தங்கியிருப்பார். அந்த சமயங்களிலே அபூர்வ ராகங்களை வாசிக்கும்படி சொல்லி அதைகேட்டு எனது குருநாதர் சந்தோஷிப்பார். அந்நாளிலே நான் தனிமையாக கச்சேரி செய்வதுண்டு. அப்பொழுதிலிருந்து எனக்கு பக்கவாத்யம் வாசிப்பதுண்டு.

எனது சிறிய சங்கீத ஞானத்தை பெருக்கச் செய்து இப்படிக்குபாடினால் நன்றாக இருக்கும் என்று பாவத்தை காட்டும்படி வாசித்து எனக்கு உற்சாகத்தை உண்டுபண்ணுவார். முக்கியமாக இவரிடத்தில் மேன்மையான குணங்கள் உண்டு. சங்கீத கச்சேரியில் பாடகஸ்தர்களுடைய ஞானத்தை நன்றாக அறிந்துகொண்டு அவரவர்களுடைய ஞானத்துக்குத் தகுந்தபடி வாசித்து இடைஞ்சலில்லாமல் கச்சேரியை மேன்மைப்படுத்துவார்.

இவர் ஸ்ருதி சுத்தமாகவும் லயப்பொருத்தமாகவும் வாசிப்பதில் ரொம்பவும் மேலானவர் என்று சொல்வதற்கு என்னுடைய மனப்பூரணமான அபிப்ராயத்தை தெரியப்படுத்துகிறேன்.

ஆதிய நாட்களிலிருந்த பெரிய சங்கீத வித்வசிகாமணிகளின் கௌரவமான நடை உடை பாவங்கள் இக்காலத்தில் இவரிடம்தான் நான் பார்க்கிறேன். இவர் நல்ல மனசும், அன்பும், ஆதரவும், உடையவர்.

இன்னாருக்கு ஸ்ரீ தண்டபாணி கடவுள் நீண்ட ஆயுளைத்தந்து இவருடைய சங்கீத ஞானத்தை அடிக்கடிக்கு சங்கீத வித்யார்த்திகள்கேட்டு அபிவிருத்தி அடையும்படிக்கு அருளளிக்க மிகுந்த உற்சாகத்துடன் என்னுடைய வந்தனங்கள் தெரிவித்துக்கொள்கிறேன்.

CHITTOOR SUBRAMANIYAM.

Mahamahopadhyaya
Dakshinatya Kalanidhi
Dr. V. SWAMINATHAIYAR.

Madras.

மருங்காபுரி பிடில் வித்துவான் ஸ்ரீமான் ஜீ. கோபால கிருஷ்ணையரவர்களை நான் 1904-ம் வருஷம் முதல் அறிவேன். சென்னையில் சில கனவான்கள் வீட்டிலும் சங்கீத சபைகளிலும் இவர் பிடில் வாசித்ததைக் கேட்டு இன்புற்றிருக்கிறேன். சங்கீதத்தின் கர்நாடக முறையிலும் புதுமுறையிலும் நன்ருகப் பயின்றவரென்பதை இவருடன் பழகியவர்கள் நன்ருக அறிவார்கள். பல கனவான்களும் சபையோர்களும் இவருடைய சங்கீத ஞானத்தைப் பாராட்டி அவ்வப்போது சென்னையில் தக்க சம்மானங்களை அளித்துக் கௌரவித்திருக்கிருர்கள். சங்கீத அபிமானிகள் இன்னும் சில தினங்களில் ஸ்ரீரங்கத்தில் ஒரு சபை கூட்டி இவருக்கு ஒரு தக்க சம்மானம் செய்து சிறப்பிக்க நிச்சயித்திருப்பது தெரிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

வே. சாமிநாதய்யர்.

CHEMBAI VAIDYANATHA BAGAVATHAR.

பிர்ம்மஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ண அய்யர்வாளை எனக்கு 35 வருஷமாக தெரியும். 1906ஞு தைமீ 25உ மலபாரில் கவளப்பாரை ஜமீன்தார் கல்யாணத்திற்கு கனம் கோவிந்தசாமி பிள்ளை அவர்களும் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களும் அழகன்னம்பி பிள்ளை மிருதங்கத்துடன் சோலோ கச்சேரி நடந்தது. எனக்கு அன்று 10 வயது. இவர்கள் சோலோ கச்சேரியில் சங்கராபரண ராகம் வாசித்து எந்துகு பெத்தல என்ற கீர்த்தனத்தை வாசித்தார்கள். அன்று முதல் இவர்கள்பேரில் அளவற்ற ஒரு போதுமானம் தோன்றியது. அதற்குப் பிறகு 1915-ல் எனது கச்சேரிக்கே அநேக தடவைகள் அதாவது 1941ஞு வரையிலும், வருஷத்தில் ஒன்றுக்கு ஆறு கச்சேரிக்கு குறையாமல் ஷெ கோபாலகிருஷ்ணய்யர் அவர்களே பக்க வாத்யம் வாசித்து வருகிருர்கள். இவர் பக்க வாத்யத்தில் பாடகர்களுக்கு ஒரு விதமான இடஞ்சலும் இராதென்று எனது அபிப்ராயம். இவர் பிடிலில் ஆரம்ப முதல் கச்சேரி முடிகிற வரையிலும் ஒரே மதுரமாகத்தான் இன்று வரையிலும் இருந்துவருகிறது. கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் வெகுகாலம் இம்மாதிரியே வாசித்துக்கொண்டிருக்க நான் பரமாத்மாவைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்.

செம்பை வைத்திநாத பாகவதர்.

"Sangeetha Bhoopathi"
Maharajapuram
R. VISWANATHA IYER.

Kumbakonam.

மருங்காபுரி சமஸ்தான வித்வான் ஸ்ரீமான் M. G. கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் பிடில் வாசிப்பது ஸ்ரீபரமாத்மா கோபாலன் கானம் செய்யும் வேணுவின் நாதத்தையும் சுவையையும் ஒத்தது. ப்ராசீன வித்வான்களான பூச்சி ஸ்ரீனிவாசய்யங்கார்வாள், கோனேரிராஜபுரம் வைத்திநாதய்யர்வாள், மதுரை புஷ்பவனம் அய்யர்வாள் முதலான கீர்த்திவாய்ந்த வித்வான்கள் காலம் முதல், ஸுஸ்வர, தாள, ராக பாவத்துடனும், கர்நாடக சுத்தமாயும், ரசமாயும் வாசிக்கும் சக்தி வாய்ந்தவர். ஷெயாருடன் நான்

பல தடவைகளில் கச்சேரி செய்ய நேர்ந்த காலங்களில் எனக்கு அளவில்லா உத்சாகத்தையும், கல்பனையும் தோன்றும்படி செய்யவல்ல பாக்யம் பெற்றவர் என்று தெரியவந்தது. அன்னாருடைய குணமும் சிநேகிதமும் பழக்கமும் பாக்கியமுள்ளவர்களுக்குத்தான் கிடைக்கும். "ஸமுத்திரத்திற்கு சமானம் ஸமுத்திரந்தான்" என்பதுபோல, சுருங்கச்சொல்லில் ஷெடியாருடைய பிடில் வாசிப்பிற்கு ஷெ யாரையேதான் சமானமாகவும் உதாரணமாகவும் கூறமுடியும்.

விசுவநாதய்யர்.

VIDWAN MUSIRI SUBRAMANYA IYER.

Vidwan Marungapuri Gopalakrishna Iyer was a Violinist of Prominence when I was in the cradle and by the time I entered into the arena he had seen and brilliantly won hundreds of battles and was **one of the mighties.** And for me to say about him is likely to be construed as presumptuous on my part. Yet I would not for the worlds miss the opportunity to do justice to my conscience.

Mr. Gopalakrishna Iyer has a style of his own in the art of Violin playing which is at once **scientific** and what is more **is most pleasing to the ear.** His method of Raga elaboration and permutations and combinations of Kalpana swaras with the masterful grip on the time are of **such high class** that many would like to copy but few could achieve.

Apart from the Musician, Mr. Gopalakrishna Iyer is **a Gentleman to the core.** It can be easily said of him that he is courteous to a fault.

May he live long, hale and healthy to delight thousands of Genuine Music lovers with his Masterly renderings, is the eternal prayer of

MUSIRI SUBRAMANYA IYER.

T. K. CHIDAMBARANATHA MUDALIAR B.A., B.L.

ஐம்பது வருஷத்துக்குமுன் தென்கோடியில் இருக்கிற திருநெல்வேலிச் சீமையில் சரியான கர்நாடக சங்கீதம் என்று சொல்லுகிற பழுத்த சங்கீதம் நடமாடி வந்தது நன்றாய் எனக்கு ஞாபகம் இருக்கிறது. தேசிகமோ வடநாட்டுப் போக்குகளோ அங்கே அவ்வளவாக ஒன்றும் கிடையாது. இவைகள் சமீபத்தில்தான் வந்து சங்கீதத்துக்குள் புகுந்துகொண்டன. பூர்வமான பாவ சங்கீதத்தைக் கேட்பது அரிதாய்த்தான் போய்விட்டது. இந்த நிலையில் ஸ்ரீமான் மருங்காபுரி கோபால கிருஷ்ணய்யர் அவர்கள் இந்த அருமையான சங்கீதத்தைக் கையில் அடக்கிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள் என்றால் நாம் செய்த புண்ணியந்தான். எத்தனையோ கச்சேரிகளில் யாருடன் எல்லாமோ வயோலின் வாசிக்கிறார்கள். அவர்களுடைய சொந்த வாசிப்பு வந்ததும் அது பூர்வமான பழுத்த சங்கீதத்துக்கு நம்மைக் கொண்டுபோய் விடுகிறது. அவர்களுடைய வாசிப்பை நம்மவர் அடிக்கடி கேட்கவேண்டும் என்பது ஒருபுறம் இருக்க, இளைஞரான சங்கீத வித்வான்கள் கேட்டு அநுபவிப்பது ரொம்பவும் அவசியமான காரியம், அப்படி

யானல்தான் நம்முடைய பூர்வமான சங்கீத முறையும் அதில் ஈடுபாடும் தமிழ் நாட்டில் உண்டாகும், அயலார் நம்முடைய சங்கீதத்தைக் கற்க முடியாதுதான். ஆனல் அதைக் கேட்டு நன்கு மதிக்கவும் வியக்கவுமே கூடும்.

பொதுவாக எந்தக் கலை சம்பந்தமாகவும், அயல் நாட்டு பாணியோ கருவியோ வந்து நமக்கு உதவி செய்வது கிடையாது. கலையின் உண்மையான உருவத்தைக் குலைத்துவிடுவதுதான் வழக்கம். இதற்கு ஒரு விலக்காய் இருப்பது வயோலினகிய சங்கீதக் கருவி. மேலைய நாட்டிலிருந்து வந்த கருவியா யிருந்தாலும் மேளம் வீணை இவைகளைப்போல சரஸமாக நம்முடைய சங்கீதத்தை உண்மையான பாணியில் வெளியிடக்கூடியது தான். அப்படி வெளியிடுவதற்கு அபாரமான பழக்கம்வேண்டும். சிலருடைய கையில்த்தான் வயோலின் தெளிவாய்ப் பேசும், அய்யர் அவர்கள் கையில் ரொம்பத் தெளிவாய்ப் பேசுகிறது.

அய்யர் அவர்களிடமிருந்து ஐம்பது வருஷமாய்க் கனிந்த சங்கீதத்தைக் கேட்கிருேம். கேட்டுக் கொண்டே இருக்கவும் ஆசைதான். அதனல் அவர்களுக்கு நல்ல தேக ஆரோக்யத்தையும் நீண்ட ஆயுளை யும் எல்லாம் வல்ல இறைவன் அருளுவாராக.

டி. கே. சிதம்பரநாத முதலியார்.

Tiruppampuram, Egmore, Madras.
FLUTE T. N. SWAMINATHA PILLAI.

ஸ்ரீகோபாகிருஷ்ணய்யர் அவர்களைப்பற்றி நான் மிக்க மகிழ்ச்சியுடன் சில குறிப்புகளைத் தெளிவுபடுத்த ஆசைப்படுகிறேன். ஸ்ரீ அய்யர் அவர்கள்பேரில் எனக்குப் பிரியம் ஏற்பட்டதற்குக் காரணம் அவர் 20 வருடத்திற்கு முன்னுள்ளவர்களால் பாடப்பெற்ற சாகித்யங்களையெல்லாம் தாமும் கற்று பாடகரோடு சேர்ந்துக் கச்சேரியை சோபிக்கச்செய்து வருவதுதான். அதுமட்டுமல்ல, ஸ்ரீ அய்யர் அவர்கள் வாசிக்கும்பொழுது பாட்டின் நிழல்போன்று ஒலிக்குமேயன்றி கண்டவாறு திரியாது. இது அவருக்கு ஒரு தனிச்சிறப்பு. புதுக்கோட்டையில் சுமார் 20 வருடங்களுக்கு முன்பு எனது புல்லாங் குழல் கச்சேரி ஒன்று நடந்தது. அச்சமயம் ஸ்ரீதெக்ஷிணமூர்த்தி பிள்ளையவர்கள் மிருதங்கம் வாசித்தார்கள். நமது அய்யர் அவர்கள் என்னேடுசேர்ந்து முதல் தடவையாக வாசித்தபோதிலும் பல நாளாக வாசித்து அனுபோகமடைந்தவரைப் போலிருந்ததைக் கண்டு எல்லோரும் ஆச்சரியமும் ஆனந்தமுமடைந் தார்கள். சங்கீத வித்வான்கள் யாராயிருந்தாலும் அவர் அன்பு விஸ்வாசத்துடனும் உண்மையோடும் பழகிவருவது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியையளித்து வருகிறது. இதுவரை என்னேடு சுமார் 50 கச்சேரி வரை சேர்ந்து வாசித்திருக்கிருர்கள். ஒவ்வொரு கச்சேரியும் நன்ருக அமைந்தேயிருக்கும். அவருடைய வாசிப்பில் ராகபாவமும், ஸ்ருதி சுத்தமும் மிகவும் போற்றக்கூடியதாகயிருக்கிறதை நான் கண்டு அடிக்கடி மகிழ்வதுண்டு. இத்தகைய அன்பர் ஸ்ரீஅய்யர் அவர்கள் நீடூழிவாழவேண்டுமென பிரார்த் திக்கிறேன்.

டி. என். சுவாமிநாத பிள்ளை

The 9th TYAGABRHAMA UTSAVAM at Srirangam

MADURA, MANI IYER Mylapore, Madras.
Sangeetha Vidwan

மகா-௱-௱-ஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் அவர்களைப்பற்றி எனக்குத் தோன்றிய சில அபிப்பிராயங்கள் எழுத சந்தர்ப்பம் நேர்ந்ததற்கு நான் ரொம்பவும் மகிழ்ச்சியடைகிறேன்.

அவர் எனது சித்தப்பா காலம்சென்ற மகா-௱-௱-ஸ்ரீ புஷ்பவனமய்யர் அவர்களுக்கு அடிக்கடி பிடில் வாசித்துக்கொண்டிருந்தபடியால் எனது சிறுவயதிலிருந்தே அவருடன் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது.

நான் கச்சேரி செய்ய ஆரம்பித்தபிறகு அடிக்கடி எனக்கு பிடில் வாசித்திருக்கிறார். அவருடைய வாசிப்பில் எனக்கு ரொம்பபிரீதியுண்டு. சுருதி சுத்தமாக வாசிப்பதுடன் பாட்டுக்கு ரொம்ப அனுசரிப்பாகவும் வாசிக்கிறார். அவர் ஆதாரஷட்ஜமத்தில் இரண்டு அல்லது மூன்று தந்திகளில் சேர்த்து கனமான நாதத்துடன் வாசிக்கும்போது ஹால் முழுதும் ஒரே நாதமயமாகி எல்லோரையும் பரவசப் படுத்துகிறது

அவர் அந்தரங்கமான பக்தியுடன் புஷ்ய பகுள பஞ்சமிதிதியில் சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் மகோற்சவத்தை ஒவ்வொரு வருஷமும் ஸ்ரீரங்கத்தில் தனது கிரகத்தில் நடத்திவருகிறார். அதில் எல்லா சங்கீத வித்வான்களும் கலந்து கொள்ளுகிறார்கள். ஸ்ரீ அய்யர் அவர்கள் சுத்தமான மனதுடன் அந்த உத்ஸவத்தை நடத்துகிறபடியால் அதில் நடக்கும் கச்சேரிகள் ரொம்ப நன்றாக அமைகின்றன.

அவர் நீடுழிகாலம் வாழ்ந்து தனது நாதமயமான வாசிப்பினால் எல்லோரையும் ஆனந்தத்தில் ஆழ்த்தி சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் உத்ஸவத்தையும் சிறப்பாக நடத்திவர அனுக்ரஹிக்கும்படி எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

மதுரை மணி அய்யர்.

PROF. R. SRINIVASAN, M. A. Trivandrum.

ஸ்ரீமான் மருங்காபுரி கோபாலகிருஷ்ண அய்யர் அவர்களுடைய பிடில் வாசிப்பை கேட்டவர்கள் ஒரு பொழுதுமதை மறக்க முடியாது. உயர்ந்த ஸங்கீதம், பரமசுத்தம், ராகங்களின் உண்மையான பாவம், நன்கு வெளியாகும். நுணிப்புல் மேய்ந்து பாமர ஜனங்களை சந்தோஷப்படுத்த முயலுகிற வழியை பின்பற்றினவரல்ல. வீண் ஆடம்பரங்களைக்கோருவதில்லை. அதுகளில் நம்பிக்கையும் கிடையாது. நமது கர்நாடக ஸங்கீதத்தின் உண்மையான பரம்பரை முறை என்ன என்று அறிய விரும்புவோர் கோபாலகிருஷ்ண அய்யரவர்களது பிடிலை கேட்கவேண்டும். நான் ஒரு தடவை அவரிடம் கேட்ட யதுகுல காம்போதி இன்னும் என் காதுகளில் த்வனித்துக்கொண்டிருக்கிறது. அவரைப் பெருமைப் படுத்துவது நமது ஸங்கீதத்தைப் போற்றுவதாகும். நமது சங்கீதத்தின் உண்மையான ஜீவன் நமது ஐயரவர்களைப்போன்ற சில வித்வான்களிடமே தற்காலம் காணப்படுகிறது. அத்தகைய பெரியோர் வெகுகாலம் நம்முடனிருந்து நமக்கும் நம் சங்கீதத்திற்கும் நலமளிக்க வேண்டுமாறு ஈசனை பிரார்த்திக்கிறேன்.

ரா. ஸ்ரீனிவாசன்.

Travancore Samasthana Vidwan
G. N. BALASUBRAMANIAN.

ஸ்ரீமான் மருங்காபுரி ஸமஸ்தான வித்வான் பிடில் கோபால கிருஷ்ணய்யர் அவர்கள் எனக்கு மிகவும் சிறிய வயதிலிருந்து நன்றாகத் தெரிந்தவர். அவர் வெகு காலமாக பிரபல சங்கீத பிடில் வித்வானாக தென்னிந்திய சங்கீத உலகில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். சங்கீதத்தில் மிகவும் முக்யமானதும் கிடைத்தற்கரியதுமான "உணர்ச்சி" என்ற பாகம் பரிபூர்ணமாக நிரம்பியுள்ள வாசிப்பு அவருடையது. நிதம் புதிது புதிதாகவும் விசேஷமான கற்பனையுள்ளதாகவும், கச்சேரி கேட்போருக்கு ஆனந்தப் பரவசமாகச் செய்யும் சில வாத்யங்களுள் இவர் ஒருவர். தனிக் கச்சேரி நான் கேட்ட அளவில் சிலர் தான் விசேஷமாகவும், அடிக்கடி கேழ்க்க ஆசையுண்டாகும்படியும் வாசிக்கத் தகுந்த சக்தியுள்ளவர்கள் அநேகமாக தற்காலத்தில் இல்லை என்றே சொல்லலாம். தனிக் கச்சேரிகள் அநேகம் இவரிடம் யான் கேட்டுள்ளேன். விசேஷ கற்பனா சக்தியுள்ள வாசிப்பு என்று என் எளிய அபிப்ராயம். தனிக் கச்சேரி விசேஷமாய் செய்பவர்களின் குறைவு இவர் பக்கவாத்யம் வாசிக்கும்போது கிடையாது. கச்சேரி நாயகனின் மனோதர்மம் ஓங்கும்படியாகவும், வளரும்படியாகவும், சுருதியின் சுத்தமும், நாயகனுக்கு எவ்வளவு சௌகரியம் தன்னால் செய்யமுடியுமோ அவ்வளவும் தான் ஸ்வயஸ்வரூபத்தோடு மறைத்துக்கொள்ளச் செய்யும் கௌரவ ஸ்வபாவமுள்ள பெரியாரென்று மிகவும் சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். புதிதாகவும் நவீனமாகவும் சங்கீதத்தில் கௌரவத்துடன் செய்கைகள் செய்ய விசேஷமான ஆசக்தியுடையவர். அது மாதிரி நோக்கமுள்ள இளம் வித்வான்களுக்கு ஊக்கமளிக்கும் குணமுடையவர். நாற்பது வருஷமாகத் தொழில் செய்து கொஞ்சங்கூட வித்யாஸமில்லாமல் மகா வித்வான்களுடனும் இளைய வித்வான்களுடனும் ஸமமாக உட்கார்ந்து கச்சேரியை விசேஷ மாக்குவதிலேயே நோக்கமுடைய கண்ணியமான ஸ்வபாவமுள்ள பெரியவர், சங்கீதத்தில் எவ்வளவு பெரியவரோ அதே மாதிரி நடந்துகோள்வதிலும் நடை உடை பாவனை பழக்க வழக்கங்கள் எல்லாவற்றிலும் மிகவும் எல்லோரும் அவாவுடன் பின்பற்றத் தகுந்த குணமுடையவரென்று குதூஹலத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சங்கீதத்துடன் சேரும் சில வருந்தத் தகுந்த குற்றங்களும் குறைகளும் எள்ளளவும் இல்லாதவர். மகா கௌரவமுள்ளவர். இவரைப்போன்ற பெரியோர்களை நம் சங்கீத நாட்டின் ரஸிகர்கள் வித்வான்கள் பொதுஜனங்கள் எல்லோரும் மிகவும் கௌரவத்துடன் ஆதரித்து அவர்களுடைய அனுபோக பூர்வமான சங்கீதத்தை நம் நாட்டு இளைஞர்கள் இளைய வித்வான்கள் கேட்டு ரஸித்து அபிவிருத்தி அடைய ஏற்படுத்தினால் நம் தாய் ஸ்ரீ சரஸ்வதிதேவியின் பூரண கடாக்ஷத்துக்கு பாத்திரமாவார்கள் என்பதில் ஐயமில்லை.

இப்பெரியார் நீடூழி காலம் வாழ்ந்து நமக்கு சங்கீத விநிகையளித்து நம்மை ஆசீர்வதிக்க இறைவனை பிரார்த்திக்கிறேன்.

In the cause of music,
G. N. BALASUBRAMANIAN.

Travancore Samasthana Vidwan Kumbakonam
RAJAMANICKAM PILLAI,
Violinist.

மருங்காபுரி சமஸ்தான பிடில் வித்வான் பிரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ண அய்யர் அவர்களுடைய பெருமை வாய்ந்த சரித்திரம் புஸ்தக ரூபமாக வெளிவருவது கண்டு என் மனம் சந்தோஷமடைகிறது.

ஸ்ரீ அய்யர் அவர்களின் யோக்யதாம்சங்களைப் புகழ, அவர்களின் சிஷ்ய பாவமுடைய என் போன்றவர்கள் திறனற்றவர்களெனினும் என் மனதிலுள்ள ஸ்ரீ அய்யர் அவர்களின் மேன்மைகளில் சிலவற்றையாவது தெரிவிக்காமலிருக்க முடியவில்லை.

ஸ்ரீ அய்யர் அவர்கள் பெரிய மனதுடையவர்கள். சங்கீத சாராம்சமான சுக பாவத்தையே தானும் அனுபவித்து அனுபவிக்கவும் செய்பவர்கள். சங்கீத சம்பந்தமான எல்லா அம்சங்களையும் நன்கு உணர்ந்து அதின் முக்கிய சாரத்தை கையாண்டு வருபவர்கள், நிரம்பிய மனது, நிம்மதியான தோற்றம், சுகானுபவம், முதலிய சிறப்புற்றவர்கள். ஸ்ரீ சத்குரு தியாகராஜஸ்வாமிகளின் அத்யந்த பக்தராவார்கள். அப்பொழுதும் இப்பொழுதுமுள்ள எல்லா சங்கீத வித்வான்களாலேயும் மரியாதையோடு கௌரவிக்கப் படும் ஸ்ரீ அய்யர் அவர்களின் சரித்திரம் புஸ்தக ரூபமாக வெளிவருவது ஸங்கீத வித்வான்களுக்கு கௌரவமளிப்பதாகும். ஸங்கீதத் துறையில் முன்னணிக்கு வருபவர்களுக்கு மிகவும் உபயோகமாகும்.

ஆகையால் நான் என் மனப்பூர்வமாக ஸ்ரீ அய்யர் அவர்களின் சரிதை வெளிவரும் நன்னாளை ஆவலோடு எதிர்பார்க்கிறேன், ஸ்ரீ அய்யர் அவர்களின் சரிதையை புஸ்தக ரூபமாக வெளியிடும் கைங்கரியத்தைச் செய்ய முன்வந்த பெரியோர்க்கும் என் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

பிடில் ராஜமாணிக்கம் பிள்ளை,
கும்பகோணம்.

UNIVERSITY OF MADRAS

Appreciation

It is a happy sign of the times, that functions are got up to honour distinguished musicians. It augurs well for the future of the great art which we have inherited as a precious legacy from the past. We are a musical race and the raga system that we have evolved is our gift to world's sangita. In former times, Maharajahs, Zamindars and Nobles vied with each other in honouring musicians of outstanding eminence. But at present unfortunately the number of such patrons has gone down considerably. Such monumental compositions as the 108 Raga tala malika of Ramasamy Dikshitar and the 72 Mela Ragamalika of Maha Vaidyanatha Iyer would never have been composed but for the prospect of munificent patronage. It may incidentally be mentioned that these two compositions are longer than the longest symphony of Beethovan. It is now therefore the duty of the society to perform this noble task of bestowing suitable honours on eminent musicians.

Vidwan Marungapuri Gopalakrishna Iyer is one of the distinguished Violinists of our times and **very richly deserves to be honoured.** He is one of the senior-most Vidwans. He is a devoted accompanist. He rigidly sticks to the laws of **Kacheri Dharma.** It is a pleasure and privelege for any musician to have him as his accompanist. He never asserts himself to the disadvantage of the principal performer and accompanies him faithfully. He is a model for all rising violinists

But one should not judge his genius for Violin playing by hearing him in the roll of an accompanist. For various reasons it is not possible for a Violinist, while in the roll of an accompanist to display his talents, He will have neither the time nor the opportunity to show such things as his mastery of bow technique, ability to perform double stops and flageolot notes and capacity to perform with ease in the higher positions. It is only in his solo concerts that he can reveal his genius in an adequate measure. **Mr. Gopalakrishna Iyer is superb in his solo concerts,** and springs surprises on his audiences. He reveals in such concerts the melodic beauties underlying rare ragas in a remarkable manner. One of the reasons which have contributed to his high standard of Violin playing is the fact that he has accompanied some of the giant musicians of the past and has also heard the brilliant Violinists of the preceding generation.

Pleasant in manners and unostentatious by nature, Vidwan Gopalakrishna Iyer has achieved a name and fame of which any musician can feel proud. **His name will go down to Indian Musical history** as the first person to practise the American Phone Violin and show its immense possibilities as a concert instrument.

P. SAMBAMOORTHY,
Head of the Department of Indian Music, and
President, Facalty of Fine Arts, Universty of Madras.

Travancore Samasthana Vidwan
SEMMANGUDI SRINIVASA IYER.

பிடில் வித்வான் மருங்காபுரி ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யரவர்கள் வாசிப்பை 1916ம் வருஷமிருந்து கேட்டுவருகிறேன். அன்னாரின் வாசிப்பை காலஞ்சென்ற கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர், மதுரை புஷ்பவனம் அய்யர் முதல் தற்காலம் ப்ரபலமாகவுள்ள வித்வான்கள்வரை பக்கவாத்தியமாகவும் தனிபிடிலும் அநேக கச்சேரிகள் கேட்டிருக்கிறேன். அன்னாரின் வாசிப்பில் அஸாத்யமான காம்பீரமும் ஜிலுஜிலுப்பும் கர்னாடக சம்ப்ரதாயமும் ரொம்பவும் அழகாகவும் கேழ்போர் மனதை பிரமிக்கச் செய்யுமென்பதில் ஸந்தேகமே இல்லை.

நான் எனது குருநாதருடன்கூட பாடிக்கொண்டிருக்கும்பொழுது எனது குருநாதரின் கச்சேரிகளுக்குப் பக்கவாத்யமாக அநேகம் கச்சேரிகள் வாசித்து இருக்கிறார்கள். நான் தனியா கச்சேரி

செய்ய ஆரம்பித்து எனக்கும் அநேக கச்சேரிகள் பக்கவாத்யம் வாசித்து என்னை உத்ஸாகப்படுத்தி கச்சேரியை நன்றாக பரிமளிக்கும்படிச் செய்து எல்லோரையும் கௌரவப்படுத்துவார்.

நல்ல மனதுடையவர். ஸமபுத்தி உடையவர். ரொம்பவும் கௌரவமான தோற்றமும் நடத்தையுமுடையவர். அன்னாருக்கு ஸத்குரு த்யாகப்ரமத்தினிடம் ப்ரத்யேகமான பக்தியுண்டு. அன்னாரிடத்தில் எனக்கு விசேஷமதிப்புண்டு. அவர் ரொம்பவும் பெரியார் என்பதில் ஸந்தேகமே இல்லை. அன்னாரைப் பெருமைப்படுத்துவது ஸங்கீத வித்வான்களையும் ஸங்கீத ரஸிகர்களையும் பெருமைப்படுத்தியதாகும். அவாளைப்பற்றி அதிகம் சொல்லுவது என்னையே ஸ்துத்யம் செய்துகொள்வதாக ஆகுமென்று எண்ணி இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன். ஸ்ரீமான் அப்பாவர்கள் நெடுங்காலம் மஹாஜனங்களையும் என் போன்ற சங்கீத வித்வான்களையும் ஆனந்தப்படுத்திக்கொண்டிருக்குமாறு கடவுளை ப்ராத்திக்கின்றேன்.

செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாஸன்.

GANA SAGARA VENKATARAMA IYER. Mudikondan.

Brahma Sri Marungapuri Gopalakrishna Iyer's name was a house-hold name long before I started my career as a musician. He is one of the very few who have Zealously guarded the high traditions of music and resolutely set their face against all attempts to lower the standard. He is graceful, dignified bearing and costly deportment, as refreshing as the elegant aroma that always surrounds him on as a halo, and the delightful polish of his conversation make him an aristocrat of musicians as he also has the distinction of being a musician among aristocrats.

As an accompanist he is a power of strength to senior vocalits as well as rising stars. As one of the pioneers among solo violinists, he has a long and glorious record. That music is a thing to be enjoyed and that it is a vehicle of **sublime culture** has always been his ideal. The deftness and **the long range of his bow**, the ever fresh 'Manodharma' and **ecstatic flourish of his Raga Alapana, the faultless Sruthi and resonance of his notes** and above all the innumerable glances that he conjures up as he moves this side and that with his lips twitched in a winsome smile **as in a trance of Nadopasana** these rise up before my mind's eye as I think of Sri Ayyar's charming personality, swathed in gorgeous silk and lace. May the Music delight for long over the sweet 'war blings of this bard at Her Shrine.

VENKATARAMA IYER.

R. NAGARAJA RAO, FLUTIST. KUMBAKONAM

I am a devoted friend of MR. GOPALAKRISHNA IYER for the past 35 years, and know him more than what others can know for his simple, cheerful, amiable, and well behaved, easy going nature with an air of firiendliness to one and all who approach him. It is an established fact that his sweet music never failed to bring his hearers to blissful divine ecstacy. I hope it will not be an exaggeration, if I say that he is **one of the foremost in the category of first rate vidvans of today**. Mr. Gopalakrishna Iyer is highly experienced in the field of music, who has undergone training at the hands of eminent vidwans of late, and who has played his violin in accompaniment to eminent Vidwans late Ramnad Srinivasa Iyengar, Koneriraiapuram Vythinatha Iyer, Pushpavanam Iyer, and Naina Pillai of Conjeevaram and many other high rank vidwans of past and present. His solo violin performance excels in all ways to keep the audience spell bound and the sweet timbre of his violin strings. would spare nobody of his hearers to remain unmoved by the production of sweet sound. **The Pristine glory of music has been safeguard by Mr. Iyer,** against the tinge of alloy and sophistication which have slowly crept in the fastidious world of music. His marvellous way of fingering and the production of sweet notes on the violin, brings back to our memory our late lamented Govindasami Pillai the famous Violinist whose departure from this world created a void in the musical atmosphere and also a set back to the progress of younger generation who are now novices. I deem it my proud prievilage and also a great honour to me to offer such long pent up sincere greetings to our friend for long life, prosperity and happineses

R. NAGARAJA ROW

P. R. SIVAN

"Sivaprasada"
Mylapore

புண்ய புராதன பாரத பூமியில் கர்நாடக ஸங்கீதமென்ற தங்கக்கனி விளைந்து தழைத்து வளர்வது நமது தென் நாடு. இங்குதான் எத்துணை ஸங்கீத சக்ரவர்த்திகள் தோன்றி மார்க்க ஸங்கீத கலை வளர்ச்சிக்கே பல வகையிலும் தம் வாழ்நாளை அர்பணஞ்செய்துள்ளார்கள்? வாணி தேவியும் நாரதரும் பயின்ற வீணை ஒலிப்பதுமிங்கே. கண்ணனும் முருகனும் தந்த வேய்ங்குழல்-வேணுகானம் ஜீவன்களைப் பரவசப்படுத்துவதுமிங்கே. திருமாலும் நந்தியும் வாசித்த ம்ருதங்க நாதம் பூஜித்து வளர்க்கப்பட்ட மகோன்னத தசையிலிருப்பதுமிங்கே. ராவணனும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் கண்ட மஹா நாடக வீணை (கோட்டு வாத்யம்) முழங்குவதிங்கே. பலவகை தந்தி வாத்யங்களும், துளைக்கருவிகளும் லய வாத்யங்களும் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாய் வளர்வதுமிங்கே. ஸங்கீத லக்ஷணத்தையும், ராகங்களையும் வகுத்துத்தொகுத்து விஸ்தாரஞ் செய்த லக்ஷண கவிகள் அவதரித்ததுமிங்கே. குசலவர்கள் கானம் கேழ்ப்பதுமிங்கே. பன்னிரு ஆழ்வார்கள், தேவாரம் திருவாசகம் திருப்புகழ் முதலிய இன்னிசை தேன்மாரி பொழிந்த அப்பர், ஸம்பந்தர், ஸுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரி, பட்டினத்தார்,

தாயுமானவர், ராமலிங்கஸ்வாமிகள் முதலிய பக்தர்களின் பக்திரஸ வெள்ளம் பாயும் பாடல்களுமிங்கே. ஜயதேவர், கபீர், துளஸீதாஸர், ராமதாஸர் ஸக்குபாய், மீராபாய், துகாராம் போன்ற பக்தர்களின் பாடல்களைப் பாடியுங் கேட்டும் உருகுவதிங்கே. ஸ்வரம், அலங்காரம், கீதம், வர்ணம், பதம்-தில்லானா-கீர்த்தனம் என்று, பல வகையில் மார்க்க ஸங்கீதத்தைத் தோலங்காரமாய்ச் சித்தரித்ததுமிங்கே. புரந்தரதாஸர், க்ஷேத்ரியர் த்ரிமூர்த்திகளென்று போற்றப்படும், த்யாகய்யா தீக்ஷிதர், சாமாசாஸ்த்ரிகள் ஸ்வாதித்திருநாள் மஹாராஜா, தஞ்சை பொன்னையா பிள்ளை போன்றவர்களின் தெய்வீகக் கீர்த்தனைகள் எத்தனை முறை கேட்டாலும் அலுப்பதுண்டோ? இன்னும் கவி குஞ்ஜர பாரதிகள், அருணசலக்கவிராயர், கோபாலக்ருஷ்ண பாரதிகள், வேதநாயகம் பிள்ளை முதலான வரகவிகளை நாம் மறக்க முடியுமோ? வாக்கேயகர்காள்—வாய்ப்பாட்டில் மஹா வித்வான்களான, மஹாவைத்யநாதசிவன், பட்டணம் ஸுப்ரஹ்மண்யய்யர், நூரணி பரமேச்வர பாகவதர், கோயமுத்தூர் ராகவய்யர், பல்லவி ஸோமு பாகவதர், பூச்சி ஸ்ரீநிவாஸய்யங்கார், சிவகங்கை வைத்தி, மடார் விளாகம் முத்தய்யா பாகவதர், எட்டய்யபுரம் ராமசந்த்ர பாகவதர், சிமிழி ஸுந்தரமய்யர், ராஜபுரம் வைத்யநாதய்யர், புஷ்பவனம் முதலியவர்களின் தெய்வீக கான இன்பத்தையும், ஹரிகதையென்ற வியாஜத்தில், பட்டி க்ருஷ்ண பாகவதர், திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்த்ரிகள், ஹரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் போன்ற மஹான்கள் நாடெங்கும் விசிறிவிட்ட அபூத கல்பனையான ஸங்கீத ரஸகண்டங்களின் மாதுர்யத்தையும் அதற்குள் நாம் பிடில் வாத்தியத்தில் பிரக்யாதி பெற்றவர்களுள் முக்கியமாய் மறைந்த திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், இலுப்பூர் பொன்னுச்சாமி பிள்ளை, திருச்சி கோவிந்தசாமி பிள்ளை இவர்கள் காலத்திலேயே புகழ் பெற்ற சிலருள் நமது மருங்காபுரி ஸ்ரீகோபாலகிருஷ்ண அய்யரும் ஒருவர். நான் இவரை 1914ம் ஆண்டில் இவர் ஸ்ரீமந்தகுமாரனுக்கு நடந்த உபநயன கல்யாண சந்தர்ப்பத்தில் ஸ்ரீரங்கத்தில் இவர் கிரகத்திலேயே முதல் முறை சந்தித்தேன். முதற் பார்வையிலே இவரை ஒரு யோகியோவென்று ஐயமுற்றேன். பிறகு வெரும் யோகியல்ல நாதானந்தத்தில் லயித்த யோகியென்றறிந்தேன். அவரது உயர்ந்த உத்தம குணத்தின் காரணமாய் அஜாத சத்ருவென்று சொல்லலாம். வசீகரமாயும் மிருதுவாயுமுள்ள அவரது உருவம் மொழி ஒழுக்கங்களை ஒரே முறை கண்டு கேட்டனுபவித்தாலும் அவரது நட்பை விரும்புவாரென்பது திண்ணம். நாங்களிருவரும் கண்டுகொண்ட அன்று முதல் இன்றளவும் அவருக்கு என்னிடம் பிரீதியும் அவரிடம் எனக்கு பக்தியும் பெருகியே சென்றுகொண்டிருக்கிறது. சங்கீதத் தொழிலாளிகளுக்குள் இவரைப்போல் ரஸிக சிகாமணிகளைக் காண்பதரிது. யாரையும் விளையாட்டாகக் கூடப் பரிஹஸிக்கவும் தூஷிக்கவும் இவருக்குத் தெரியாது. எந்த சங்கீதத்தையும் கேழ்ப்பார். கொஞ்சம் நன்றாயிருந்தால்கூட சந்தோஷிப்பார். முற்றிலும் வெறுப்பாயிருந்தால் மனதிற்குள்ளேயே வருந்தி சிரிப்பார். இது பெரியோர்களின் லக்ஷணம். இதை கோனேரிராஜபுரம் அய்யர் அவர்களிடமும் இவரிடமும் நிரம்பவும் கண்டிருக்கிறேன். எல்லோருக்கும் பக்கத்துணையாய் பிடில் வாசித்து முன்னுக்குக் கொண்டுவரும் பெருந்தன்மையைப் பல வித்வான்களிடம் காணமுடியாது. அந்த லயித்த குணமும் ஔதார்யமும் நமது அய்யரவர்களின் தனிச்சிறப்பு. தன்னை அடுத்தவர்களுக்குக் கபடமில்லாமல் வித்யா தானம் செய்வதோடு தனிகர்களிடமிருந்து இயன்ற அளவில் பொருள் உதவியும் செய்துவைப்பார். பெரிய பணக்காரனாக வேண்டுமென்று இவர் நினைத்திருப்பாரானால் இன்று லக்ஷப்பிரபுவாயிருப்பார். ஏனெனில் இவர் வாசிப்பின் மேன்மையை அனுபவித்தறியாத பிரபுக்கள், ஜெமீந்தார்கள், அரசர்கள் நம் தென்னாட்டில் இல்லையெனலாம். அத்தனை செல்வம் கிடைப்பதானாலும் அல்லது எத்தனை வறுமையால் வருந்த நேர்ந்தாலும் தான் ஆராதித்த வித்தைக்கு அவமதிப்பு நேர்ந்தால் அதை சகியார். இதனால் அவர் பணம் சேர்த்தவரல்ல, உதாரியானதால் சிலவாளியுமாவார். ஆனாலும் அவருடைய மனமும் முகமும் எந்நாளும் உல்லாசமாகவேயிருக்கும். இவரை யோகியென்று சொல்லத் தடை என்ன?

பிடில் வித்வத் திறமை சம்மந்தமாய் பேசப்போனால் அந்த வாத்தியத்தின் சுவையை தேவாமிருதமென்று சொல்லலாம். இவரது பிடில் சேர்ந்த எந்தக் கச்சேரியும் கௌரவமாயும் சபையைப் பரவசப்படுத்துவதாயுமிருக்கும். அசகாய சூரர்களோடெல்லாம் இவரது பிடில் கேட்டிருக்கிறேன். பூச்சி ஸ்ரீநிவாசய்யங்கார், கோனேரி ராஜபுரம் வைத்திநாதய்யர், மதுரை புஷ்பவனம் இவர்களுடன் அய்யரவர்கள் பிடில் கலந்த அனேகம் கச்சேரிகளை அனுபவித்திருக்கிறேன். பாடகர்களுக்கு உற்சாகத்தையும் கல்பனையையும் ஆனந்தத்தையும் விஸ்ரூர்ந்தியையும் கொடுப்பதில் காலம் சென்ற கோவிந்தசாமி பிள்ளையின் வாத்யமொன்றைத்தான் இதற்கு ஈடாகச் சொல்லலாம். பன்முறை கோவிந்தசாமி பிள்ளையும் இவரும் சேர்ந்து கச்சேரி செய்யக் கேட்டிருக்கிறேன். பிக்ஷாண்டார்கோவில் ஆவுடையாப் பிள்ளை என்ற ஜெமீந்தார் மருங்காபுரி ஜெமீந்தாரைப்போலவே இவருக்கு பிராணமித்ரர். அத்துடன் பெரிய சிஷ்யருமாவார். அவ்விருவரும்கூட சந்தோஷ காலத்தில் கலந்து பிடில் வாசிக்கவும் சில முறை அய்யரவர்கள் பிடிலுக்கு ஜெமீந்தார் அருமையாய் கெஞ்சிரா வாசிக்கவும் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். மகா வித்வான்களான பழம் பெரியோர்கள் காலப்பிரவாகத்தில் அனேகமாய் மறைந்துவிட்டார்கள். நம் தென்னாட்டினுடையவும் சங்கீத ரஸிகர்கள் சங்கீதத் தொழிலாளிகளுடையவும் பாக்ய வசத்தால் அய்யரவர்களைப்போன்ற இரண்டொரு பெரியோர்கள் நம் மத்தியில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது சுக ஜீவித தசையிலேயே அவர்களின் பெருமையறிந்து தகுந்த கௌரவமளிப்பதுதான் விவேகிகளின் கடமை. ஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யரவர்களின் நீடூழி வாழ்ந்து சங்கீத லோகத்திற்குப் பரிபூரணானந்தத்தை கொடுத்துக்கொண்டிருக்க வேண்டுமென ஸ்ரீரெங்கபதியைப் பிரார்த்திக்கிறேன். பிரும்மஸ்ரீ மகாமகோபாத்தியாய சாஸ்திர திலகம் மன்னார்குடி எக்யஸ்வாமி சாஸ்திரிகளின் குமாரனான பிரும்மஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் அவர்களுக்கு நம் அய்யரவர்களைப் பெருமைப்படுத்தும் பிரயத்னம் தோன்றியதில் ஆச்சரியமென்ன ? அய்யரவர்களைப் பெருமைப்படுத்துவது சங்கீத தேவதையின் உள்ளந்தை துளிர்ச்சிசெய்யும் என்பதில் சந்தேக ஆக்ஷேபங்களுக்கோ இடமில்லை.

P. R. SIVAN.

Asthana Sangeetha Vidwan, Mysore.
CHIKKA RAMA RAO.

Mr. M. G. Gopalakrishna Ayyar is known to me for over fifteen years. He is a contemprorary of the famous South Indian Violinist, the late Mr. Govindaswamy Pillai of Trichinopoly and belongs to the same class. I had also the opportunity of giving public musical performances along with Mr. Gopalakrishna Ayyar. I can vouch that **Mr. G. Gopalakrishna Ayyar is one of the oldest and best** among the Violinists of South India at present.

CHIKKA RAMA RAO.



Group at Tenkasi
Sitting from left : 1st MARUNGAPURI GOPALAKRISHNA IYER
3rd late B. C. AVADAI PILLAI 5th late Trichy GOVINDASAMI PILLAI (Violinist)

B. S. KRISHNAMURTHI SASTRI. Budalur.

இப்பவும் சில்பஸ்ரீ 15—12—39ப்படி அண்ணாமலை யூனிவர்ஸிடி ஸ்ரீமான் Y. மகாலிங்கம் சாஸ்திரிகள், M.A., M.L. அவர்கள் உள்ளது உள்ளபடியே எழுதியிருக்கும் ஆர்டிகிளை பார்த்து மிகச் சந்தோஷிக்கிறேன். அவை யாவும் போற்றத்தக்கதுடன் யாவரும் தெரிந்துகொள்வதும் அவசியமாகும். யான் எனது குருநாதன் கோனேரி ராஜபுரம் ஸ்ரீவைத்திநாதய்யர்வாளிடமிருந்து வந்த நாள் முதல் தாங்கள் வாத்யத்தில் கீர்த்திபெற்று தங்கள் சங்கீதம் அனுபவித்து வருவதில் வாத்யக் கலைக்குள்ள பிராசீன சம்பிரதாயத்துடனும் மிக காம்பீரியத்துடனும் வித்தை நிறைந்து சிறந்த கல்பனா சக்தியுடனும் சுசாதகத்துடனமைத்து மேன்மைபெற்று வந்துகொண்டிருப்பதில் சங்கீதாபிமானிகளுக்கென்று ஓர் தனிப் பெருமை அளித்துக்கொண்டிருப்பதுடன் யாவரும் கேட்டு ஆனந்தமடையும் பாக்யம் பெற்றுமிருக்கிறோம். பக்க வாத்யமாகக் கேட்டு ஆனந்திப்பதைவிட தனிமையில் சோலோவாகக் கேட்டு ஆனந்திப்பது மேன்மை பெற்றிருக்கிறது. இவை யாவும் முன்னோர்களின் ஆசரணைப்படி கற்றுணர்ந்து தந்தி வாத்தியத்தின் நுட்பமறிந்து மிகுந்த சாதன பலமும் மிக்க அனுபவத்துடன் ஸ்வானுபவமடைந்ததாகும். அதனை மிக்க கௌரவத்தோடும் பரிபாலித்து இயற்கை நற்குணத்தோடுகூடி சிறப்பித்துவரும் தங்களுக்கு இறைவனருளால் ஆரோக்ய திடகாத்ரமும் நீண்ட ஆயுளும்பெற்று யாவர்க்கும் ஆனந்தத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும்படி பிரார்த்திக்கிறேன்.

B. S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி,
கோட்டு வாத்யம்.

D. ANNASAMI BAGAVATHAR. THIRUVAIAR.

ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் சிறந்த பிடில் வித்வான். எனக்கு பனிரெண்டு வருஷ காலமாக ஷெயார் பழக்கமுண்டு—அன்னாருடன் சந்தித்து சம்பாஷிக்கும் சமயங்களை என் வாழ்நாட்களில் உத்தமமான நாட்களாக நான் கருதுவேன். மிருதுவான வார்த்தைகள். அன்னியர்களின் துர்ஸ்வபாவத்தை மாற்றும் தோற்றம், இதரர்கள் படிப்பினையாக்கிக்கொள்ளக்கூடிய உலகானுபவம், ஆடம்பரமற்ற தெய்வ பக்தி, பிறரை பெருமைப்படுத்தும் தன்மை முதலிய சிறந்த குணங்கள் ஷெயாரிடம் குடிகொண்டிருக்கின்றன. எனக்கு ஆசாரியாளான காலம் சென்ற பிரும்மஸ்ரீ பஞ்சாபிகேச சாஸ்திரிகள் அவர்களுக்கும் இவர் நெருங்கிய நண்பர். நான் சந்திக்கும் காலங்களில் பாகவதர் அவர்களிடமும் ஸ்ரீ தஞ்சை கிருஷ்ண பாகவதர் அவர்களிடமும் தான் அனுபவித்த கதா ரஸங்களை என்னிடம் சொல்லிச் சொல்லி என்னை சந்தோஷப்படுத்துவார். ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் அவர்களின் வாசிப்பை கேழ்க்க நான் ஆவல்கொண்டு அவர் கச்சேரி செய்யும் இடங்களுக்குப் போவேன். அவர் வாசிப்பதானது கேழ்க்கும் ஒவ்வொருவருக்கும்

भिद्यते हृदयग्रन्थिः छिद्यन्ते सर्वसशयाः ।
क्षियन्ते अस्यकर्माणि तस्मिन्दृष्टे परापरे ॥

என்று சொன்னபடி ஆனந்தத்தை உண்டுபண்ணும். எனது நண்பரான காலஞ்சென்ற ஸ்ரீகோவிந்தசாமி பிள்ளை அவர்களுடன் இவர் சேர்ந்து வாசித்துக் கேட்டிருக்கிறேன். மகா ராஜாக்கள், ஜெமீந்தார்கள், வித்வான்கள்கொண்ட சதஸ்களிடம் அதிகப் பழக்கமுள்ளவர். அன்னாரை கௌரவிப்பதானது ரஸிகர்களின் கடமையாகும். ஸ்ரீ அய்யர் அவர்கள் நீடூழி காலம் ஜீவித்து எல்லோரையும் ஆனந்தப்படுத்திக் கொண்டிருக்குமாறு இறைவனை வேண்டுகிறேன்.

D. அண்ணாசாமி பாகவதர்.

PARUR A. SUNDARAM IYER
Violinist & Lecturer.

University of Madras.

“ மனதைக் கவரும் சங்கீத வித்வான் ”

பிரும்மஸ்ரீ சங்கீத வித்வான் கோபாலகிருஷ்ணய்யரவர்களுக்கு அநேக நமஸ்காரம் தங்களுடைய உயர்ந்த குணத்தையும் பெருந்தன்மையும் புன்சிரிப்பு முகத்தையும் சங்கீத ஞானஸ்தர்களுடைய மனதை இழுக்ககூடிய ஸுஸ்வர சங்கீதமும் பிடிலின் வில்லுபிடிக்கிற அழகும் வில்லு திருப்புகிற அழகும் மத்ய காலம் வாசிக்கும்போது லய சுத்தமும், ராகபாவமும், தாங்களே அனுபவித்து வாசிக்கிறபடியால் ரஸிகர்களை பரவசப்படச் செய்தலும் முகவசீகாமும் பிராசீன சம்பிரதாயத்தின் முறைதவறாமலும் சங்கீதத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். மேல் சொல்லியிருக்கும் விஷயங்கள் யாவும் சங்கீத வித்வான்கள் தங்களிடம் கற்றிருக்கலாம். தங்களுடைய பிடில்வாசிப்பை 27 வருஷங்களாக நான் அனுபவித்து வருவதோடு தங்களிடத்திலிருந்து அநேக சங்கதிகள் கிரகித்துக்கொண்டு மிருக்கிறேன். காலம் சென்ற வீணை தனம்மாளிடமும் காலம்சென்ற பிரும்மஸ்ரீ N. கோட்டீஸ்வரய்யர் அவாளிடமும் எவ்வளவு மதிப்பு வைத்திருந்தேனென்பது தங்களுக்குத்தெரியும். அதே அன்பும் மதிப்பும் தங்களிடத்திலும் வைத்திருக்கிறேன். தாங்கள் அநேக காலம் தங்களுடைய ஸுஸ்வர சங்கீதத்தை என்னைப் போன்றவர்கள் கேட்டு அபிவிருத்தியடையும்பொருட்டு தாங்கள் தீர்க்காயுடனிருக்கும்படி ஸ்ரீகல்பகாம்பாள் சமேத ஸ்ரீகபாலீஸ்வரரை பிரார்த்திக்கிறேன்.

ஸுந்தரமய்யர்.

M. R. RAMA BAHAVATHAR

Kalpathi

ஸ்ரீமகாலிங்க சாஸ்திரிகள் M. A., M. L. அவர்களால் ஸ்ரீ பிடில் வித்வான் மருங்காபுரி கோபால கிருஷ்ணய்யர் அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தை எழுதியிருப்பதை பார்த்து ஆனந்தித்த பாலக்காடு M. R. ராம பாகவதரின் மனக்கொள்கையை கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளேன்.

ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யரின் வித்தையின் திறமைக்கும் அவர்களுடைய மேலான குணத்துக்கும் மிகவும் பொருத்தமாக சாஸ்திரிகள் எழுதியிருப்பது அமைந்திருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இதில் நான் எழுதக்கூடிய தென்னவெனில் ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் எனது குருநாதர் ஸ்ரீ அநந்தராம பாகவதர் கச்சேரிகளுக்கு எத்தனையோ வாசித்தவர். ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் வாசிப்பில் எனது குருநாதருக்கும் பிரியம் இவ்வளவென்று சொல்லமுடியாது. மிகச் சொல்வானேன். ஸ்ரீகோபால கிருஷ்ணய்யர் எனது குருநாதனின் சிஷ்யக்கிரமத்தில்கூட ஈடுபட்டவரென்பதைக் குறிப்பிட்டு அவர்களுக்கு தீர்க்காயுளையும் க்ஷேமத்தையும் கொடுக்கும்படி எல்லாம்வல்ல எம்பெருமானை வேண்டிக்கொண்டு இத்துடன் என் வந்தனத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

M. R. ராம பாகவதர்.

Veena K. S. NARAYANASWAMI IYER, Annamalai University.

ப்ரம்மஸ்ரீ மருங்காபுரி சமஸ்தான வித்வான் பிடில் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களுடன் நான் சுமார் 10 வருஷங்களாக நெருங்கிப்பழகும் பாக்யத்தைப் பெற்றவன். இவர்களுடைய சங்கீத ஞானத்தின் நுட்பத்தையும் வாத்யத்தைக் கையாளும் திறமையையும் நேரிலே கேட்டு அனுபவித்த நான் பல சந்தர்ப்பங்களில் மெய் மறந்திருக்கிறேன். அய்யாவர்கள் இளம் சங்கீத வித்வான்களின் முன்னேற்றத்தை அனவரதமும் நினைத்து அதற்காகப் பாடுபட்டு அவர்கள் சங்கீதத்தைத்தானும் கேட்டு பிறர்களும் கேட்கும் படிச்செய்து சந்தோஷிக்கும் பெருங்குண முடையவர். இப்படிப்பட்ட மஹான் அரோக திடகாத்திரராக நீடூழி வாழ்ந்துகொண்டு எங்களைப்போலுள்ள சங்கீத வித்தியார்த்திகளுக்கு ஆதரவு அளித்துக் கொண்டு இருக்கவேணுமாய் சர்வேச்வரனை அனவரதமும் பிரார்த்திக்கின்றேன்.

வீணை கே. எஸ். நாராயணஸ்வாமி அய்யர்.

T. K. RENGACHARI Annamalai University

ப்ரம்மஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர்வாள் அவர்களை என்னுடைய சிறு வயதிலிருந்து நெருங்கிய பழக்கம் பெற்று அதனால் பல நன்மைகளையும் சங்கீத உலகில் முன்னேற்றத்தையும் வித்யார்த்தி என்கிற முறையில் அடைந்தவன். அவர்களுடைய சங்கீத திறமையைப்பற்றியோ வாசிப்பின் உயர்வைப்பற்றியோ என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் நான் அதை அளந்து பார்க்கவேண்டுமென்று முயற்சி செய்வதுண்டு. ஆனால் ஸ்ரீ மருங்காபுரி அய்யர்வாளுடைய ஞானம் ஒரு கட்டுப்பாட்டிற்காகவாவது ஒரு அளவுக்காவது அடங்காததால் நான் பலதரம் ஏமார்ந்ததுடன் அவர்களுடைய கான வர்ஷத்தில் மூழ்கி அந்த இன்பத்தை பல தடவை அனுபவித்திருக்கிறேன். என்னுடைய வாழ்நாளில் பிரபலமாக வழங்கும் கனராகங்களை பல மாதிரியாக உயர்ந்த முறையில் வாசிக்கக்கேட்டிருக்கிறேன். எங்களைப்போலுள்ள சங்கீத வித்தியார்த்திகளும் சரி, பிரபலமான சங்கீத கோஷ்டிகளுக்கும் சரி, தலைமை வகித்து நடத்தும் சங்கீத ரத்னகா ஸ்ரீ ராமானுஜய்யங்கார்வாளைப்போல் உள்ள மஹா வித்வான்களுக்கும் சரி நமது மருங்காபுரி அய்யர்வாள் பிடில் வாசிக்கப்போகிறர் என்றால் ஒரு தனி பெருமையும் ஓர் பெரிய உற்சாகத்தையும் அந்த கச்சேரியில் காணலாம். சங்கீத உலகத்திற்கு தெய்வமாக விளங்கும் ஸ்ரீ குரு த்யாகப்ரஹ்மத்தின் உற்சவத்தை சுமார் 8 வருஷங்களாக ஸ்ரீரங்கத்தில் நடத்தி அந்த சங்கீத கோலாகலத்தால் சகல ஜனங்களையும் சந்தோஷப்படச்செய்து தானும் பரிபூர்ணமான த்யாக ப்ரம்மத்தின் கிருபைக்கு பாத்திரமாக ஆய்விட்டார்கள். அதனால் ஸ்ரீ மருங்காபுரி அய்யர்வாளை என்னுடைய சங்கீத மார்க்கதரிசியாக வைத்துக்கொண்டிருக்கிறேன். நமது அய்யர்வாள் அரோக திடகாத்திரத்துடன் என்னைப்போல் உள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் மஹா ஜனங்களுக்கு சங்கீத அமிர்தத்தை ஊட்டிக் கொண்டும் சிரஞ்சீவியாக அவர்களுடைய புன் முறுவல் பூத்த முகத்துடனும் எப்பொழுதும் எல்லா சங்கீத அபிமானிகளுடனும் அவர்கள் சல்லாபமாக இருக்கும் அந்த ஓர் காட்சியை நானும் எப்பொழுதும் பார்த்துக்கொண்டு இருக்கவேண்டுமாய் எல்லாம் வல்ல இறைவனடிபணிந்து ப்ரார்த்திக்கிறேன்.

சங்கீத பூஷணம் T. K. RENGACHARI.

ERODE VISWANATHA IYER,
Violinist.

ப்ரம்மஸ்ரீ என்னுடைய சத்குருவாகிய மருங்காபுரி சமஸ்தான வித்வான் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களுடைய வாசிப்பைப்பற்றியோ அல்லது குணத்தைப்பற்றியோ நான் அபிப்ராயம் எழுத யோக்யதை கிடையாதவனென்பதை அறிவேன். சில அன்பார்ந்த சினேகிதர்களுடைய வேண்டுகோளின் படி ஏதோ தெரிந்தவரையில் சிலதை எழுத முன் வந்தேன்.

முக்யமாக நான் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் அவர்களிடம் 1918 வருஷம், பிறகு 1922-ம் வருஷம் கொஞ்சகாலம் வித்யாப்யாஸம் செய்துகொண்டு இருந்தேன். அந்த சமயம் எனக்கு சங்கீதத்தில் கொஞ்சமும் ஞானம் கிடையாதென்பதை நான் எழுதவேண்டியதில்லை.

ஸ்ரீ குரு அவர்களும் ஸாதாரணமாக சொல்லிக்கொடுப்பதும் மிகவும் அபூர்வம்தான். அப்படிக் கிருந்தும் நான் இப்பொழுது அநேக இடங்களில் வித்வான்களாலும் ஞானஸ்தர்களாலும் ஸ்ரீ கோபால கிருஷ்ணய்யர் அவர்கள் மாதிரியே வாசிப்பதாகச் சொல்கிறார்கள்.

மேலும் ஸங்கீத அபிப்ராயமும் அவர்கள் மாதிரியே இருப்பதாகவும் சொல்லுகிறார்கள். எனக் கும் அது விஷயத்தில் நம்பிக்கையுண்டு. இதற்கு காரணம் ஸ்ரீ குரு அவர்களுடைய வாசிப்பைக்கேட்டு என் உள்ளத்தில் பதிந்ததுதான்.

ஸ்வர சுத்தமும் வில் கணிசமும் ராகங்கள் வாசிக்கும் தருணத்தில் மனோ தர்மத்திற்கு அளவே கிடையாதென்பதையும் நான் அவச்யம் சொல்லியாகவேண்டும். அவாளுடைய வாசிப்பைக்கேட்டுத்தான் நான் வாசிக்கிறேன் என்று சொல்லலாம்.

ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் அவர்களுடைய மனதும், ஸ்வபாவமும் மிகவும் பெருந்தன்மை யானது என்பதை நான் எழுதவேண்டியதில்லை. எல்லோருக்கும் தெரிந்த விஷயம். எனக்கு தெரிந்த வரையில் அவர்களுக்கு எப்பவும் அறிவாளிகளும் பெரியமனிதர்களும் பழக்கம். அவர்களுடைய வாசிப்பை பக்கவாத்யமாகக் கேழ்ப்பதைவிட தனி பிடிலாகக் கேட்டால் உண்மையான யோக்யதை யாவருக்கும் எளிதில் புலப்படும். இப்படி எல்லாவிதமான யோக்யதையும் பொருந்திய எனது குரு ஸ்ரீ கோபால கிருஷ்ணய்யர்வாள் இன்னும் அநேக காலம் க்ஷேமமாகவும், த்ருடமாகவும், அவாளுடைய வாசிப்பு மூலம் ஸந்தோஷமடையச் செய்யவேணுமாய் நான் பகவானை வேண்டிக்கொள்கிறேன்.

Erode VISWANATHA IYER.

V. RAJARAM IYER
Violinist

Golden Rock, Trichy

எனது குரு ஸ்ரீமான் மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் அவர்களைப்பற்றி எனது ஹ்ருதயத் தில் ஆழ்ந்து இருக்கும் உத்க்ருஷ்டமான அபிப்ராயங்களை வெளியிட ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்ததனால் உண்டான என் ஆனந்தம், அளவிடமுடியாது.

ஆதியில் எனது குருவின் சங்கீதத்தை நான் பலகச்சேரிகளில் கேட்டதிலிருந்து சங்கீத கலை யின் அரிய நுட்பங்களை அவர்களிடம்தான் அறிந்துகொள்ளவேண்டும் என்று தீர்மானித்து வெகு ஆர்வத்

துடன் இருந்தாலும், கலையின் உச்சஸ்தானத்தை வஹிக்கும் அவர்களிடம் எவ்விதம் அணுகுவது என்று கவலையுற்றிருக்கும்பொழுது, ராவ் ஸாஹிப் ஸ்ரீமான் ராஜகோபால் பிள்ளை பங்களாவில் தற்செயலாய் என்னை சந்தித்து தானாகவே என்னைத் தன்னுடன் அழைத்துப்போய் ஸங்கீதத்தின் நிஜஸ்வரூபத்தை காலக்கிரமத்தில் உணர்த்தியது, கடவுளின் எல்லையற்ற கருணையையும் எனது குருவின் அரிய பெருந்தன்மையையும் ஒருங்கே வியவஹரிக்கின்றன. தவிர தன்னுடைய தெளிவான அறிவின் பாவ முதிர்ச்சியினால் அவ்வப்போது உதயமாகும் துல்லியமான கல்பனைகளை அனுபவத்தில் வாசித்து எப்பொழுது எத்நனை தடவைகள் கேட்தும்பொழுதும் அவ்வப்பொழுது புதிய உணர்ச்சியுடன்கூடிய உருவான ராக பாவத்தைக் கேட்போர் ஹ்ருதயத்துட்புகுந்து உடல்முழுதும் பரவி, புளகாங்கிதம் அடையும்படி செய்வதைத் தவிர லௌகீகமான எவ்வித உலக விஷயங்களிலும் பற்றில்லாமல் தாமரையிலை நீர்போல் ஒட்டியும் ஒட்டாமலிருப்பது அவர்களது இயற்கையாக இருக்கிறது.

எனது குருவோடு சென்றிருந்த பல சமயங்களில் ராமனாதபுரம் சேதுபதி மஹாராஜா கலியாணத்தில் ஒரு கச்சேரியில் ஷை மஹாராஜா எனது குருவின் கானரஸத்தைக்கேட்டு பாதிக்கச்சேரி நடந்துகொண்டிருக்கும்பொழுது சொல்லியனுப்பி மறுநாளும் தங்கி தனியாக கச்சேரிசெய்யுமாறு செய்து மிகுந்த ஸன்மானங்கள் செய்ததும், சேத்தூர் ஸமஸ்தானத்தில் ஒரு கச்சேரியில் ஜமீன்தார் அவர்கள் மோஹனராகம் விஸ்தாரமாக வாசிக்கச்செய்து கேட்டு பரவசமடைந்து, அவ்விட மற்றுமுள்ளோரையும் தன்னுடைய தேக அசௌக்கியத்தையும்கூட மறந்து வெகுநேரம் மிகவும் சிலாகித்துப் பேசியதும், தஞ்சாவூரில் நடக்கும் ராமலிங்கஸ்வாமி உத்ஸவத்தில் ஒரு சமயம் சாமா ராகம் மூன்று நிமிஷங்கள் நேரம் மட்டில் வாசித்து, கச்சேரி செய்பவருக்கும், மற்றும் அவ்விடமுள்ள எல்லோருக்கும் மூன்று மணி நேரம் வாசித்தது போலவும் எப்பொழுதும் காதிலேயே கேட்டுக்கொண்டிருப்பது போலவும் செய்ததும் ஸங்கீதக்கலையில் அவர்கள் வஹிக்கும் உன்னத நிலையை தமக்குத்தாமே பேசுகின்றன.

மேலும் அவர்கள் தனிக்கச்சேரி செய்வது இப்படி என்றும் பக்கம்வாத்தியம் வாசிக்கும்போது பாடுகிறவர்களுக்குத் தகுந்தபடி ஒவ்வொருவருக்கும் தனித்தனியே அவர்கள் பாவம் கல்பனையையே அவர்களே ரஸிக்கும்படி வாசித்து, அவர்களை வெகுநன்றாகப் பாடச்செய்து அப்பொழுதே தன்னுடைய அதியத்புதமான உயர்ந்த கல்பனா சக்தியை பாவரஸம் ததும்பும்படி கேட்போர் சுலபமாகவும் லலிதமாகவும் ரஸிக்கச்செய்து அவர்கள் மனம் ஒன்றுபட (ஏஹாக்ரம் அடைய) செய்வதும் உலகறிந்தவிஷயமே.

ஸர்வ வியாபியான கடவுள் அவர்களுக்கு அரோக திடகாத்திர சரீரத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுத்து ஸங்கீதக்கலையின் உண்மை தத்துவத்தை நம்நாட்டில் நிலைநாட்டும்படி அருள்புரியுமாறு நான் பிரார்த்திக்கிறேன்.

V. Rajaram Iyer

நேரிசை வெண்பா

பூபாலர் போற்றப் பொருவில் பிடிலிசைக்கும்
கோபால க்ருஷ்ண குருபரனற்—சீர்பாதம்
வந்தித்து வாழ்த்தி மனத்துரினைவேற் கெதுதான்
புந்திக்குத் தோன்ருப் பொருள்.

மருங்காபுரி கோபாலகிருஷ்ண அய்யர் அவர்களை அறியாதவர் சங்கீத உலகில் எவருமிலர்.

சங்கீத சார்வ பௌமர்களாகிய வித்துவான்கள் வளரும் திகழ்ந்த அந்த நன்னாளிலே அவருள் ஒருவராக விளங்கியவர் நமது ஐயரவர்களும். இவர்களைக் குறித்து, அண்ணாமலை பல்கலைக்கழகத்து வட மொழி ஆசிரியராக விளங்கும் பிரம்மஸ்ரீ பு. மஹாலிங்க சாஸ்திரியாரவர்கள், சில்பஸ்ரீ என்னும் மாசிகையில், "ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் நாடறிந்த சங்கீத வித்வான். பழைய ஜாம்பவான். மிக்க கௌரவத்தை வஹித்தவர். பெரிய தோரணையில் தொழில் நடத்தி மணமாக வாழ்பவர்" என்றெழுதியிருப்பது கேவலம் உண்மையே அன்றி மற்றில்லை.

ஐயரவர்கள் பிறந்த ஊர் மதுரை. ஆயினும் இவருடைய பிடில் கானாம்ருதத்தை உலகம் பருகிக் களிக்குமாறு செய்வித்த பெருமை மருங்காபுரி சமஸ்தானத்துக்கே உரியதாகும்.

மருங்காபுரி சமஸ்தானாதிபதிகள் ஐயரவர்களைத் தமது ஆஸ்தான வித்துவானாக நியமித்த நாளிலே (1911ல்) ஒரு மாபெருஞ் சபை கூட்டுவித்து, அதன்கண் இவருடைய அரிய வித்துவத் திறமையை உலகம் கண்டு வியக்கப் பண்ணுவித்துத் தமது நன்கு மதிப்பை ஐயரவர்களுக்குச்செய்த வெகுமானத்தின் மூலம் தெரியப்படுத்தினார்கள். சமஸ்தானாதிபதிகள் கூட்டுவித்த சபையை அலங்கரித்தோருள்ளே, மதுரை மைசூர் கிருஷ்ணய்யங்கார், எட்டையபுரம் இராமச்சந்திர பாகவதர், திருவையாறு சுப்பிரமணிய ஐயர், திருச்சி பிடில் வித்வான் கோவிந்தசாமி பிள்ளை, கும்பகோணம் மிருதங்க வித்வான் அழகியநம்பியா பிள்ளை முதலியோர்கள் குறிப்பிடத்தக்கோராவர். இவருள்ளே கும்பகோணம் அழகிய நம்பியா பிள்ளையவர்கள் அன்றையக் கச்சேரிக்கு மிருதங்கம் வாசித்தார்கள். சமஸ்தானாதிபதிகள் ஓராயிர ரூபாய் சம்பாவனையும், ஒரு தங்கச் சங்கிலியோடிணைத்த பொற்பதக்கமும் பரிசிலாகக் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

ஐயரவர்கள் தாம் பெரிய வித்துவானாக விளங்குவதோடு நில்லாமல், சிலர் பலரையும் தக்க வித்துவான்களாகத் திகழச் செய்துள்ள பேராசிரியருமாவார். ஐயரவர்களுக்குக் கடமைப்பட்டுள்ள சிஷ்ய வர்க்கத்தாருள்ளே—இன்று பிரபலஸ்தர்களாக விளங்குகின்ற—(1) ஈரோடு விசுவநாதய்யர், (2) பொன்மலை ராஜாராமய்யர், (3) ரேடியோ வித்துவான் V. சுந்தரேசய்யர் முதலியோர் முக்கியமானவர்கள்.

இத்தகைய சிறப்புடைய ஐயரவர்களை நான் என்னுடைய பதினாறவது பிராயத்திலே சென்றடைந்தேன்.

இந்த மஹானுபாவரை ஆசிரியராக அடையும் பாக்கியம் எனக்குக் கிட்டியதும் சேத்தூர் சமஸ்தானாதிபதிகளாகிய வடமலைத்திருவணாதசேவுகப் பாண்டிய மஹாராஜா அவர்களாலேயாம். அச் சமஸ்தானாதிபதிகளோ, தமது ஆஸ்தான வித்வான் மடவார்வளாகம் முத்தைய பாகவதரவர்களாலும், இராமநாதபுரம் சமஸ்தான வித்துவான் பூச்சி ஐயங்காரவர்களாலும் நன்கு மதிக்கப்பெற்ற, கெஞ்சிரா மஹா வித்துவான் மாமுண்டியா பிள்ளையவர்களிடம் லயவியவகார சாரவிசாரம் செய்து கைதேர்ந்த கலா



The occasion GOPALAKRISHNA IYER was recognised Marungapuri Samasthana Vidwan

நிபுணராவார்கள். அத்தகைய மன்னர்களுடைய நிருபம் கண்டு, சிறியோனாகிய என்னையும் சிஷ்யனாக ஏற்றுக்கொண்டு, இசை நுணுக்கம் பலவும் புலனுறச் செய்வித்து, அந்த சேத்தூர் மன்னரவர்களே தமது ஆத்தான வித்துவானாக என்னை ஸ்வீகரிக்குமாறு பண்ணுவித்த பரம புருஷர் நமது ஐயரவர்கள். சங்கீத உலகிலே திக்கு விஜயம் செய்த கலா நிபுணராகிய காஞ்சிபுரம் நயினா பிள்ளையவர்கள் தம்முடன் தொழில் புரியுமாறு என்னை சுமார் பத்து வருட காலம் கொண்டிருந்தமைக்குக் காரணம் நான் ஐயரவர்களுடைய சிஷ்யனானமை ஒன்று தவிர வேறென்ன உண்டு?

ஐயரவர்கள் மிகுந்த தெய்வ பக்தியுள்ளவர்கள். அவர்கள் தம்முடைய சொந்தச் செலவிலே சென்ற பத்து வருட காலமாக ஸ்ரீதியாகையரவர்களுடைய மஹோத்சவத்தைக் கொண்டாடி வருவது உலகறிந்த விஷயம்.

இப்பெருந்தன்மையாளராகிய ஐயரவர்கள் அரோக திடகாத்திரராய் பரமைசுவரிய சம்பத்தினராய் நெடுங்காலம் வாழ்ந்து லோகோபகாரமான பணிகளாற்றிச் சிறக்குமாறு திருவருள் புரியவேண்டுமென மதுரை ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர்களுடைய திருவடியிணைகளிறைஞ்சும்,

சிஷ்யன் பிடில் சுந்தரேச பட்டர்.

A. R. S. Subramania Pillai,
Thiruvizhimizhalai Brothers.

Koranadu,
Mayavaram.

மருங்காபுரி சங்கீத வித்வான் பிரும்மஸ்ரீ பிடில் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களுடைய பிடில் கச்சேரியை சுமார் 25 வருஷ காலங்களில் பெரிய வித்வான்களோடு சேர்ந்த கச்சேரிகளிலும் சில தனிக் கச்சேரிகளிலும் நாங்கள் கேட்டு ஆனந்தித்திருக்கிறோம். ஸ்ரீ அய்யர் அவர்கள் ராக பாவத்திலும் உருப்படிகள் வாசிப்பதிலும் ஸ்வரம் வாசிப்பதிலும் மற்றும் எந்த வகையிலும் குறைவில்லாது மிக்க விசேஷமாக வாசித்து நாங்கள் கேட்டு ஆனந்தித்திருக்கிறோம்.

மேலும் காலம் சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கோவிந்தசாமி பிள்ளை அவர்களும் நமது அய்யர் அவர்களும் ஜோடியாய் பிடில் வாசித்துக் கேட்டதில் அது தேனும் பாலும் கலந்தாற்போலிருந்ததென்பதை நாங்கள் நேரில் அனுபவித்து ஆனந்தித்திருக்கிறோம். அப்படி இரண்டுபேர் ஜோடியாய் வாசிப்பதென்பது இருவருடைய சங்கீதத்திறமையும் ஒன்றுபோலிருந்தால்தான் மேற்கண்டபடி இருக்குமென்பது குறிப்பிடத்தக்கது.

நிற்க, காலம் சென்ற சங்கீத வித்வான் காஞ்சீபுரம் ஸ்ரீமான் நாயனா பிள்ளை அவர்களோடு ஸ்ரீ அய்யர் அவர்கள் கச்சேரியை அனேகந்தடவை கேட்டிருக்கிறோம். ஸ்ரீ பிள்ளை அவர்களோடு கச்சேரியில் சேர்ந்து வாசிப்பதென்பது சாதாரணமானவர்களால் முடியாதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நமது அய்யர் அவர்களைப்போலுள்ளவர்கள்தான் அந்தக்கச்சேரிகளில் வாசிக்க முடியுமென்பது குறிப்பிடத்தக்கது.

நிற்க ஸ்ரீ அய்யர் அவர்களின் உண்மையான சங்கீத வித்வத்தின் திறமையை நன்கு உணர்ந்து இவ்வைபவத்தை நடத்த முன் வந்தது உண்மை சங்கீதத்தின் பெருமைக்கே தவிர சாதாரணமாய் ஸ்ரீ

அய்யர் அவர்களைப் புகழ்வதாவது தற்காலத்தில் சிற்சில இடங்களில் பட்டம் பதவிகள் என்ற சிலவைபவங்கள் நடத்துகிறார்களே அதைப்போல் அல்லாது ஸ்ரீ அய்யர் அவர்களின் யோக்யதையை நன்குணர்ந்து இந்த வைபவத்தை நடத்த முன் வந்தவர்களுக்கும் மேற்கண்ட வித்வான் ஸ்ரீ அய்யர் அவர்களுக்கும் எங்களுடைய மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

திருவீழிமிழலை சகோதரர்கள்.

TRICHY BROTHERS
Sangeetha Vidwans

Nangapuram Stores
Teppakulam P. O. Trichy.

இப்பூவுலகில் எல்லா தேசத்தினரும், இயற்கையாகவே ஸங்கீதத்தின் மூலமாய் தம் தம் மனோ பாவங்களை வெளிப்படுத்தி வருகின்றனர். நம் இந்தியா தவிர மற்ற எல்லா நாடுகளிலும் தைர்யம், ஆவேசம் இவைகளை தூண்டுவதற்கு ராணுவ பாண்டு முதலிய வற்றாலும் மற்றப்படி நடனம், கேளிக்கை முதலிய உல்லாசப் பொழுதுபோக்குக்காக ஸ்ருதி சுத்தமுள்ளதும் ஆனால் கட்டுப்பாடில்லாததுமான, தனித்தனி இசைத்தொகுதிகளை அமைத்து ரஸித்து வருகின்றனர்.

ஆனால் நம் நாட்டில் அதிலும் நம் தமிழ் நாட்டில், கர்நாடக ஸங்கீதத்தை மஹான்களாகிய நம் முன்னோர், ராகம், பாவம், தாளம் என்று மூன்று விதமாகப் பிரித்து அதில் நவரஸங்களும் ததும்ப, மூன்று ஸமுத்திரங்கள் என்னும்படி ப்ரஸ்தார கிரமங்களையும் அமைத்து, மனித வர்க்கத்தின் லக்ஷிய பொருளாகிய துக்கக்கலப்பற்ற பேரின்ப நிலையை அடைவதற்கு இதை மூல ஸாதனமாக்கி உலகத்திற்கு வழி காட்டியுள்ளனர். ஆனால் சில நூற்றாண்டுகளாக பல்வேறு அரசியல் மாறுதல்களால் உருக்குலைந்து போயிருந்த நம் கர்நாடக ஸங்கீதம் சென்ற நூற்றாண்டில்தான் ஸத்குரு 'ஸ்ரீ த்யாகராஜ ஸ்வாமிகளால் புத்துயிரளிக்கப்பெற்று இன்னும் அம்மஹானால் செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான கீர்த்தனங்கள் ரூபமாக பூர்ண கலையுடன் ப்ரகாசிக்கிறது.

இந்த லக்ஷியத்தை முன்னிட்டே திருவையாற்றிலும், ஸ்ரீரங்கத்திலும் இன்னும் இதர இடங்களிலும் ஸ்ரீத்யாகப்ரும்ம ஆராதன மஹோத்ஸவம் வித்வான்களாலும் அபிமானிகளாலும் கொண்டாடப் பட்டு வருகிறது. இவ்விதமாக எல்லாருக்கும் க்ஷேமத்தை தரக்கூடிய ஸத்கைங்கர்யத்தில் ஈடுபட்டிருக்கும் மஹா வித்வான் மருங்காபுரி ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யரவர்களின் பரிச்சயம் ஏற்படும்படியான பாக்கியம் எங்களுக்கு முதன் முதலில் 1933ம் வருஷம் கிடைத்தது. பல வருஷங்களாக மிகப் பிரபல வித்வான்களாலும், மஹா ஜனங்களாலும், அவர் போற்றப்பட்டு வருகிறார் என்று நாம் புதிதாகச் சொல்லத் தேவை இல்லை. முன்னுக்கு வரக்கூடிய இளம் வித்வான்களிடம் ஜாதிமத வித்யாஸமின்றி அய்யரவர்கள் காட்டும் அன்புக்கும் ஆதரவுக்கும் ஸங்கீத உலகம் அன்னாருக்கு என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறது.

அய்யரவர்களின் ஸங்கீதம் எவ்வளவு உயர்ந்ததோ அவ்வளவு உயர்ந்த குணம் அய்யரவர்களிடம் நிறைய உண்டு. மிகுந்த உதார குணமும் எப்பொழுதும் சிரித்த முகமும், கம்பீரமான தோற்றமும் மாசு மறுவற்ற ஆடைகளும் உள்ள அன்னாரை ஓர் ஸங்கீத ஜமீந்தார் எனலாம். தினம் தினம் நாம் அவர் வாசிப்பை கேட்டாலும் ஒவ்வொரு நாளும் புது உருவோடு ராகங்கள் நமக்கு தோற்றமளிக்கின்றன, முக்யமாக யதுகுல காம்போதியும், பிஹாக்கும் நிஜமாகவே அய்யரவர்களிடம் பேசுகின்றன.

இம்மஹா வித்வானை கௌரவிப்பதற்காக பல துறைகளிலுமுள்ள பிரமுகர்கள் முன்வந்திருப்பதாக அறிகிறோம். அன்று அன்னாரை கௌரவிப்பதானது நம் கர்நாடக ஸங்கீதத்தையே கௌரவிப்பதாகும். எல்லாம் வல்ல இறைவன் நம் அய்யரவர்களுக்கு ஆயுராரோக்கியத்தையும், ஐச்வர்யத்தையும் அளித்து மேன்மேலும் அவர் நம் நாட்டுப் புராதனக் கலையாகிய ஸங்கீதத்துக்கு தொண்டாற்றிவர அருளுமாறு பிரார்த்திக்கின்றோம்.

T. S. Ramachandran,
T. S. Swaminathan,
Trichy Brothers.

Golden Rock

Sri Gopalakrishna Iyer has been, and is a shining star in the musical firmament for some 30 years now. Himself a " big gun ", and an expert of a very high order in the field of instrumental music, he has accompanied every one of the great vocalist of our generation like Ettiyapuram Ramachandra Bagavathar, Jalatharangam Subbier, Palghat Anantharama Bagavathar, Conjee Nayana Pillai, Konarajapuram Vaithinatha Iyer, and Pushpavanam Iyer amongst those who are now no more and Tiger Varadhachariar, Ariyakudi Ramanuja Iyengar and others amongst those now happily living.

It is common knowledge that when the late Govindasamy Pillai and the distinguished subject of this " appreciation " played duets years back, their hearers felt themselves transported to ethereal heights, and they did not desire anything but that these two giants of the Art should continue to work in unison for ever. Alas, Sri Govindasami Pillai is no more. But happily for us, **Sri Gopalakrishna Iyer is holding aloft the banner of true Carnatic music** His rich and wide experience is there for the juniors in the field to learn and profit by.

Music is divine, but creative music is diviner still. Sri Gopalakrishna Iyer's delineation of rare and common ragas, proves beyond doubt that they can be made really pleasing even to the common folk when handled by Masters of the Art. His deft manipulation of the Violin brings out all its latent and rich possibilities. It is said with a great degree of truth that next to the human voice, the violin ranks the foremost in musical instruments. Sri Gopalakrishna Iyer fully vindicates the truth of this statement when he plays on the Violin.

Sri Gopalakrishna Iyer as a man is an amiable gentleman and a good cosmopolitan. Ever beaming with smile, urbane in his disposition, fired with a robust optimism, which sees things in their true perspective, noble and generous to a fault, patient, tactful with a predisposition to enjoy fun and see the good side of life Sri Gopalakrishna Iyer rightly feels that money is not the " be all and end all " existence but **considers that the development of the Art for its own sake, is the first and the foremost duty of a musician.** In short, he believes in making the Art sublime, disdaining filthy lucre, and name and fame will then come

unasked. It is in this spirit of true Nishkamakarma, that Sri Gopalakrishna Iyer has been and is labouring all these years as a votary of " Gandharvas ".

To this doyen in the field of instrumental music we offer our respectful congratulations and pray that he may live a rich and happy life for many years to come.

V. Ananthanarayanaiyer.
P. V. Thiagarajan.
A. Natarajaiyer.
I. Subramaniaiyer.

N. Sethuraman,
Head Clerk & Acctt. Colony Committee
Office, Golden Rock.
G. Rengachariar,
C.C. Electrical Engineer's Office.
S. Dakshinamurthy Iyer,
Colony Committee Office,
Golden Rock.

Muthaia Pillai. Palani.

ஸ்ரீமதேய் மகாலிங்கம் சாஸ்திரியாரவர்கள் எம்.ஏ., எம்.எல்., அண்ணாமலை யுனிவர்ஸிட்டி அவர்களால் 15—12—39ல் சில்ப்ப ஸ்ரீயில் முதலில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தைப் பார்த்ததிலும் எனக்கு தங்களை 35 வருஷ அனுபவத்தில் அனேகம் கச்சேரிகளிலும் தங்களுடைய கானத்தை அறிந்து எனது சிற்றறிவுக்கு தோன்றியவரை ஸ்ரீமதேய் மகாலிங்க சாஸ்திரியாரவர்கள் தங்களைப்பற்றி எழுதியது ரொம்பவும் திருப்திகாமானதாகவே தோன்றியது. ஆனதினால் எனது குமாரன் மிருதங்கம் சுப்பிரமணியன் அபிப்பிராயமும் அப்படியே இருப்பதால் அன்புடன் மகா வித்வான்க்ள் தங்களுக்கு கொடுத்ததோடு இதையும் தங்களுக்கு அன்புடன் எழுதியதையும் பிரிண்டு செய்து கொள்ளும்படி பூரண அபிமானத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

பழனி மிருதங்கம் மூத்தய்யா பிள்ளை.

M. Padhmanabha Rao. Srirangam.

கர்நாடக சங்கீத உலகில், சங்கீதாபிமானிகளால் போகிக்கப்பட்டும், புகழப்பட்டும், போற்றப் பட்டும் உள்ள சங்கீத வித்வான்களில் மருங்காபுரி ஸ்ரீ கோபாலகிருஷ்ண ஐயர் அவர்களும் ஒருவராவர்.

ஸ்ரீமான் ஐயர் அவர்களின் பிடில் நாதத்தில் லயிக்காதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் இவர் வாத்தியத்தில் பிரதிபலிக்கும் நாதம் உருவம் எடுத்து விகசிதமடைந்து நாத புஷ்டியோடு பாவம் ததும்பி கேட்போர் உள்ளத்தைக் கவரும் தன்மையுள்ளது. "கான ரசம்" என்று சொல்லும்படியான ஒரு பெரிய பாக்கியத்தை அளிக்கக்கூடியது. நாதத்தில் ஜீவன் ததும்பி, மனதை லயிக்கச்செய்யும், பெரும் ஆகர்ஷண சக்தி அவர் வாசிப்பில் இருப்பதை ஒவ்வொரு இரசிகனும் உணர்வான். இரசிகனைப்

பரவசப்படுத்தும் வஸ்து நாதசுவரூபம். பரவசத்தில் உண்மையின் பிரதிபலிப்பைக் காணலாமென்பது சித்தாந்தம். நம் ஐயர் அவர்களின் வாசிப்பில் உண்மையின் பிரதிபலிப்பைக் காணலாம் என்பது துணிபு.

நம் ஐயர் அவர்கள் இராகங்கள் வாசிப்பதில், கையாளும் முறை, ஒரு தனித்த பந்தாவுடனும், சிறந்த உருவம்பெற்றும் கேட்கக் கேட்கத் திகட்டாத முறையில் அமைந்தது ஆகும். கானடா, பியாக், சகானா, செஞ்சுருட்டி, மோகனம் இதுபோன்ற இராகங்களைக் கையாளுவதில் ஐயர் அவர்களுக்கு நிகரான வர்கள் காலஞ் சென்ற திருவாளர் கோவிந்தசாமி பிள்ளைக்குப் பிறகு ஒருவருமே கிடையாது என்று உறுதியாகக் கூறலாம்.

தவிர, ஐயர் அவர்களின் குணச்சிறப்புகள், அவர்கள் வாசிப்பைப்போலவே மேன்மை பொருந்தியதாகும். நட்பிற்கு பொருத்தமானவர்கள். பரந்த நோக்கமுள்ளவர்கள். மற்றைய வித்வான்களை ஆதரிப்பதில், "அலைப்புற்று அடைந்தாரை, அருமை நிழல் அளித்து ஆதரிக்கும் ஆல விருக்ஷத்தைப்போன்றவர்கள்". தெய்வபக்தி, குரு பக்தியில் தலை சிறந்தவர்கள்.

சத்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளிடம் பரிபூரண பக்தி, விசுவாசமுள்ளவர் என்பதை அவர் ஏகதேசமாக கடந்த பத்தாண்டுகளாக சத்குரு சுவாமிகளின் விழாவை திரு அரங்கத்தில் அதிவிமரிசையாகவும் முயற்சியுடனும் நடத்திவருவது சிறந்த சான்றாகும். ஒவ்வோர் ஆண்டிலும் திருவிழா நாட்களிலும் கச்சேரி காலக்ஷேபங்களும், பஞ்சமியன்று அன்னதானமும் நடந்துவருவது அநேகருக்குத் தெரிந்த செயலாகும்.

இப்படிப்பட்ட ஒரு நல்ல வழிபாட்டில், தென் இந்தியாவின் சிறந்த வித்துவான்கள் எல்லாரும் ஐயர் அவர்களுடன் ஈடுபட்டு, ஒவ்வொராண்டு விழாவிலும் ஒத்துழைத்துவருவதும் ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தங்கள் இன்னிசை விருந்தளித்து வருவதும் எல்லாராலும் போற்றக்கூடியதோர் நிகழ்ச்சியாகும்.

இங்குள்ள மகாஜனங்களுக்கு சங்கீதத்தில் மிகுந்த ஊக்கமும், ஆர்வமும் ஏற்பட்டிருப்பதற்கு ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண அய்யர் அவர்கள் ஓர் சிறந்த தூண்டுகோலாக அமைந்துள்ளார்கள் என்பது மிகையாகாது.

இத்தகைய அய்யர் அவர்கள், நம் நடுவே நீடூழிகாலம் ஆரோக்கிய திடகாத்திரத்துடன் இருந்து, நம்மையும் உற்சாகப்படுத்தி வருமாறு எல்லாம்வல்ல இறைவனை மனப்பூர்வமாய் வணங்குகின்றேன்.

எம். பத்மநாப ராவ்.

SRI VENKATARAMANA BHAGAVATHAR.

ஸ்ரீ சத்குரு தியாகராஜ ஸ்வாமிகளின் முக்ய சிஷ்யரான வாலாஜாப்பேட்டை வெங்கிட்டரமண பாகவதர் அவர்கள் 36 வருஷ காலமாக குருகுல வாசம் செய்தவரும் ஷை யார் குமாரர் கிருஷ்ணசாமி பாகவதர் 6 வருஷ காலம் குருகுல வாசம் செய்தவரும் கிருஷ்ணஸ்வாமி பாகவதர் அவர்களுடைய சிஷ்யர் வாலாஜா ஆம்பூர் வெங்கிட்டரமண பாகவதர் எழுதிக்கொண்ட மனோ பாவம்.

நமது ஸ்ரீ மருங்காபுரி சமஸ்தான வித்வான் பிடில் கோபால கிருஷ்ணய்யர் அவர்களை எனக்கு நன்றாக சுமார் 30 வருஷ காலமாக தெரியும். திருச்சி கோவிந்தசாமி பிள்ளையவர்களுடன் இரண்டு பேர்களும் ஜோடி பிடில் வாசிப்பதை கேட்டு ஆனந்தமடைந்திருக்கிறேன். ஷை கோவிந்தசாமி பிள்ளை எனக்கு ரொம்பவும் சிநேகிதர். இவர்கள் இரண்டுபேர்களும் சேர்ந்து வாசிக்கும் பிடில் கச்சேரியின் விசேஷம் மகாமகா தபஸ்விகளின் உட்கருத்துப்போல் ஸ்வரஸ்தானங்களின் சேர்க்கைகள் இவர்களுக்கு

ஸர்வேசவரனால் கொடுக்கப்பட்டதென்றே நினைக்கக்கூடும் என்கிறதுபோலே உலகத்தில் நினைத்திருப்பார்களென்று திடசித்தமாக சொல்லுவேன். உயர்ந்த ஞானஸ்தர்களுடைய அபிப்பிராயமுமிதுவே. தற்காலம் கோபாலகிருஷ்ணய்யரவர்களிடம் ஒவ்வொருவரும் கொஞ்சம் சபலமில்லாத மனதுடன் கேட்டால் இந்த உண்மை சகல ஜீவராசிகளுக்கும் தெரியவரும். எனக்கு வயது 65 ஆகிறது. தற்காலம் ஷை அய்யரவர்களிடம் சிஷ்யனாயிருந்த சேத்தூர் பிடில் சுந்தரேச பட்டரையும் தெரியும். காஞ்சீபுரம் நாயனா பிள்ளை அவர்களுடன் சில கச்சேரிகள் நடக்கும் சமயத்தில் நான் பிடில் வாசிப்பைக்கேட்டு அய்யரவர்கள் சிஷ்யராகத்தானிருக்க வேண்டுமென்று நினைத்து விசாரித்ததில் என் அபிப்பிராயப்படித்தானிருந்தது. இப்போது வாழையடி வாழைபோலவே அய்யரவர்களுடைய சிஷ்யரும் சேத்தூர் சமஸ்தானம் பிடில் சங்கீத வித்வானாகவேயிருந்து வருகிறார். ஆனால் இப்போது ஷை சேத்தூர் சமஸ்தானாதிபதியாகிய சேவகபாண்டிய மகாராஜா அவர்களோ உத்தம குருவையடைந்தும் சங்கீத ஸ்வரலயத்தில் நிஜமார்க்கத்தை ஸர்வேசுவரன் கிருபையால் அடைந்து அனேக வித்வான்களின் சங்கீதத்தைக்கேட்டும் அவர்களால் மற்றோர்களுக்கு பயன்படும்படி கெஞ்சிரா வாத்தியம் வாசித்து நிரூபித்து வருவது உலகறிந்த விஷயம் யான் சொல்ல வல்லமையில்லை. நமது பிடில் கோபாலகிருஷ்ணய்யரவர்களுக்கு நிஜ சங்கீதம் கிடைத்ததற்குக் காரணம் நிஜ பக்திதானென்று இப்போது நடத்திவரும் சத்குரு தியாகப்ருமத்தின் உத்ஸவத்தை பார்த்தாலே நான் சொல்லாமலே எல்லோருக்கும் நிதர்சனமாகத் தெரியவரும். சத்குரு தியாகப் பிருமத்தின் கீர்த்தனைப்படி சங்கீத சாஸ்திர ஞானம் சாரூப்ய சௌக்ய தமேமனஸா என்ற திருவாக்கின்படி வறுமைகள் நீங்கியும் த்ருட சரீர ஆரோக்கியத்துடனுமிருந்து வருவது சகலராலும் போற்றத்தகுந்தது. அய்யரவர்கள் செய்துவரும் சங்கீத தபசினால் சகல லோகத்திலும் சகல ஜீவராசிகளும் சௌக்கியத்தை அடைவது உண்மை. இவர்கள் எல்லோருக்கும் கொடுக்கும் சங்கீத அமிர்தத்தினால் அசுரர்கள் சுராளாக ராகு கேதுக்களடைந்த தன்மை போலடைந்து நன்மை பெற ஸர்வேசுவரனை வேண்டுகிறேன்.

வேங்கட்டரமண பாகவதர்.

Sangeetha Samrakshana Sabha, Madura

It is indeed a happy idea that has struck the admirers of Sri Marungapuri Gopalakrishna Iyer to present him with an appreciation volume. The Sangeetha Samrakshana Sabha, Madura, is glad to be associated with this pleasant function and wishes to pay its humble tribute of appreciation to this venerable and revered gentleman.

Mr. Gopalakrishna Iyer, affectionately known as "Marungapuri" has been the delight to the music lovers, the connassic of carnatic music and has earned the approbation all over India as well as abroad. In the field of instrumental music, it is no exaggeration to say that he is second to none. Though himself full of years his music is still youthful and as forceful and melodious as ever.

We pray to God that He may shower His choicest blessings on him and bestow on him long life and happiness. May his friends, admirers and disciples in South India continue to enjoy his soul stirring music.

V. Sriramachandran,
Honorary Secretary.

Sri Sarasvathi Gana Sabha, Coconada.

Marungapuri Gopalakrishna Iyer the famous Violinist of South India, has been known to me for the last 40 years, and, during this time, I had ample opportunities of hearing him play on the Violin. Perhaps the most noteworthy feature about him is the purity of his style. Bred-up in the high traditions of carnatic music he has never been in the habit of playing to the gallery by devoting from the standards and conventions set up by the illustrious musicians who flourished from Three decades ago. **His Style of bowing** is quite good and when listening to him, we are often, reminded of the great Violinists Thirukodikaval Krishna Aiyar and Trichy Govindasami Pillai. His Raga Alapana has a peculiar charm of its own.

Modest and retiring by temperament Mr. Gopalakrishna Iyer is never obtrunsic, when accompanying another musican in a concert, but always co-operates with him, thereby contributing to the success of the performance.

As one interested in carnatic music, I pray to God, that he may be spared to us for a long time so that he may continue to enrich the noble traditions of our South Indian Music.

K. SURYANARAYANA MOORTHY.
President.

Sangeetha Abiviridhi Sabha, Coimbatore.

I have had the pleasure of listening to Mr. Marungapuri Gopalakrishna Aiyar, Violinist, many a time. His performance on the Violin has been Quite Good. Quite in keeping with the high rank and esteem he has in the eyes of the Public. **The Style, Grace and Skill in playing Raga Alapanas deserve special mention.** As an accompaniment he has the special knack of fitting in with any set of Standard Musicians.

May the Almighty bless the gentleman with long life and prosperity.

T. V. RAGHUTHAMAN,
Secretary.

Jagannadha Bhaktha Sabha, Egmore, Madras.

To

The friends and admirers of Sri M. G. Gopalakrishna Aiyar, (Violinist) and (American Phone Violinist) and Marungapuri Samasthana Vidwan, who wish to bring out the commemoration Volume.

Dear friends,

I am very happy to learn that you have arranged to publish a Commemoration Volume of Sri Marungapuri Gopalakrishna Aiyar. I am of opinion that this Volume is long overdue.

I herewith contribute our Sabha's tribute to the Vidwan " A little leaveneth the whole lump," says the adage. Sri Marungapuri Gopalakrishna Aiyar is an embodiment of this ancient truth. His genial hearty manner and his versatile ablities as a Violinist make him an asset to the profession he adorns with life and lustre. That Sri Marungapuri Gopalakrishna Aiyar has been a very popular musician of the front rank for two generations and still keeps his flag flying aloft through the third, is ample testimony to his great qualities of head & heart. The vigour and charm of the bow, the rapturous and surging melody of his music and the uncanny facility with which he adjusts himself to different styles of music are among the characteristics that mark him out as a Veteran in the art. May Lord Jagannatha preserve him in health and strength for many more years.

R. Venkatachari,
Secretary.

Sri Krishna Gana Sabha, Hyderabad—Deccan.

பிடில் வித்வான் பிரும்மஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் ஸ்ரீ கிருஷ்ண கான சபையின் ஓர் உண்மையான நண்பர். அச்சபையின் முன்னேற்றத்தில் மிகவும் சிரத்தைகொண்டவர்.

இந்த சபையில் சென்ற 10 வருஷங்களாக ஸ்ரீ தியாகராஜ உத்ஸவம் நடைபெற்று வருகின்றது. ஒவ்வொரு வருடமும் தென்னிந்தியாவிலுள்ள பிரபல சங்கீத வித்வான்களில் அனேகர் கச்சேரி செய்து வருகின்றனர். நமது அய்யர்வாளும் கச்சேரி செய்து வந்திருக்கின்றார். அய்யர்வாளுக்கு ஸ்ரீ தியாகப் பிரும்மத்தினிடம் விசேஷமான பக்தியுண்டு. ஆண்டுதோறும் தமது கிரகத்திலேயே தியாகய்யர் உத்ஸவத்தை சிறப்பாக நடத்தி வருகின்றனர். தியாகப்பிரும்மத்தினிடமுள்ள அபார பக்தியினாலும் எங்கள் சபையின்பேரிலுள்ள சிரத்தையினாலும் தமக்கு இவ்வளவு சன்மானம் செய்யவேண்டும் என்று எப்பொழுதும் கோரியதே இல்லை. சென்ற வருடம் இவர் எமது சபையில் ஒரு தனிக் கச்சேரியும் செய்தார். அவருடைய வித்வத் யோக்யதாம்சங்களை எழுத கேவலம் சங்கீத ரஸிகர்களாகிய நாங்கள் அருகரல்ல.

வித்வானை வித்வானே அறியமுடியும். அவர் ஒரு மிகவும் உயர்ந்த சங்கீத ஞானி என்பதையும் பக்க வாத்யமாக வாசிக்கும்போது பிரதான பாடகருக்கு அனுகூலமாகவும், கச்சேரியை சோபிக்கச்செய்யும் முறையிலும் வாசிக்க வல்லவர் என்பதிலும் அபிப்பிராயபேதமேயிருக்கமுடியாது. இவைகள் யாவற்றிலும் மேலாக இவர் சமூகத்தினரிடம் பழகும் முறை மிகவும் போற்றத்தக்கதாகும். ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் ஈசுவர கிருபையால் திடகாத்ரராய் நீடூழி வாழ வேண்டுமென்பது எங்கள் சபையாரின் பிரார்த்தனை.

கே. பஞ்சாபகேசய்யர்,
காரியதரிசி.

Rasika Ranjana Sabha & Krishna Gana Sabha, Trichinopoly.

The Rasika Ranjana Sabha and Krishna Gana Sabha (Amalgamated), Trichinopoly, wishes whole-heartedly to co-operate in the celebrations and join the large body of the public in general and the music-world in particular in tending Sri Gopalakrishna Aiyar its felicitation on this happy occasion and wish him and his family the choicest blessings of God—long life, health, wealth and all prosperity-in-overflowing abundance.

Marungapuri Gopalakrishna Aiyar is a shining star of the Musical firmament in Tamil Nad. He is a well-known and respected figure. An Andhra by birth and a Tamil by residence and association he has assimilated all that is best in the two cultures. Endowed with a genial personality, pleasant manners and address, a generous and loving nature Sri Gopalakrishna Aiyar is popular with all and Everyone irrespective of caste, creed or colour, and is a welcome figure on the music platform. He is a man of few words but they are the result of genuine modesty and deference and courtesy to those he comes in contact with and they express what the speaker feels without any effort at Embellishment. Everything about M. G. Gopalakrishna Aiyar is Scrupulously clean, neat and orderly from his immaculate white attire and Tilak to the Violin which he plays on. He is quite at home in any distinguished company as he is with the music-shad masses who delight in in Surrounding him and Cheering his performances.

Sri Gopalakrishna Aiyar has been in the top-rank of Carnatic Musicians for over 35 years now and though nearly 60 years old today is still Sought after for Musical performances and for broadcasting on the Radio—both at Trichinopoly and at Madras Stations—His dexterity in playing on the Violin is remarkable for its easy flow, perfect *Sruthi*, correct *Layam* and masterly expositions of Raga and Swara Prastharam. He has accompanied Master Musicians of the past like Srinivasa Iyengar (alias Poochi Iyengar) of Ramnad, Konerirajapuram Vaidyanatha Aiyar, Palghat Anantarama Bhagavathar, Naina Pillai, Pushpavanam Aiyar, Vedanta Bhagavathar, Bidaram Krishnappa. He has shone in company with brother accompanists such as Fiddle Govindasami Pillai of Trichinopoly, Fiddle Narayanasami Iyer of Pudukkottai, Fiddle Ponnusami Pillai of Illuppur, Kanjra Vidwan Manpoondia Pillai of Pudukkottai, Ghatam Krishna Iyer of Palni, Kanjra and Mirdangam Vidwan Dakshinamurthi Pillai of Pudukkottai, Mirdangam Alaganambia Pillai of Kumbakonam, and Konnakol Packiria Pillai. Among many living musicians with whom

Sri Gopalakrishna Aiyar has shared laurels there is not one who can be left out but mention may be made of such great Savants as Venuganam Flute Sanjeeva Rao, Tiger Varadachari Iyengar, Ariyakudi Ramanuja Iyyengar, Maharajapuram Viswanatha Iyer, Sembai Vaidyanatha Bhagavathar, Musiri Subramani Aiyer, Semangudi Srinivasa Aiyer, Chittoor Subramania Pillai, Fiddle Rajamanikkam Pillai, Fiddle Chowdiah, Mirdangam Vaidyanatha Aiyer, Mirdangam Mani Iyer of Palghat.

The Rasika Ranjana and Krishna Gana Sabha which has been in Existence now for over 25 years has during this long period been a witness to **the magnificent contribution to the Music world** made by Sri Marungapuri Gopalakrishna Aiyar and it considers its duty to testify, on this great occasion, to the sense of high appreciation which the great musican's performances on the Violin have always evoked in the minds of the audience.

One of the most valuable characteristics of this Great Violonist is that whomsover he accompanies on the Violin, big or small, he remembers that the role of an accompanist is to help and complement the chief performer and never strikes a discordant note or trying to shew himself off at the Expense of Singer or instrumentalist. But whenever he is on his own track and Especially in his Solo performances he shows his mettle. He is in his full form and captivates his audience by the charm and style of his deft touches on the Violin. **He is famous for his Raga prastharam** —which is his forte. He never mones in the same uniform soullems grase—but every time he plays a Raga, he gives it a freshness and a new life form and tone and his hearers are never satiated. His rending of the Raga Yadukula Kamboji and Behag are unique in its magnificence and few can surpass him in them. He has a graceful style of holding the bow and hand the Violin and he is free from awkward gestures which in many cases mar an otherwise good performance. To add to the depth of the tone of his Violin—Expecially in Solo performances Mr. Gopalakrishna Aiyar, has adapted an aid called the **American Phone Violin.** The Mircrophone in the attachment adds to the Volume of the sound but it has to be carefully controlled if it is not to betray the performer into nasty pitfalls ; **and it is only an Expert performing like Mr. Gopalakrishna Aiyar** that has and **can successfully handle such an attachment to the Violin** and make it his hand-maid.

Mr. Gopalakrishna Aiyar was making and getting the patronage and friendship of such high-placed gentlemen as the late Zamindar of Marungapuri and the late Auvadia Pillai of Bhikshandarkoil and **the present Zamindar of Seithur—all votaries of the Goddess of Music—** and the intimate association of the late Govindasamy Pillai—the acknowledged super-star Violinist of South India—This enabled Mr. Gopalakrishna Aiyar to lead a life devoted to his art untouched by the anxieties of the hearth and home (a rare thing for Musicians) and give of his best for Music.

The Rasika Ranjana Krishna Gana Sabha hopes that Mr. Gopalakrishna Aiyar will live long to serve the Music World and contribute to the happiness of the Motherland.

By order of the Managing Committee,

F. G. Natesa Aiyer, General Secretary.

வேணுகான பல்லடம் சஞ்சீவி ராவ் பல்லடம்.

பிடில் வித்வான் மகா-ா-ஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யரை எனக்கு சுமார் 40 வருஷமாகத் தெரியும். நான் ஒரு கச்சேரிக்கு மதுரை போயிருந்தேன். அது சமயம் நான் அவ்வூரில் பிடில் வித்வான் மகா-ா-ஸ்ரீ கரூர் வெங்கட்டராமையர் என்பவரைப் பார்க்கப்போயிருந்தேன். அது சமயம் மகா-ா-ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் ஷை பிடில் வித்வான் வெங்கடராமய்யரிடம் பிடில் அப்யாஸம் செய்து கொண்டிருந்தார். அதிலிருந்து இவரை எனக்குத் தெரியும். இவர் ஜனங்களிடம் அன்பாகவும் கௌரவமாகவும் பழகிக்கொண்டு வருவார். பிறகு தினே தினே வித்தையில் அபிவிருத்தியடைந்து பிறகு பிடில் வித்வான் கோவிந்தசாமி பிள்ளையிடம் சிலநாள் கூட வாசித்து வந்து வித்வானுகி கியாதி பெற்றிருக்கிறார். அவர் பிடில் தனிக் கச்சேரியும் செய்வார். அவர் வித்வான்களுக்கு பக்க வாத்யம் வாசிப்பதிலும் அதிலும் எனக்கு பக்க வாத்யம் வாசிப்பதில் ரொம்பவும் அனுசரணையாகவும் நன்றாகவும் வாசிப்பார். இவர் வித்வான்களுக்கும் பொது ஜனங்களுக்கும் ரொம்பவும் வேண்டியவராய் இருப்பதால் அவருக்கு வைபவத்தை நடத்தி கௌரவத்தைக் கொடுக்கிறதைப்பற்றி ரொம்பவும் சந்தோஷம். அவர் அரோக திடகாத்திரராய் இருக்க வேணுமாய் பகவானை பிரார்த்திக்கிறேன்.

P. Sanjeevi Rao.

Asthana Vidwan Mysore.
T. Chowdiah

என் சொந்த அபிப்ராயத்தை இந்த சிறு கடிதத்தின் மூலம் அதி ஆவலாக வெளியிட முன் வந்துள்ளேன்.

பிடில் வித்வான் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் எனக்கு அநேக வருஷங்களாகத் தெரியும்.

காலம் சென்ற பெயர்பெற்ற பிடில் வித்வான்கள் ஸ்ரீமான்கள் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் என்ன, திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்கள் என்ன, இவர்கள் காலத்திலேயே ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யர் அவர்கள் அநேக பெரிய பெரிய கச்சேரிகளுக்கு பிடில் வாசிக்க முன் வந்துவிட்டார்.

நான் எனது சிறு பிராயத்தில் அவர், பெங்களூர் இன்னும் இதர ஊர்களிலும் வாசித்த பிடில் கச்சேரிகளை அதி ஆவலுடன் கேட்டிருக்கிறேன்.

பிடில் வாசிப்பதில், ராகங்களை அதி அழகாகவும், விமரிசையாகவும், ஸ்வரஸுத்தமாகவும், சுத்த சங்கீத பூர்வமாகவும், ராகங்களை தேவார்ப்பணமாக வாசிப்பதில் மிக நிபுணர் என்பது என் அபிப்ராயம்.

பிடில் வித்வான் ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யர் நீடூழிகாலம், சுகமாக வாழ்ந்து, இந்த ஸங்கீத துறையில் பிடில் முதலிய இன்னும் இதர வித்வான்களையும் ஆசீர்வதித்து, இந்த ஸங்கீதத்தை, நமது தாய் நாட்டுக்கு ஓர் அறிய பெரிய அணிகலமாக விளக்கவேண்டும் என்று, எல்லாம்வல்ல பராசக்தியை நான் இடைவிடாது பிரார்த்திக்கிறேன்.

T. Chowdiah.

Sangeetha Vidwan
SRI K. PONNAYA PILLAI, Madras.
University of Madras.

மருங்காபுரி சமஸ்தான வித்வான் திரு. பிடில் கோபாலகிருஷ்ணய்யரவர்களை சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நான் நன்கு அறிவேன். ஐயரவர்கள் எல்லாவித நற்குணங்களிலும் மிகச் சிறந்தவர். ஐயரவர்களின் பிடில் வாத்தியத்தின் விசேஷ குணங்களைப் பாட்டுக் கச்சேரியில் சேர்த்துக்கொண்டு அநுபவித்த வித்வான்களும் அதைக்கேட்டு ரஸித்த அறிவுடைய ரஸிகர்களும் மஹா ஜனங்களும் நன்கு அறிவார்கள். ஐயரவர்களின் வாத்யம் கச்சேரி செய்பவர்களுக்கு மிகப் பெருந்துணையும் உத்ஸாஹமும் ஊட்டக்கூடியதாகும். அவர்கள் வாசிப்பில் இருக்கப்பட்ட ஸுஸ்வர அமைப்பே அதற்குக் காரணமுமாகும். ஐயரவர்கள் சங்கீத கலா பாகங்களில் தேளிந்த அறிவு படைத்தவர். காலஞ்சென்ற பிடில் வித்வான் கோவிந்தசாமி பிள்ளையும் நமது ஐயரவர்களும் சேர்ந்து தனிப் பிடில் கச்சேரி நடத்தியதை யான் பலமுறை கேட்டிருக்கிறேன். கோவிந்தசாமி பிள்ளை புல்லாங்குழல் வாசிக்க ஐயரவர்கள் பிடில் வாசித்த கச்சேரிகளும் பல கேட்டிருக்கிறேன். அவற்றில் பிடில் வாசிக்கவேண்டிய நிறை, கல்பனை, இனிமை முதலிய அம்சங்கள் சோபையுடன் விளங்கிக்கொண்டிருக்கும்.

இத்தகைய பிடில் வித்துவான் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களுக்கு சங்கீத உலகத்தில் அறிவிற் சிறந்த பெரியோர்கள் சேர்ந்து அளிக்கும் விசேஷப் பெருமைக்கு யான் மிகுந்த சந்தோஷத்தை அடைகிறேன்.

க. பொன்னையா.

T. K. JAYARAMA IYER, Mylapore.
Violinist.

Please allow me to say that we feel proud in memorising *the good and soul-stirring services* rendered by Sri Gopalakrishna Iyer for the past so many years which to reckon approximately will be a golden jubilee.

Sri Gopalakrishna Iyer has been a very conspicuous and leading Violinist amongst us. Sri Iyer's Mastery over the instrument, the Violin—*his fine techinque and rich melody are of a very high degree* and it may be remembered that the late Sri Govindasamy Pillai that veteran leader of his age and Sri Iyer had been thick friends and gave very often combined concerts to the benefit of the music loving world. Sri Gopalakrishna Iyer is note-worthy for *his largeness of heart and his geniality* by which he has endeared himself to everybody—the musician and the music lover. He has been a Samasthana Vidwan for a long time—an honour rare to attain by all musicians. The public owe a debt of gratitude to Sri Iyer for his celebrating the Sri Tyagaraja Utsavam every year a function which draws huge and enthusiastic audience and which at the same time he is able to conduct successfully on account of the co-operation and good will of his co-professionals.

I pray Sri Rama for the long life and prosperity of Sri Gopalakrishna Iyer—*a musician of high attainments and rare merit which the junior musicians would do well to emulate.*

T. K. JAYARAMA IYER.

Lalitha Kala Vallabha Chathurbashi
S. VADIRAJA BHAGAVATHAR B. A., Kumbakonam.

SRI RAGHAVENDRA VIJAYATHAI.

" A Thing of Beauty is a thing of Joy for ever "

Marungapuri the venerable Violin Vidwan of Srirangam, is a monumental personality to be reckoned with, in the Carnatic Musical world, not only for his Masterly skill in his Art but also for his redeeming qualities of simplicity and lovableness. He is kind to all and never assumes airs in the display of his skill. He always *helps, follows, mingles* and *even becomes one with the Songster* and thus sends the hearers to Joy and enaltation and thereupon to *forliss sublime and Divine.*

Apart from his Songster, he is always faithful, business like, and very dutiful and so beautiful.

It was really a sight for Gods to see and a pleasure to hear the Tiger of Annamalai roar on the opening day of the Kumbakonam Vani Vilas Sabha's Jubilee Celebration, with our unassuming Marungapuri on the side. The Combination was simply grand and the whole audience went into raptures.

This eminent Vidwan never falters, nor feels diffident, and is always sure, bold and *so sweet for ever.* In his solo Performances *he is superfine.* Here he enjoys himself and makes others also enjoy with him in oneness and thus makes the Art, most beautiful and a thing of joy for all times to come.

As a Professional, he has always taken care to maintain *the dignity of his Art* and *to claim the respect due to the same*, under any and all circumstances. This is one of his *enviable qualities*, as an High class Artiste.

May this *Distinguished exponent* of *Carnatic Music* live long in all *Health* and *Wealth* by the *Grace of Sri Purandhara Vitthala.*

Long Live Carnatic Music.

S. VADIRAJA BHAGAVATHAR.

P. K. Krishna Rao, Srirangam.
Homeopath.

To expatiate upon the proficiency of Marungapuri Samasthana Vidwan Sri Gopalakrishna Iyer would be " to gild refined gold, to paint the lily, and to throw perfume on the violet.

The mellowed tone of this foreign instrument, Violin added to the dexterous handling of the bow by this genius, has made it very attractive in these parts. I had great many occasions to hear the famous violin vidwan the late Govindasami Pillai and Sri Gopalakrishna Iyer paly on their fiddles in the bungalow of the late lamented B. C. Avadaya Pillai of Bikshandarkoil popularly called as court of wards Minor as his estate was under the court of wards during his minority. On one occasion this prince of violins Govindasami Pillai observed that Sri Gopalakrishna Iyer is going to get immortal fame in the violin world in the near future. The wish of the great savant is come to pass else how is it possible for others to get such appreciations from all their brother vidwans without any exception and be respected from among their own countrymen even high and low, rich and poor, young and old, and male and female etc. It is very easy to be made a Devan but not a real artist. It is not out of place to mention that in this same mantapam he was presented with a medal inlaid with precious stones by the Hon. late K. V. Rengasami Iyengar, M.L.A. on November 20th, 1927, the chief instrument being the noble late Govindasami Pillai who awoke the Srirangam public to their duty towards their celebrated and deserving Vidwan. He was the first to be selected as one of the members of the music expert committee by the university of Madras.

His zeal and untiring energy in his daily practice are praiseworthy. When asleep he would suddenly rise from bed and begin to get into practice some particular idea in music that had struck him while hearing various kinds of Hindustani, Marathi music etc. in the talkies even—The absorbing interest he takes in hearing the marathi songs, abhangams, aryas dhindi saki etc. is past writing.

Unlike the mechanical musicians of the present age he thouroughly enjoys and is absorbed in his own music and his performances are hence the out pourings of ecstasy. The melodic beauty of each Raga shines in its richest colours at his hands. He may be regarded as eternally decided to " **Nadopasana**."

He never regards wealth as the main object in life. His annual celebrations of Sri Thyagaraja is proof positive of this, though he is being assisted by his renowned brother artists which is a rare fortune with him.

He is content with the pleasures he enjoys and the gifts he obtains in the hands of Rajas, Zamindars and big mirasdars etc. His close movements with such gentries, have

made him ignorant of the art of demanding but I believe the public bodies are not taking advantage of this as the profession of this world famous Violinist is the outcome of great labour and perseverence. But withal he keeps up the status and dignity of his profession.

His generosity towards his accompaniments in big assemblies also, when ill matched is quiet remarkable. He won't expose them to the tender mercies of the majority of the audience by turning this side or that or making a cant remark but will go on with his music neither caring nor hearing their production at all. What a sacrifice !

His dash of the bow on the violin strings is a masterpiece with him. What a peace he brings to the worried brains by his masterly play !

May he live long and enjoy the blessings of the world, remaining a beacon light to the willing aspirants.

P. K Krishna Rao.

M. S. Narayanaswami Ayyar, Poonamallee.
District Munsif.

I have very great pleasure in associating myself with the function arranged to manifest the public esteem and regard for Mr. M. Gopalakrishna Iyer, Violin Vidwan, which he has so deservedly won. I really consider it an honour and privilege on my part to have been given the opportunity to give expression to my ideas and sentiments in respect of Mr. Gopalakrishna Iyer's unique position as an artist and as ' a man among men.'

Mr. Marungapuri Gopalakrishna Iyer's reputation (He being generally called so, as he has been the vidwan of the Marangapuri Samasthanam) is too well known to need any bolstering up or to be reminded to the public who are really doing honour to themselves by honouring so great a vidwan. He is **a Prince of vidwans** in violin. His reputation dates back to the days when he was associated with the late renowned Mr. Govindaswami Pillai of Trichinopoly in playing on violin in concerts. Some of the then young relations of the late revered Dr. Sri S. Subramania Iyer, inclined to music, including myself, became acquainted with Mr. Govindaswami Pillai and Mr. Gopalakrishna Iyer during those days and became their friends ever since.

As a person fond of hearing music I have had ample opportunities of hearing Mr. Govindaswami Pillai and Mr. Gopalakrishna Iyer. Mr. Gopalakrishna Iyer is the true and worthy disciple of that eminent vidwan. Mr. Govidaswami Pillai who occupied the rival pinnacle of glory in the art of violin playing, the other pinnacle being occupied by Thirukkodikaval Krishna Iyer of unique fame. Each of the said two great masters was

unmatched in his peculiar method of producing melody upon the instrument. Mr. Govindaswami Pillai, it must be stated, started a different and distinct school of music in respect of violin. Mr. Gopalakrishna Iyer is the worthy successor of his worthy master in all respects. He has wholly imbibed the qualities of his master in the art as well as his modesty and gentlemanly character. Mr. Gopalakrishna Iyer is great as a man endowed with largeness of heart, nobility of character, amiability of disposition, tenderness of human feeling and generosity. It is really difficult to find as modest and unassuming a vidwan as he.

Speaking of Mr. Gopalakrishna Iyer, one has to pay deserved encomium to the noble qualities of his mind and his capacity in the art deserves praise equally well. I am not versed in the technique of music but as a simple lover of music I have endeavoured to describe in a way Mr. Gopalakrishna Iyer's genius and the characteristics of his music. The qualities of his method in the art seem to me exceedingly remarkable and really versatile and amazing as was his master's. His uniform dignity of pose without any awkard facial or bodily contortions and angularities enhances the beauty of the melody produced. He has so much wealth of imagination and creative fancy in molodics that he goes on playing with easy grace right through and can go on without end playing upon a Ragam or any note in music elaborating it, bringing out the most captivating and thrilling phases of the same by gradations in an endless train, each naturally flowing from the preceding and happily gliding into the succeeding and so on; and all this is done with a majestic resonant soothing tone produced in the instrument in the manner of his master Mr. Govindaswami Pillai who first produced that kind of majestic tone and bewitched his hearers. During Mr. Gopalakrishna Iyer's playing on the violin thus, the hearers will be **spell-bound with intense delight and astonishment.** This was the way with his master and he has preserved that tradition. The public are delighted with this veteran's violin music for about 30 years and more now and it really appears that with advancing age his music gathers added strength and beauty and becomes more and more pleasing and delightful. His position now as **violin vidwan is unique and unrivalled**. His music has a flavour and an easy grace, all its own.

May God, Almighty, bless Mr. Gopalakrishna Iyer with long life, health and happiness, so that he may continue to pour the flood of delightful and magnificent melody from his violin as he has been doing, for many more years to come.

M. S. Narayanaswami Ayyar

R. SREENIVASA AIYAR, B A , B.L., Trichinopoly.
Advocate.

பல காரணங்களினால் சில காலமாக கர்நாடக சங்கீதத்தில் பொது ஜனங்களுக்கு ஊக்கமும் ஏற்பட்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம். இக்காலத்தில் அந்த சாஸ்திரத்தில் அந்தரங்க அபிமானமும் பெரியோர் சம்பரதாயத்தை கைவிடாது சுத்தமான கச்சேரி நடப்பும் சொந்த வாழ்க்கையில் அமைதியான கௌரவமும் வாய்ந்த இவரை சங்கீத அபிமானிகள் யாவரும் போற்றத்தக்கது. படாடோபத்தினாலாவது வருமானத்தின் பெருக்கினாலாவது மட்டிலும் வித்வானுடைய யோக்யதை அறியப்படுகிறதில்லை என்பதை ஸ்ரீமான் கோபாலகிருஷ்ணய்யருடைய சரித்திரம் ரூபிக்கிறது. வித்வான்கள் கோஷ்டியிலும் நிஜமான சங்கீத அபிமானிகளிடையிலும் இவருடைய சாஸ்திர ஞானமும் வாசிப்பின் தன்மையும் வெகு காலமாக நன்கு பாராட்டப்பட்டிருக்கிறது. காலஞ்சென்ற பிக்ஷாண்டார்கோவில் ஆவடையாப் பிள்ளையவர்கள், மருங்காபுரி ஜமீன்தாரவர்கள், கோடியாலம் ரெங்கசாமி அய்யங்கார் அவர்கள் முதலிய பிரபுக்கள் இவரிடம் எவ்வளவு அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள் என்பதை நான் நேரில் அறிந்திருக்கிறேன். யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பாராமல் சங்கீத அபிமானிகள் யாவருக்கும் இலகுவாக நண்பராகி தன் விசேஷமான வாசிப்பினால் அவர்களுக்கு சுவையை விருத்தி செய்வதில் சாமர்த்தியமுள்ளவர். அதுபோலவே கச்சேரிகளும் தன்கூட இருக்கும் வித்வான்களுடைய பெருமையையே கொண்டாடுவார். சாஸ்திர அபிமானத்தினால் மட்டிலும் இவர் ஏற்றுக்கொண்டிருக்கும் வருஷாந்தர உத்ஸவத்தை நடத்திக்கொண்டு அவர் நீடூழி காலம் கர்நாடக சங்கீத உலகத்துக்கு தூய்மையையும் கௌரவத்தையும் அளித்துவரும்படி கானலோலரான ஸ்ரீகோபாலகிருஷ்ணனை யாவரும் பிரார்த்திக்க வேண்டும்.

R. SREENIVASA AIYAR.

M. S. PARAM,
Honorary Supervisor of
Musical Education, N. D. Jafna.

இந்திய சங்கீதத்தின் இனிமையையும் பெருமையையும் நம்மவர்களுக்குக் காட்டிய பெருந்தகையாளர்களில் ஒருவர் என் அரிய நண்பர் வித்வான் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களேயாவர். அவருடைய நட்பு கிடைத்தது என் பாக்யமே.

1936ம் ஆண்டு அண்ணாமலை சர்வ கலாசாலையில் நடைபெற்ற சங்கீத மகாநாட்டுக்கு இலங்கை பிரதிநிதியாகச் சென்றேன். அக்காலத்தில் வித்வான் அரியக்குடி ராமானுஜய்யங்காருக்குப் பக்கவாத்யம் வாசித்ததைக்கேட்டு ஆனந்தம்கொண்டேன். அதற்குமுன் இவர் வாசித்ததை ஒருக்காலும் கேழ்க்கவில்லை. அதே நேரத்தில் அய்யரவர்களை எங்களூரில் நடைபெறும் வேனிற்கால சங்கீதக் கழகத்துக்குத் தலைவராக அமர்த்தவேண்டுமென்று தீர்மானித்தேன். அப்படியே 1939ம் ஆண்டு அய்யரவர்களே தலைமை தாங்கி அதிகம் சிறப்பாகப் பள்ளிக்கூடத்தை நடத்தினார்கள். அவருடைய போதனா முறைகள் மிகவும் மெச்சத்தக்கனவாயிருந்தன. அன்பும் ஆதரவும் ததும்ப முகமலர்ச்சியுடன் கொடுத்த பாடத்தைப் பன்முறையும் வாசித்துக் காட்டுவார்.

இவர் தமக்கு உதவி ஆசிரியர்களாக திருச்சி சகோதரர்களையும், திரு. சுந்தரேசன் அய்யரவர்களையும் கூட்டிவந்தார். அவர்கள் செய்த வேலையும் பாராட்டத்தக்கதே. வித்வான் கோபாலகிருஷ்ணய்யர் அவர்களின் பக்க வாத்யச் சிறப்பை இங்குள்ள சங்கீத ஆசிரியர்கள் பாராட்டுவதை நான் பல முறை கேட்டிருக்கிறேன். அவருடைய பக்க வாத்யம் தனிச் சிறப்புடையதென்றே சொல்லலாம்.

வித்வான் முசிரி சுப்பிரமணிய அய்யரவர்களுடைய கச்சேரிக்கு திருச்சி நிலையத்தில் வாசித்த பொழுது முசிரி அய்யரவர்களுடைய இராக பாவத்தையும் நிரவலையும் பிரதி ரூபமாகக் காட்டி வாசித்ததையும் கவனித்தேன். இவ்விதமான உத்தமர் நீண்டகாலம் உயிரோடிருந்து அடிக்கடி சங்கீதக் கலாவிலிருந்து நல்கவேண்டுமென்று ஸ்ரீரெங்கநாதன் திருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

M. S. பரம்,
சங்கீத வித்வான்.

A. AL. CHOCKALINGAM CHETTIAR Keela Sivalpatti.

ஸ்ரீகோபாலகிருஷ்ணய்யரவர்கள் அழியாப் புகழ்பெற்று விளங்கும் பழைய சங்கீத வித்துவான்களின் கோஷ்டியைச் சேர்ந்தவர். பரிசுத்தமான வாழ்க்கையை மேற்கொண்டு சங்கீத உலகத்தில் மிக அடக்கத்துடனும் மிக கௌரவத்துடனும் வாழ்ந்துவருபவர். உயர்ந்த எண்ணங்களையுடையவர். சிநேகத்திற்கு மிகவும் கட்டுப்பட்டவர்.

இவர்களுடைய சங்கீதத்தின் மேன்மையையுணர்ந்த பலருள் நானும் ஒருவன். இவர்களுடைய வாசிப்பின் பெருமைகள் பல. பிடிலில் தனிக்கச்சேரிகள் செய்யக்கூடிய ஆற்றலைப்பெற்ற சிலரில் இவர்கள் முன்னணியிலுள்ளவர்கள். தனிக்கச்சேரிகளிலோ பக்க வாத்தியமாக வாசிக்கும் சந்தர்ப்பங்களிலோ இவருடைய பழுத்த ஞானம் நன்கு புலப்படும். வாய்ப்பாட்டு பாடுபவரை அனுசரித்து வாசித்துக் கச்சேரியை வெற்றிகரமாக நடத்திச் சிறப்பிக்கச்செய்யும் உத்தம குணம் படைத்தவர்.

இவருடைய உயரிய கற்பனை சக்தியை இராகம் வாசிப்பதில் அதிகமாகக் காணலாம். ஜனங்களை ரஸிக்கச்செய்வதில் மிகுந்த சிரத்தையுள்ளவர். பழையகால பெரிய வித்வான்களுக்கு இவர் இன்றியமையாத பக்க வாத்தியக்காரர். அநேக சமஸ்தானங்களில் நன்கு மதிக்கப்பெற்றிருக்கிறார்.

விசேஷமாக நகரத்தார்களின் நன்மதிப்பை மிகவும் பெற்றிருப்பவர். அநேகமாக இப்பக்கங்களில் இவரை அறியாதவர் ஒருவரும் இலர். இதற்குக் காரணம் இவரது வாசிப்பிலுள்ள அபார இனிமைதான். என் கடன் பணிசெய்து கிடப்பதே என்பதற்கு இலக்காக இவர்கள் தங்களது கடமையைச் செவ்வனே நடத்திவருபவர். அனாவசியமான வ்யவகாரங்களில் தலையிடாமல் மிகுந்த பெருந்தன்மையாய் நடந்துவந்திருக்கிறார்கள். இதனால் நகரத்தார்கள் இவர்மீது மாறா அன்புடையவர்களாயிருந்து வருகின்றனர்.

இவர்களுடைய வாசிப்பின் நயம் இன்னும் பலர் காதுகளில் தங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றது. ஸ்ரீகோபாலகிருஷ்ண ஐயரவர்களை கௌரவிப்பது ஸங்கீத கலைவாணியையே கௌரவித்ததாகும். சுபம்.

அ. அள. சோக்கலிங்கம் செட்டியார்.

A. R. S. Ratnam B. A. (London) Govt. Training School
Superintendent Kopay, Ceylon

I first met Marungapuri Gopalakrishna Aiyar, when he came to Jaffna with Chittoor Subramania Pillai. On that occasion, Mr. M. S. Param, the well-known music enthusiasist, introduced us to each other. I heard Aiyar accompany the Chittoor Vocalist at both the recitals given in Jaffna. Later, my students and myself were privileged to have him all to ourselves, giving a solo Performance on both his ordinary and his phone Violins, with the Chittoor Musician as the most appreciative member of the spell bound audience. Marungapuri's melody yet rings fresh in my ears. Apart from his musical pre-eminence, his social qualities have won my heart.

I gladly take this opportunity of publicly expressing a debt of gratitude I owe to Marungapuri Vidwan. Whenever in the evenings, after a hard day's work, I feel **over-whelmed by the Cares and Worries of life** and there is no peace in my mind, I get Marunga-puri's Bhairavi record played on the gramaphone. **The Magic power of those notes always soothes my mind and fills me with a new life.**

A. R. S. Ratnam.

Rao Sahib T. D. Narayana Iyer, B.A
Supdt. of Post Offices. Tanjore.

I was very happy to receive a copy of the short sketch of Violin Vidwan Sri Marungapuri Gopalakrishna Iyer. The first occasion when I met Mr. Gopalakrishna Iyer was when I was the guest of Bikshandarkoil Sri Avadaya Pillai in 1921. His performance on the Violin then is still vivid in my memory. Since then I have had many opportunities of hearing his violin recitals and also to know him intimately. It is a real pleasure to hear him on the violin. His sweet manners have naturally secured for him a large circle of friends not only among Vidwans but also among other respectable persons. I wish him long life and happiness.

T. D. Narayana Iyer.

G. SIVARAMAKRISHNIER
Consulting Engineer.

Karaikudi

Sriman Marungapuri Gopalakrishna Iyer the reputed Violinist Vidwan of Tamil Nad came known to me 20 years back and since then our acquaintance developed into deep friendship I esteem him first as a gentleman then only as a musician. He possesses very many high qualities in an eminent degree, such as rarely found among musicians, I have come across. Regarding his musical talents, I know he does not stand in need of any appreciation from one like me who cannot distinguish good music from bad. But I dare say, I can claim to have realised in his performances both as accompaniment and as solo, the feelings of ecstacy that I have enjoyed in the performances of Sri Saraba Sastrigal, Thirukodikaval Krishna Ayyar and Govindaswamy Pillai, and among pipers Thirumamthal Natesa Pillai. His Music is governed not by rupees, annas, pies but by love.

His ardent desire to celebrate Sri Thyagaraja's festival as a domestic concern every year, without minding financial and other inconveniences, goes a great way to raise him further in my estimation.

I heartily pray that he and his family and children should enjoy peaceful and happy life throughout.

G. SIVARAMAKRISHNA IYER.

Rao Sahib T. G. KRISHNA IYER,
Retd. Executive Engineer.

Lalitha Nagar,
San Thome, Madras.

I was indeed very glad to have received a copy of the short sketch of the life of Vidwan Marungapuri Gopalakrishna Iyer by Sri Y. Mahalinga Sastrigal, M.A., B.L. of Annamalai University Chidambaram. In his appreciation of the Eminent Vidwan's Music Mr. Sastry has certainly stated only actual facts without any exaggeration. It is a real pleasure to hear his unadultrated music in his exquisite style. I am glad that Mr. Sastry has also made special mention of his unassuming nature when he accompanies others, a really praise worthy quality in a Musician of his standing and eminence. I wish Vidwan Gopalakrishna Iyer an ardent devotee of Sri Thyagaraja, long life and happiness.

T. G. KRISHNA IYER.

V. SUNDARAM AIYER B. A., B. L. Mylapore

I have known Sri Marungapuri Gopalakrishna Iyer both as a musician and a friend and I was deeply impressed by his music skill as a violinist and amiable manners. He has the unique experience of a long service of having played violin to veteran musicians of the first rank. Added to his varied experiences he has a deep knowledge of Raghalakshana and Swaraprasthana. In sruthi and laya he never errs and his noble hearing and pleasing manners add lustre to his music. He has ennobled music by his dignified personality being an ardent devotee of it. He knows **the nobility of music is above money's worth and he would prefer a good appreciation from a knowing critic to merely making money from unknowing quarters.**

His Zeal for music has helped him to organise Thyagaraja festivals in Srirangam where all leading vidwans deem it a pleasure to render their service. He has always adorned the Music platform by his violin play and dignified personality. He is also keenly interested and sympathetic to rising talents and is never jealous of a new meteor developing into a star of the first magnitude.

V. SUNDARAM IYER

P. A. CHIDAMBARAM AIYAR Marungapuri Estate
Personal Asst. to the late Zamindar & Ex. Manager

Marungapuri Samasthana Vidwan Sri M. G. Gopalakrishna Aiyar is known to me for over 35 years. He was firstly introduced to the Zamindar of Marungapuri who was then living in Madras in the year 1907 by Sriman Avadia Pillai Avergal, Mirasdar, Bikshandarkoil and the most intimate friend of the Zamindar. Mr. Aiyar was subsequently engaged as Fiddle tutor to the Zamindar and his wife, the Rani. The Rani was taught music on Veena. They both came on well within a short period, and were able to appreciate the music well. His punctuality and regular habits together with simplicity and good manners, made him as one of the members of the Zamindar's family.

When the Zamindar shifted his head-quarters to Marungapuri, Mr. Aiyar was also taken there and was designated as samasthanam vidwan. Mr. Aiyar used to play on the Fiddle very often and in one instance his **Raga Alapanam in senjuritti ragam, made the audience spell-bound** for hours together. The Zamindar presented Mr. Aiyar with a gold watch with chain and pendants all made of gold which the Zamindar's father kept and used.

Mr. Aiyar has played both singly and in company with his colleagues and thereby introduced good music into the Zamindari which was devoid of it before. Many Vidwans

old and young were entertained by the Zamindar and I present the names only of a few of them : Vidwans Madura Krishna Aiyangar, Ettiapuram Ramachandra Bagavathar, Poochi Srinivasa Aiyangar, Naina Pillai, Pushpavanam Aiyar, Trichy Govindaswami Pillai, Jalatarangam Subba Aiyar, Sanjeevi Rao, Dakshanamurthi Pillai, Venu Chettiar, Palani Krishna Aiyar and others.

On their recommendation and suggestion and in recognition of Mr. Aiyar's ability in his play on Fiddle, the Zamindar presented Mr. Aiyar with a gold medal, amidst many Vidwans and distinguished Government Officers like Diwan Bahadur Sri L. D. Swamikannu Pillai, Registrar General, Madras, Sri Ramanujachariar, Registrar, Co-operative Societies, Trichinopoly and others. The group photo then taken will exhibit the personages in the gathering. They all appreciated Mr. Aiyar's play on Fiddle, singly with accompaniment and praised the Zamindar for his love in music and generosity and Mr. Aiyar for his fine and masterly play on Fiddle. Mr. Aiyar's name has reached every nook and corner of the Presidency. The Zamindar has also given large sums of money on different occasions.

About the year 1913 or so, Mr. Aiyar took up his residence in the Zamin house at Srirangam, for convenience sake, as he had to attend to the calls for entertainments from samastanams, sabhas and private gentlemen. Mr. Aiyar has attended to the invitations from the Durbars of Mysore, Travancore, Cochin, Pudukotah and other states, besides many important places of other Presidencies and from outside India like Rangoon and Colombo.

Thus Mr. Aiyar has served to the cause of music, more than anybody else, if I am permitted to say so, for over 3 decades and more, most honourably and well.

The public young and old were always desirous to attend and were satisfied after Mr. Aiyar's entertainment and were never disappointed. This is why he is liked by one and all, young and old.

Mr. Aiyar is a pious and God fearing gentleman and adores daily Sathguru Sri Thyagaraja Swamigal. Yearly the worship is celebrated in a large scale in his house, in North Chitra Street at Srirangam, when several vidwans interested, assemble freely and show their humble mite before Sathguru Sri Thyagaraja Swamigal and make the celebration a complete success.

Any real lover of music can approach Mr. Aiyar easily and learn or hear to his heart's content while he is practising in his house on the days, he happens to be at his residence. Though he is master in the art, not a day passes on, without his practice on violin. He used to say "Practice makes one perfect" and therefore he does so. His practice in Music, habits true and simple, and sincere bhakthi to his Guru are worth to copy to those who wish to shine like him.

The late ZEMINDAR of Marungapuri

As I am associated with him for nearly 35 years and served in the Marungapuri Zamindari till the Zamindar's demise, I had ample opportunity to observe and say what I could express, under the circumstances, without any exaggeration.

I am glad to have had the chance to express my wish that Mr. Aiyar should be blessed with long life and prosperity by the God Almighty.

With my best wishes to Vidwan Sri Gopalakrishna Aiyar and thanks to the members of the Committee.

P. A. CHIDAMBARAM AIYAR.

Rao Sahib
G. RAJAGOPAL PILLAI, F.R.H.S.
Mirasdar.

Bikshandarkoil.

ஸ்ரீ அய்யர்வாளின் பிடில் வாசிப்பையும் ஆசீர்வாதங்களையும் அடிக்கடி பெரும் பாக்யம் எங்கள் வீட்டிற்கு கிடைத்திருப்பது குரு க்ருபையாம். எங்கள் குடும்ப முன்னோர்களின் தவப்பயனும் ஆம்.

"நாத லய ஆனந்தகரம்" என்பது என்ன என்றால் அவர்கள் வாசிப்புதான் அதைக் காண்பிக்க முடியும் என்னலாம். அவர்களது அரிய சங்கீத அபிப்பிராயங்களைக்கேட்டு அநுபவித்த காதுகள் மற்றொன்றை நாடா. ஸங்கீதத்தைக்கேட்டு அழகாய் அநுபவிக்கும் சக்தியையும் விதத்தையும் அவர்கள் சங்கீதமே அளிக்கவல்லது. ஒவ்வொரு நாள் வாசிப்பும் ஒரு புது மாதிரி பாணியில்தான் அமையும். இதை வேறு யாரிடமும் கேட்பது அரிதுதான்.

அவர்களுக்கு கடவுள் அருள் மேலும் மேலும் பெருகுவதாக!

ஜீ. இராஜகோபால் பிள்ளை.

Proceedings of the meeting from The Hindu

Dated 10—9—41.

Srirangam, September 8.

Presiding over a public meeting, held for presenting a purse and souvenir to Marungapuri Vidwan Gopalakrishna Aiyar, a well-known exponent of the violin, in appreciation of his contribution to the art, Dewan Bahadur K. S. Ramaswami Sastrigal, retired District Judge, observed that so far as the language of music was concerned, the ideal should be preference, not exclusion and there was no need for discord in matters of harmony.

The function was held in the mantapam in front of the Sri Nachiar Sannadhi of the Srirangam temple and was largely attended by many well-known musicians and music-lovers all over South India.

Welcoming the gathering on behalf of the hosts, Rao Bahadur N. Ramaswami Aiyar, Advocate, observed that the conflict of language in music, about which differing views from their President and Mr. Tiger Varadachariar were published in The Hindu, was to his mind only an exhilarating pleasantry. The violin notes of Vidwan Gopalakrishna Aiyar whom they had met to honour that evening, were above all language and soared in higher regions where all distinctions and differences melted away in the beauty of the art.

Sahitya and Sangita

In opening the meeting Mr. K. S. Ramaswami Sastrigal said that the two key-words of Indian culture were Yoga and Raga of Yoga implying the control and concentration of mind in a spiritual direction and Raga signifying the outward flow of mind in moulds of beauty for the purpose of enjoying in a spirit of dispassion the beauties of creation. They could adequately protect national culture only by showing reverence and affection for the exponents of the culture. The fine arts had a diversity of media and of appeal. What applied to one art should not be applied whole-sale, to other fine arts. Poetry employed language which appealed to the mind, whereas painting, architecture, etc., appealed only to the eye and did not use any language at all. Music was intermediate and appealed primarily to the ear and secondarily to the heart. That was why their great ancestors said that music should embrace Bhava and Rasa to stimulate emotion and aesthetic enjoyment through the harmonious rise and fall of cadences expressed in diverse Ragas.

The controversy between music in one language or another language would find its end when they realised that in music the language was secondary though it certainly enhanced the enjoyment of harmonious sound by the blending of Sahitya and Sangita.

The recent controversy about Tamil music has a certain element of truth and value, continued Mr. Ramaswami Sastrigal, because in the Tamil country when Sahitya was used to enhance melody, it should largely and primarily be in the mother-tongue, but they must realise also that Sanskrit was the common language for the whole of India and there was an essential kinship among the various South Indian languages. The main ideal should be preference, not exclusion. An adequate and equally important place should be given to pure melody and to Tamil songs and to songs in Sanskrit and South Indian languages. There was no need, whatever, he concluded to have any discord in matters of harmony.

Messages wishing the function success and expressing appreciation of Mr. Gopalakrishna Aiyar's services to violin exposition in India where then read from a number of music sabhas and private individuals including almost all experts in South India and Ceylon.

The purse and souvenir were then presented to Vidwan Gopalakrishna Aiyar, by the President.

Attempt to exclude Telugu suicidal

Speaking next, the Zemindar of Seithur said that the attempt to exclude Telugu Sahitya was a very drastic step which he, considered was suicidal to the development of the art of music. The differences sought to be imported in the realm of music owing to caste, community, religion or language were, to his mind, merely the outcome of communal hatred and jealousy and he was afraid that the poison might still further descend into vulgar controversies. The lofty ideas interpreted in music were the same in all languages. The exclusion of Telugu or Sanskrit songs would bristle with serious difficulties; each language had its own excellence; their forefathers who knew better fostered the development of music, whatever the language, and all Indians should welcome songs in all the South Indian languages owing to their affinity.

Art for art's sake

Mr. Tiger Varadachariar who was repeatedly urged by the audience to speak, received an ovation. He did not wish to speak on that occasion on the recent controversy, excusing himself on the ground that it was a separate subject altogether and paid a tribute to the high attainments of the guest who had won the admiration of savants like the late Tirukodikaval Krishna Aiyar and had worked for the art for art's sake—an ideal which the late Saint Tyagayya had set up by refusing to sing for the Tanjore King, but the ideal he regretted unfortunately had been ignored by the musicians of the present day.

Brahmasri Papanasam Sivan also joined in paying a meed of praise to the high place the guest of the evening occupied in the music world. He considered that the present controversy about language in music was unnecessary and he regretted to find that some persons took delight in starting them. Such persons did not thereby contribute anything constructive to the growth and development of the art. They were all Tamilians. To whatever caste or religion they belonged, all those who were born in Tamil Nad were Tamilians and they were all one in their devotion to Tamil. If, however, in the matter of music, an agitation was raised, that there should be only Tamil songs, he would ask those persons not to teach English to their children, but confine themselves to Tamil.

Rao Sahib G. Rajagopal Pillai, a leading Mirasdar of the District, also deplored the existence of the ugly controversy so long as music was common to all languages.

Vidwan Marungapuri Gopalakrishna Aiyar, acknowledging the purse and souvenir, made a suitable reply thanking the Committee for their present and good wishes.

A musical concert was then held, the Vidwans who came for the function participating.

Proceedings of the Meeting taken from the Trichy News.

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாச்சியார் திருக்கோயில் முன் மண்டபத்தில் ஸ்ரீரங்கத்தில் குடியிருக்கும் ஸ்ரீமான் மருங்காபுரி பிடில் கோபாலகிருஷ்ண அய்யரின் சங்கீத கலா ஞானத்தைப் பாராட்ட திருச்சி ஜில்லா வாசிகளின் கூட்டம் வெகு சிறப்பாக நடந்தது. சங்கீத வித்வான்கள் பலர் பிரசன்னமாயிருந்தனர். ராவ் பகதூர் என். ராமசாமி அய்யர் எல்லாரையும் வரவேற்று அண்ணாமலை சங்கீத மகாநாட்டுத் தீர்மானத்தையும் அதையொட்டி நடக்கும் சர்ச்சைகளும் தமாஷான விஷயமாக நான் எண்ணுகிறேன் என்று குறிப்பிட்டார்.

தலைவர் பிரசங்கம்.

கூட்டத் தலைவர் திவான் பகதூர் கே. எஸ். ராமசாமி சாஸ்திரியார் தமது பிரசங்கத்தில் கூறியதாவது :—

நாமெல்லோரும் இந்த இடத்தில் கூடி இப்பேர்ப்பட்ட மகானை சிறப்பிக்கிறதில் ஒரு முக்கிய விசேஷம் இருக்கிறது. பாக்கிய லக்ஷ்மி முதல் மோட்ச லக்ஷ்மிவரை அஷ்ட லட்சுமியும் ஒன்றாகக் கூடிப் பிரகாசிக்கும் மகா லக்ஷ்மியின் சன்னதியில் கூடியிருக்கிறது வெகு விசேஷம். ஸ்ரீமான் கோபால கிருஷ்ணய்யர் சங்கீத கலையில் தேர்ச்சிபெற்று எப்படி அதைப் போற்றிப் பிரகாசிக்கச் செய்திருக்கிறார் என்பதை அந்தக் கலையில் தேர்ச்சிபெற்ற பெரியோர்கள் சொல்லவேண்டிய விஷயம்.

இந்த தேசத்துக்கு எதனால் பெருமை ஏற்பட்டது? பிற தேசங்களை ஜயித்து அதனால் ஏற்பட்டதல்ல. நாஷனல், தேசிய வருமானம் பெருகி செல்வம் ஜாஸ்தியாக இருக்கிறது என்பதற்காகவும் அல்ல, நம்ம தேசத்துக்கென்று ஏற்பட்ட இரண்டு பொக்கிஷத்தால்தான் பெருமை ஏற்பட்டது. அவை யோகம், ராகம் என்பவை, யோகத்தால் சித்த விருத்தி நிரோகம்; ராகத்தால் சித்தம் கரைந்துருகிய ஆனந்தம் ஏற்படுகின்றன. இந்த இரண்டு சிறிய வார்த்தைகளில் இந்திய நாகரீகம் அடங்கியிருக்கிறது. இந்த இரண்டு வார்த்தைகளும் இந்திய நாட்டுக்கு மட்டும் உரிமைபெற்றவை. இவற்றில் ராகம் என்ற முக்கிய கலை முன்னிருந்த நிலையைவிடத் தாழ்வடையாமல் இருக்க கலையில் தேர்ச்சிப்பெற்றவர்கள் கவனிக்கவேண்டும். கலையை தூஷித்தால் கலையின் பெருமை சிதறிக் குன்றிவிடும்.

முப்பிரிவும் அவற்றின் லட்சணமும்.

இக்கலையில் மூன்று முக்கிய பிரிவுகள் இருக்கின்றன, நாட்டியம், மிருதங்கம், அபிநயம் என்பன. சங்கீதத்தையொட்டியது நாட்டியம், வாய்ப் பாட்டையொட்டியது மிருதங்கம். பாவத்தை யொட்டியது அபிநயம். பாகமும், ராகமும், தாளமும் சங்கீத கலையின் ஜீவ, உயிர் நிலைகளாக இருக்கின்றன.

சங்கீத கலையின் பாவம் பிரதானமா அல்லது பாஷை பிரதானமா என்பது பிரச்னையாக இருக்கிறது. ராக பாவத்திலே சப்தஸ்வரம் இனிக்கிறது. மனசுக்கு இனிமையை உண்டுபண்ணுகிறது, பிடில், வேணுகானங்களில் சுத்தஸ்வர ஸாகித்யங்களைக் கேட்க ஆனந்தம் உண்டாகிறது. ஒரோர் கலைக்கு ஒரோர் ஜீவகளையுண்டு, சங்கீதம் தனி சிறப்பு வாய்ந்தது. முன்னம் தெலுங்கு பாட்டுக்கு அதிக இடந் தந்து வந்தனர். ஸ்ரீ தியாகராஜருடன் கலை அத்துப்போய்விடவில்லை, தமிழிலும் ஸ்ரீ தியாகையர் மாதிரி ஒருவர் உண்டாகி அம்மகானது கீர்த்தனங்களில் ராக, பாவங்களும் மற்ற கலைகுணங்களும் அருமையாக எப்படி பொருந்துகின்றனவோ அந்தமாதிரி கீர்த்தனங்களை ஏன் செய்யக்கூடாது. அந்தக் காலத்தையே நாமெல்லோரும் எதிர்பார்க்கலாம். அதற்குப்பதிலாக இரண்டாந்தரமான (Second Rate)

பாட்டுகளையும் அதையொட்டிய சங்கீதத்தையும் கேட்க வேணுமென்று சொல்லக்கூடாது. தியாகப் பிரம்மம் செய்த கீர்த்தனைகள் மாதிரி கடவுளருளால் ஏற்படக்கூடிய கலா விருத்தி மட்டும் வேண்டுமே தவிர இரண்டாந்தர சங்கீதங்களை பரவச்செய்யவேண்டுமென்று சொன்னால் அதை எப்படி ஏற்கமுடியும்?

ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யரின் ஸ்வீகாரம்.

தமிழ் தேசம் எல்லாவற்றிற்கும் மூலஸ்தானம் பெற்று இருக்கிறது. சங்கீத கலைக்கு தஞ்சை, திருச்சி, மதுரை, தென் ஆற்காடு ஜில்லாக்கள் மேன்மேலும் பிரகாசத்தை அளித்திருக்கிறது. பிடில் (Violin) பிறந்தது மேல்நாடு, அதைக்கிரகிக்கும் சக்தி நம் நாட்டில் அதிகமாகிவிட்டது. அந்த வாத்தியமும் நமக்குச் சொந்தமாகிவிட்டது. இது சாத்தியமான விஷயமல்ல இந்த வாத்தியத்தை தம்முடையதாக ஸ்வீகரித்துக்கொண்டு அதில் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் தேர்ச்சிபெற்றார். அவருக்கு ஆத்ம குணம் கிடையாது. நல்ல குணசாலியாக இருந்து இந்த கலாவிருத்தி செய்தது சிலாகிக்கத்தக்க விஷயம் என்று பேசினர்.

சேத்தூர் ஜமீன்தார் பேச்சு.

பிறகு சேத்தூர் ஜமீன்தார் பின் வருமாறு குறிப்பிட்டார்:—தற்காலத்தில் லயம், சுருதி இரண்டும் சேர்ந்த இனிய சப்தத்தை உண்டுபண்ணக்கூடிய வல்லவர் ஸ்ரீ அய்யர்வாள். அவர்களது வாத்தியம், குணம், கலா நிபுணத்துவம், அதோடு சேர்ந்துள்ள நல்ல பிராம்மணத்துவம் முதலிய எல்லாவற்றுள்ளும் சிறந்த பெரியார் ஸ்ரீ அய்யர்வாள். சங்கீதத்துறையில் தமிழ் முன்னிலையில் இருக்க வேண்டியதுதான். தமிழைத்தவிர வேறு பாஷையை அதிகமாக உபயோகிக்கக்கூடாதென்பது முரட்டுத்தனமான கொள்கைக்கு ஒப்பிடலாம். ஸ்ரீமான் சாஸ்திரியார் அவர்களது விளக்கத்துக்குப் பிறகு வம்புச்சண்டை முதலியவற்றிற்கு இடந்தராதென்று நினைக்கிறேன். அவர் சொன்னத்துக்குப்பிறகு எனக்கும் திருப்தி ஏற்பட்டுவிட்டது தாய் பாஷையை விருத்தி செய்யவேண்டியது என்பதில் எல்லாருக்கும் ஒரே எண்ணம் உண்டு. ஆனால் சங்கீதத்தில் ஒரு பாஷையை கண்டிக்கவோ, குறைத்துக் கூறவோ கூடாது. சொல் வித்தியாசமே யொழிய கருத்தில் வித்தியாசம் இல்லை. சங்கீத அம்சங்களில் தமிழ் விருத்தியாகவேண்டும். பலன் தரக்கூடிய சங்கீத லட்சணங்கள் அமைந்த பாஷையினிடம் வேற்றுமை காட்டாமல், ஒன்றைவிட்டு மற்றொன்றுக்கு வித்தியாசம் காட்டாமலும் சங்கீத விர்த்தி சம்பந்தமட்டில் எல்லாவற்றையும் ஆதரிக்கவேண்டியது அவசியம் என்று வற்புறுத்திக் கூறி, தன்னுடைய வம்சத்தினர் தாதை மூதாதையர்கள் எந்த வகையில் தமிழையும் சங்கீதத்தையும் போற்றி ஆதரித்தார்கள் என்பதையும் விளக்கினர்.

அண்ணாமலை சர்வகலாசாலைச் சங்கீதக் கழகத்தின் தலைவர் ஸ்ரீ டைகர் (புலி) வரதாசாரியார் ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யரைப்பற்றி குறிப்பிடும்போது "நாங்கள் குரலாலே பாடுகிறோம். அவர் விரலாலே இனிமையான சங்கீதத்துவனியை உண்டாக்கிக்கொண்டு பாடுகிறார். வித்தையின் சிகரத்தை யடைந்து பெருங்கீர்த்தி அடைந்துள்ளார். ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யருக்கு நாம் செய்யும் மரியாதை, புகழ் எல்லாம் மகா சரஸ்வதி தேவிக்குச் செய்ததாகும்" என்று கூறிவிட்டு சங்கீதப் பெருமையை விளக்கினர்.

ஸ்ரீ பாபநாசம் சிவன் " ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யரான சங்கீதச் செடியில் பிடிலான புஷ்பத்தில் நிரம்பியுள்ள லயமான கானமாகிய தேனைக் குடிக்க வெளியூர்களிலிருந்த வண்டுகளுக்கு ஒப்பான நாமெல்லோரும் கூடியிருக்கிறோம் என்று சுருக்கி விளக்கினர். அண்ணாமலை சங்கீத மகாநாட்டுத் தீர்மானம்பற்றி வருத்தமுற்றார்.

பிக்ஷாண்டார்கோவில் ராவ்சாகிப் ஜி. ராஜகோபால் பிள்ளை அவர்கள் குறிப்பாகப் பேசும் போது, " நமக்கு எந்த பாஷையானாலும் சரி ; அதைப்பற்றியக் கவலையில்லை. சங்கீத சாகித்திய கர்த்தா க்ஷீராப்திசயனனான ஸ்ரீமன் நாராயணன் அவரால் உண்டான கலை இது. இதில் வேற்றுமை உணர்ச்சி சிறிதளவும் இருக்கக்கூடாது. சங்கீத ரஸத்தைப் பருகி ஆனந்திக்கவேண்டியது நம் போன்றார் கடமை. அதன் மூலம் கலையை ஆதரித்ததாகும். அந்த ரஸத்தை உட்கொண்டதை நிரூபணம் செய்வதற்காகவே இந்த இடத்தில் ஸ்ரீமான் அய்யரவர்களை பாராட்ட கூடியிருக்கிறோம் " என்றார்.

பிறகு ஸ்ரீ கோபாலகிருஷ்ணய்யர் அவர்களுக்கு பணமுடிப்பும் அவரது சங்கீத வாழ்க்கைக் குறிப்பும் சமர்ப்பிக்கப்பட்டது.

வந்தனோபசாரம். Srirangam.

மஹா வித்வத் சிரோன்மணிகளே, மஹா ரசிகர்களாகிய ஆப்த நண்பர்களே, சகோதரர்களே, உங்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனம். தாங்கள் எல்லோரும் அடியேன் பொருட்டு சிரமம் எடுத்துக்கொண்டு இங்கு வந்துகூடி உங்கள் அன்பு வசனமாகிய தேன்மாரியை என்மீது பொழிந்து பிரத்யுபகார ஆபேக்ஷையில்லாத நற்செய்கைக்கு நான் என்ன கைம்மாறு செய்யமுடியும் ?

உங்கள் அன்பே ! தலை சிறந்தது ! ஆர்வமே உத்கிருஷ்டமானது ! தனது ஆத்மானந்தத்துடன், கலா ரசிகர்கள் அருமையாய் சங்கீதத்தைக் கேட்டு "பேஷ்" என்று சுவையறிந்து கூறும் நன்மொழியே எங்கள் வித்தையை முற்படுத்தவல்லது ஆகிறது. அதுவே எனக்கு எப்பொழுதும் நல்ல சங்கீதத்தைக் கொடுத்துக்கொண்டு ஊக்கமளித்து வந்திருக்கிறது. ஆகவே இப்படிக் கொடுத்த புகழ்மொழிகளை எனக்கு நீங்கள் அன்புடன் அளித்தீர்கள். உங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைப் பணிவுடன் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் ஸ்ரீஜெகத்குரு சன்னிதானம் காமகோடி பீடாதிபவர்களே மந்திராக்ஷதை பிரசாதங்கள் அனுப்பி நிபுணன் என்ற நன்மொழியை அளித்தார்கள் என்றால் என் வாழ்வின் அரிய சந்தர்ப்பம்தான் என்று எண்ணி மகிழ்கிறேன். கடவுளையும் வாயார வாழ்த்துகிறேன்.

எனக்கு கூட்டங்களில் எழுந்து விஷயங்களை சமத்காரமாகப் பேசும் பழக்கம் இல்லை. இருந்தாலும் எனது நண்பர்கள் கோரிக்கைக்கிணங்கி சில விஷயங்களை மிகவும் சுருக்கமாகச் சொல்லுகிறேன். நான் முற்காலத்திய வழக்கப்படி குருகுல வாசஞ் செய்துதான் வித்தை கற்றேன். ஸ்ரீ சருங்க ராச்சாரியாரவாளிடத்திலும் 12 உருப்படிகள்வரை பால்யத்தில் பாடம் செய்தேன். அந்த அடிப்படை ஞானமும் எனக்கு வெகுவாய் உதவுகிறது.

நான் பிடில் வாசிக்கிறதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களும், அனுகூலங்களும் : ஓர் சமயம் மதராஸ் ஸங்கீத சமாஜம் ஹாலில் ஸ்ரீ திருச்சி கோவிந்தசாமி பிள்ளை அவர்களும் நானும் இரண்டு பீடில் கச்சேரி செய்யும் சமயம் திருக்கோடிகாவல் மஹான் பிடில் கிருஷ்ணய்யர் அவர்கள் கேழ்க்கவந்தார்கள். அவர் வரவு எங்களுக்குத் தெரியாது. இந்த சம்பவம் 1904-க்கு பிறகு. எங்கள் வாசிப்பை பரம விசுவாசமாய் கேட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்கள் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்களை மத்தியகாலம் வாசிக்கும்படி சொன்னார்கள். அந்தப்படியே ஸ்ரீ பிள்ளை அவர்கள் வாசித்தார்கள். அதன் பிறகு கச்சேரி முடிந்தவுடன் ஸ்ரீ மஹான் அய்யர் அவர்கள் உன் வாசிப்பை கேழ்க்க வந்தேன். எனக்குப் பிறகு இந்தப்

பிடில் வாத்யத்தில் நீதான். நான் நினைத்து வந்ததைவிட எத்தனையோ மடங்கு திருப்தி ஏற்பட்டது. நிற்க கூடவாசிக்கும் பையன் யார் என்றார்கள். ஸ்ரீ பிள்ளை அவர்கள் என்னைப்பற்றி சொன்னார்கள். அந்தப் பையன் கையில் ஓர் அபூர்வமான நாதம் இருக்கிறது. அது எப்பொழுதும் எல்லா ஸ்வரங்களுடனே ஒலித்துக்கொண்டிருக்கிறது. இது ஓர் அபூர்வமான காரியம்தான். நீங்கள் இருவரும் சேர்ந்து வாசிப்பதின் அர்த்தம் தெரிந்துகொண்டேன். பரம மங்களமாய் வாசியுங்கள் என்று ஆசீர்வதித்தார்கள்.

மஹா வித்வான்கள் கச்சேரிகள் கேட்டும் பக்க வாத்யம் வாசிப்பதில் பலவித மனோ தர்மங்களுடன் பழகியும் பெரியோர்களின் அருள்மொழிகளாலும் அவர்கள் உயரிய பழக்கவழக்கங்களை அனுசரிப்பதாலுமே ஸங்கீதத்தில் அபிவிருத்தியடைய முடியுமல்லவா? ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்களுடன் ஜோடிப் பிடிலாக வாசிக்கும்போதெல்லாம் மேலும் மேலும் கற்பனைகள் வளருவதற்கும் ஸங்கீத மார்க்கங்களையும், நுட்பங்களையும் அறிந்து அனுஷ்டிக்க முயலவும் இடம் ஏற்பட்டது. அம்மஹானுடைய விசாலமான நோக்கம்தான் என்ன!

வேங்கடகிரி சமஸ்தானத்தில் நடந்த சம்பவம்.

ஒரு சமயம் மருங்காபுரி ஜமீந்தார் அவர்கள் திருச்சி பிடில் கோவிந்தசாமி பிள்ளையவர்களையும், என்னையும் வெங்கடகிரி ராஜா கல்யாணத்திற்கு கச்சேரி செய்துவர அனுப்பினார்கள். அவ்விதமே போனோம். அப்போதைய வழக்கம், ஓர் இடத்து சமஸ்தான வித்வான்களை மற்றொரு சமஸ்தானத்திற்கு அனுப்பிக் கச்சேரி செய்யச்சொல்லி அனுப்பிய சமஸ்தானமே வித்வான்களுக்கு சம்மானம் செய்யும் வழக்கம். அந்த முறையில் வெங்கடகிரி ராஜா கல்யாண கச்சேரிக்கு போனோம். ராஜா சமுகத்தில் இருவரும் வாசித்து கொண்டிருக்கும் சமயம் கீர்த்தனைகள் ஆகி ராகம் வாசிக்கும் சமயம் ஸ்ரீ பிள்ளையவர்கள் மேல்ஸ்தாயியில் சஞ்சாரம் செய்த பிறகு எனக்கு ஆவர்த்தம் வந்தது. அதில் மந்திரஸ்தாயியில் வாசிக்க வேண்டிய முறை அந்தப்படி மந்திரத்தில் ஸ. ப. வரையில் சஞ்சாரம் செய்து வாசித்துக்கொண்டிருக்கும் சமயம், ராஜாவிடமிருந்து ஒருவர் வந்து என்னை மந்திரத்திலேயே கொஞ்சநாழி வாசிக்கும்படி சொன்னார்கள். ஸ்ரீ பிள்ளையவர்கள் அவாள் சொல்லுகிறபடி சாவகாசமாய் வாசியுங்கள் என்று சொன்னார். அவ்விதமே வாசித்தேன். கச்சேரி முடிந்தது. ராஜா அவர்கள் ஸ்ரீ பிள்ளையவர்களிடம் உங்கள் வாசிப்பு பரமச்லாக்யம், எங்கள் மருங்காபுரி அனுப்பியது பரம சந்தோஷம். உங்களுடன் வாசித்தவர் ரொம்பவும் இனிமையாய் வாசிக்கிறார். மந்திரத்தில் வாசிப்பது ஓர் முக்யமான அம்சம். அதை அவர் பரம சுத்தமாயும் பரமரச பூர்த்தியுடன் ராகம் பிரதிபலித்தது ரொம்பவும் திருப்தி. நீங்கள் இருவரும் பரம கீர்த்தியுடன் வாழக் கோருகிறேன். இவ்விடத்து சம்பாவனையை இருவரும் பெற்றுக்கொள்ளுங்கள். மருங்காபுரியிடமும் பெற்றுக்கொள்ளுங்கள், ரொம்பவும் மனோஹரமாயிற்று. ஜாகைக்கு வந்தபிறகு ஸ்ரீ பிள்ளையவர்களிடம், தாங்கள் வாசித்திருந்தால் ராஜா இன்னும் எவ்வளவோ சந்தோஷப்படலாம் என்று சொன்னேன். ஸ்ரீ பிள்ளையவர்கள் சங்கீதத்தில் ச்ரோதாக்களை எப்பொழுதும் கவனித்தே நாம் ப்ரவர்த்தி செய்யவேண்டும். அதில் பலமாதிரியான சந்தர்ப்பங்கள் உண்டு. தவிர ஒன்றுக்கும் ப்ராதான்யம் கொடுக்கக்கூடாது. ஸ்ரோதாவால் ப்ரதான்யம் ஏற்படுவதில்தான் நிஜமும் அதன் கிரியையும் உள்ளது. ஆதலால் சங்கீதத்தை நடத்தி பரஸ்பரம் சுகம் அனுபவிப்பதே சிலாக்யம். நாம் இருவரும் வாசிக்கும் சமயம் யார் வாசித்தாலும் ச்ரோதா அபிப்பிராயத்திற்கு அடங்கியதுதான் என்றார். பரமஞானி சமத்துவம், கலையில் என்னை சமஸ்தான வித்வான் ஆக்கிய சமயம் நிகழ்ந்தது.

மருங்காபுரியில் சங்கீத வித்வான்கள் இடைவிடாமல் வந்துகொண்டிருப்பார்கள். ஜமீந்தார் அவர்கள் பரமசுமுகமாய் வந்த வித்வான்களுக்கு கொடை கொடுத்து அவர்களின் சாராம்சத்தை பெரி

தும்போற்றி சன்மானமளிப்பார்கள். ஜமீந்தார் அவர்கள் வர்ணம், கீர்த்தனை வரை பிடிலில் சாதகம் செய்தார்கள். ராகலெட்சணங்கள் லயருசி தமிழில் சிருங்கார ரசபாவமுள்ள பதங்கள் தானே இயற்றி உள்ள வர்ண மெட்டு அமைக்க சொல்வார்கள். ஓர் முறை தஞ்சாவூர், சாரதா என்னும் நாட்டியத்தில் உயர்ந்த அந்த பெண்மணிக்கு, சதிராடும்படியாய் ஓர் பதம் இயற்றி அதற்கு ஜெதி சம்மந்தமான சிட்டா ஸ்வரம் என்னை போடச்சொன்னார்கள். அந்தப்படி அவர்கள் அபிப்பிராயம் சொல்ல அதற்கு தக்கப்படி ஜதி அமைத்து, அதை ஸ்வரமாக்கி அந்த பதத்தில் சேர்த்து ஸ்ரீமதி சாரதா ஆடி ஓர் பெரிய சன்மானத்தைப் பெற்றார்கள். இவ்விதமான, சமயத்தில், என்னை மருங்காபுரி சமஸ்தான வித்வானாக்க ஏற்பாடு செய்தார்கள். அன்று ஓர் பெரிய அரண்மனை கல்யாணம்போல் ஊரெல்லாம் அலங்காரம் செய்து மேளவாத்யங்களுடன் மருங்காபுரி தெற்கு அரண்மனையில் இந்த விழாவை நடத்தினார்கள்.

அதில் வந்த பெரிய மனுஷாள் L. D. சாமிக்கண்ணு பிள்ளையவர்கள், சேலம் விஜயராகவாசாரியார் அவர்கள் குறிப்பிடத்தக்கது.

சங்கீத வித்வான்கள் மைசூர் கிருஷ்ணயங்கார், திருவையாறு சுப்பரமணிய அய்யர், எட்டியாபுரம் ராமசந்திரபாகவதர், திருச்சி பிடில்கோவிந்தசாமி பிள்ளையவர்கள், மிருதங்கம் அழகன்நம்பி பிள்ளையவர்கள், தஞ்சாவூர் கதை செய்யும் தியாகராஜ பாகவதர் குறிப்பிடதக்கவர்கள். இவ்விதமாக கச்சேரி நடந்து சமஸ்தான வித்வான் பட்டமும் பொன் பதக்கமும் ஏதேஷ்டமான தனமும் கொடுத்து மேளவாத்யத்துடன் தவக்கேணி என்னும் தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தோம். கர்னாடக சங்கீதத்தில் அவர் வித்வான்களுக்கு ஓர் வள்ளலாய் விளங்கினார்கள். அவாளிடம் வந்து சன்மானம் பெறாத வித்வான்கள் ஒருவரும் இல்லை. மருங்காபுரி ஸ்ரீமதி ராணி அவர்களே நேரில் வந்து இந்த திருவிழாவில் கலந்து என்னை கௌரவப்படுத்தினார்கள் என்றால் என் அதிர்ஷ்டம்தான் என்னவென்று சொல்வேன்.

மைசூர் சமஸ்தானத்தில் நடந்த சம்பவம்.

நான் பெங்களூர் காயன சமாஜம் கச்சேரிக்கு போயிருந்தேன். அந்த சபை சிகரடரி T. சோமேஸ்வரய்யா, (Revenue Officer, Mysore State) நஞ்சன்கூடு போய்வரலாமென்றார். அந்தப்படி அவருடன் போன சமயம், மைசூரில் ஸ்ரீ T. G. ராமய்யர் (Mayor, Mysore) அவர்கள் தங்கள் வாத்யம் மகாராஜா கேழ்க்கவேண்டாமா? இறங்கிப்போங்கள் என்றார். அந்தப்படியே இறங்கி அவர் வீட்டில் ஒரு வாரம் இருந்தேன். மகாராஜா அவர்கள் வாசிக்க உத்திரவு செய்தார்கள். பௌர்ணமைதினம் வாசித்தேன். அன்று மகாராஜாவின் பரம உத்ஸாகத்தாலும் அவாள் கேட்ட அருமையாலும் வாசித்தேன். பூரி கல்யாணி, பிலஹரி இவ்விரண்டு ராகங்களைபற்றி கச்சேரி முடிந்ததும் பேசினார்கள். ரொம்பவும் நன்றாயிருப்பதுடன் அனேகவிதமான பாகங்களை ஒன்றுதிரட்டி ஓர் உருவமாய் செய்ததுடன் வில்லின் உதவி ரொம்பவும் லாகவமாய் வாசிக்கிறார் என்று சொல்லி மறுநாள் வாசிக்க உத்திரவானதுடன் பூரி கல்யாணி, பிலஹரி, ப்யாக்கும் வாசியுங்கள் என்று சொன்னார்கள். அந்தப்படி மறுதினம் நடந்தது. பூரி கல்யாணியும் பிலஹரியும் வாசித்தேன். சந்தோஷத்துடன் உங்களுடைய கல்ப்பனை சங்கீத பரவச பிரயோகங்களுக்கு அடங்கினதும், அதிச்யோக்தியாயும் பரம ருசியாய் இருந்தது, நான் என்றும் இந்த வாசிப்பை மறக்கமாட்டேன் என்று சொன்னார்கள். முதல் கிளாஸ் மரியாதை, சகல மரியாதைகளும் செய்து அனுப்பினார்கள்.

நான் மருங்காபுரி சமஸ்தானத்துக்கு உரியவனாக்கப்பட்டிருப்பதில் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்கிறேன். அஃதுடன் இல்லாமல் மற்ற சமஸ்தானங்களுக்கும், பொது மக்களுக்கும் ஈடுபட்டவனாகவும் தொடர்புடையவனாகவும் எனது ஆப்த நண்பர்களால் ஆகியுள்ளேன் என்பதையும் அடிக்கடி நன்றியுடன் மனதார நினைப்பதுண்டு என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

கோர்ட் ஆப் வார்ட்ஸ் மைனராக அதுகாலேயிருந்த பிக்ஷாண்டார்கோவில் B. C. ஆவுடையாப் பிள்ளையவர்களின் உயரிய நட்பினுல் ஷெயாருடைய உயரிய நண்பர்களாகி சமஸ்தானதிபதிகளுக்கும் பிர முகர்களுக்கும் நான் அறிமுகப்படுத்தப்பட்டேன். நானும் இந்த உயர்நிலைக்குவர நேர்ந்தது. அவர்களைக் கண்டுபோக அக்காலத்திய சங்கீத வித்வான்கள் எல்லாம் அடிக்கடி பிக்ஷாண்டார் கோவிலுக்கு ஸ்வக்ரஹம் போல் வந்துபோவார்கள். நல்ல சங்கீதத்தை அதன் நுட்பமறிந்து அநுபவித்து ஏற்றவாறு சன்மானம் செய்வதில் இவர்கள் மிகவும் வல்லவர். இவருடைய மருகனுகிய ராவ் சாஹிப் ஸ்ரீ ராஜகோபால் பிள்ளை அவர்களும் நாளைக்கும் அவ்விதமே சங்கீத வித்வான்களுக்கு ஆஸ்ரயமாயிருந்துகொண்டும், என்னையும் எப் போதும்பேரல் பெருமைப்படுத்திக்கொண்டுவருகிறதும் எனது பாக்கியமல்லவா ? இப்பொழுது நடந்த வைபவத்திற்கும் அவர் முக்கிய காரணஸ்தர் என்று நான் சொல்லவும் வேண்டுமா ?

இன்று இந்த வைபவங்களுக்கெல்லாம் காரண பூதமாக விளங்கி நம்முன் வீற்றிருக்கும் ஸ்ரீ சேத்தூர் சமஸ்தானுதிபதியவர்கள் மருங்காபுரிக்கும் பிக்ஷாண்டார் கோவிலுக்கும் நெருங்கிய நட்புரிமை யுடையவர்கள். அருமையான சங்கீத ஞானஸ்தர். ஸ்வயஞானத் திறமையும் வாய்ந்தவர்கள். சங்கீதத்தைப் போற்றி வளர்ப்பவர்களுள் மிக முக்யமானவர். அவர்கள் என்மீது இடையருத அன்பை என்றும் காட்டி வருகிறுர்கள் என்று உங்கள்முன் தெரிவித்துக்கொள்வதில் கௌரவமடைகிறேன்.

மற்றும் கமிட்டி ஆப் ஹோஸ்ட்ஸ் என்று கூட்டி இந்த வைபவங்களையெல்லாம் நடத்தியுதவிய எல்லா நண்பர்களுக்கும் மற்றும் இதர எனது எல்லா அன்பர்களுக்கும் கடமைப்பட்டிருக்கிறேன். முக்ய மாக நமது பேரன்பர் ஸ்ரீ திவான் பகதூர் K. S. ராமசாமி சாஸ்திரியார் அவர்கள் கேவலம் சங்கீத அபி மானத்தாலேயே தூண்டப்பட்டவராய் தன் தேக சிரமத்தையும் பாராட்டாது இங்கு விஜயஞ்செய்து எனக்கு நேரில் கௌரவித்ததற்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். சங்கீத உலகமும் ஒருவாறு கடமைப்பட்டிருக்கிறது என்றே சொல்லுவேன்.

வித்வான்கள் டைகர் வரதாச்சாரியார், பாபநாசம் சிவம், வேணுகானம் நாகருஜ ராவ் இவர்கள் கொஞ்சம் கூட தேக சிரமத்தை பார்க்காமல் வெகுதூரத்திலிருந்து வந்து என்னை கௌரவப்படுத்தினதில் நான் என்ன அவர்களுக்கு ப்ரதி செய்ய முடியும். மற்றும் வாழ்த்துச் செய்திகளையும் நல்லுரைகளையும் அன்புடன் அனுப்பிய எனது நண்பர்கள் எல்லோருக்கும் எனது மனமார்ந்த வந்தனம் உரியது.

இவ்வைபவங்கள் நடந்தேறுவதற்கு இடவசதி செய்து கொடுத்த கோயில் அதிகாரிகளுக்கு எனது வந்தனத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகையால் நண்பர்களே ! கலா ரசிகர்களாகிய உங்களுக்கு ஸ்ரீரெங்கநாதன் தீர்க்கஆயுளையும் நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் தந்து இகபர இன்பங்களைத் தரவல்ல சங்கீதத்தை நீங்கள் என்னுளும் போற்றி வளர்க்குமாறு அருளவேண்டும் என்று ஸ்ரீ தியாகபிர்ம்மத்தை மனம் மொழி மெய்களால் வணங்குகிறேன்.

M. G. Gopalakrishna Iyer.

ஸ்ரீமான் அய்யரவர்கள் கொஞ்ச நேரம் பிடில் வாசித்தார். சேத்தூர் ஜமீன்தார் தமது கலா ஞானத்தை சபையோர் முன்னிலையிலும் ஸ்ரீ ஸ்ரீரங்கநாச்சியார் சந்நிதியிலும் கெஞ்சிராவின் மூலம் வெளிப்படுத்தினர். பிறகு கூட்டம் இனிது கலைந்தது.

ERRATTA

Page	Line	For	Read
1	1		15–12–39 சில்ப ஸ்ரீயிலிருந்து பிரசுரிக்பட்டிருக்கிறது.
13		Vidwan Musiri Subramanya Iyer	Travancore Samasthana Vidwan before Vidwan Musiri Subramanya Iyer.
19	1	He is	His
,,	2	war blings	warblings
20	8	eminent Vidwans late Ramnad	eminent Vidwans like late Ramnad
,,	13	safeguard	safeguarded
22	16	ஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யரவர்களின்	ஸ்ரீ மருங்காபுரி கோபாலகிருஷ்ணய்யரவர்கள்
,,	2	contemprorary	contemporary
23	2	तस्मिन्दष्टे	तस्मिन्दष्टे
24	3 & 4	மத்ய காலம்	மத்யம காலம்
28	4	வெண்பா—புந்திக்குத்	புத்திக்குத்
,, Para 1,	4	பிரம்மஸ்ரீ பு. மகாலிங்க	பிரம்மஸ்ரீ Y. மகாலிங்க
,, ,,	5	பெரியதோரணையில்	பெரியதோரணையில்
,, Last line		சாரவிசாராம்	சாரவிசாரம்
31 4th para,	5	" be all and end all " existence	" be all and end all " of existence
32	1	Nishkamakarma	Nishkamyakarma
,,	3	instrumental muslc	instrumental music
32 Para 1,	1	போகிக்கப்பட்டும்	மோகிக்கப்பட்டும்
35 Para 1,	5	devoting	deviating
,, ,, 1,	2	musican	musician
86 Para 2,	3	ablities	abilities
37 Para 3,	11	Manpoondia Pillai	Mamoondia Pillai
38 Para 3,	9	rending	rendering
,, ,,	11	hand	handle
41 Para 1,	6	enaltation	exultation
,, ,, 2,	1	his	the
,, ,, 5,	3	Artiste	Artist
42 Para 2,	11	Devan	Dewan
,, ,, 5,	5	court of wards	Omit—court of wards
,, ,, 4,	1	Thourough	thoroughly
,, ,, 4,	4	decided	dedicated
43 Para 1,	3	Mr. M. Gopalakrishna Iyer	M. G. Gopalakrishna Iyer

Rathna Photo Studio
High Class Photographers
TRICHINOPOLY.